# காலிங்கராயன் கால்வாய்

T08409
R003A07

செ. இராசு

# காலிங்கராயன் கால்வாய்

ஆசிரியர்
புலவர் செ. இராசு எம். ஏ.,
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் 613 005

வெளியீடுவோர் :
கொங்கு ஆய்வு மையம்
5, என். ஜி. ஓ. காலனி
ஈரோடு 638009

முதல் பதிப்பு : 8-7-1987

விலை : ரூபாய் 10-00

நூல் கிடைக்குமிடம் :

கௌரிராசு
சி 1. தமிழ்ப் பல்கலைக் கழகக் குடியிருப்பு
தஞ்சாவூர் 613 005

வாணி நூலகம்
211 ஏ, கச்சேரி ரோடு
ஈரோடு 638 001

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 14.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நாடும் நகரமும் | ... 9 |
| 2. | பட்டமும் பதவியும் | ... 18 |
| 3. | பெயரும் பெருமையும் | ... 26 |
| 4. | அணையும் கால்வாயும் | ... 35 |
| 5. | அண்ணலும் அறப்பணிகளும் | ... 54 |
| 6. | தெய்வமாகக் கொள்ளல் | ... 61 |
| 7. | புலவர் பாடிய புகழ் | ... 70 |
| 8. | வெளி நாட்டார் குறிப்புக்கள் | ... 81 |
| 9. | வாழையடி வாழை | ... 91 |
| 10. | நிருவாகம் அன்றும் இன்றும் | ... 105 |
| 11. | காலிங்கராயன் கரையில் | ... 114 |


## பிற்சேர்க்கை


| | | |
|---|---|---|
| 1 | காலிங்கராயன் கல்வெட்டுக்கள் | ... 119 |
| 2. | காலிங்கராயன் அணை கட்டின பட்டயம் | ... 125 |
| 3. | காலிங்கராயன் கைபீது | ... 129 |
| 4. | கும்பினிக் கடிதம் | ... 146 |

# ஒரு கனவு நனவாகியது !

கல்லும் கதைசொல்லும் என்பார்கள்; இங்கே கால்வாய் கதை சொல்லுகிறது. கதை என்றால் கற்பனையா? இல்லை; அவை அவ்வளவும் வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகும்.

வெள்ளோடு உலகபுரம்கரை வெள்ளமுத்துக் கவுண்டனின் வலசில் 'மேட்டாங்காட்டில்' பிறந்து, திருப்பூர் கருவம் பாளையத்தில் இளமையில் வளர்ந்த நான் தொலைவில் உள்ள நன்செய் வளம் கொழிக்கும் காலிங்கராயன் கால்வாய்மீது காதல் கொண்டதே ஒரு கதைதான்!

என் தாயார் திருமதி நல்லம்மாள் சென்னிமலைக் கவுண்டர் காலிங்கராயன் கால்வாயின் உரிமை ஊர்களில் ஒன்றான சாமிநாதபுரம் 'மேக்கால்' வீட்டைச் சேர்ந்தவர் கள்; அத் தொடர்பும் ஒரு காரணமாக இருக்கலாம்.

என் மாமா, அத்தை, அக்கா ஆகியோர் காலிங்கராயன் கால்வாயின் மடியில் தவழும் சாவடிப் பாளையம் புதூரில் உள்ளனர்.

சாவடிப்பாளையம் புதூர் சென்று காலிங்கராயன் கரையில் மாமாவின் தோட்டத்து மாமரத்தில் மாங்காய் பறிக்கும்போதும், அத்தை வீட்டாரோடு நட்டாற்றீசுவரன் கோயில் செல்லும்போதும் என் மாமாமார்களான சொங்கப்பன், குமாரசாமி, எஸ். பி. கந்தசாமி ஆகியோர் என்னிடம் இளமையில் கூறியவை:

> 'இதோ! இந்தக் காலிங்கராயன் கால்வாய் உங்கள் பங்காளி வெட்டியது; இதன் தண்ணீரை நீங்கள் குடிக்கக் கூடாது. இக் கால்வாயில் விளையும் நெல்லைக் கூடச் சாப்பிடக் கூடாது'

என்ற தொடர்கள்! இளமையில் கால்வாய்க் கரையில் எனக்கு அறிவுறுத்தப்பட்ட இச் சொற்களே இவ்வரலாறு உருவாவதற்கு விதையாகியது எனலாம்.

ஞானிபாளையத்தில் நான்காம் வகுப்பை முடித்து ஈரோட்டில் மூத்த சகோதரியார் திருமதி மீனாட்சி சுப்பராயன் அவர்கள் வீட்டிலிருந்து 'போர்டிங்' பள்ளிக் கூடம் என அழைக்கப்பட்ட லண்டன் மிஷன் சமுதாய நடுநிலைப் பள்ளியிலும், செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியிலும் படிக்கும்போது ஈரோடு வாட்டர் ஓர்க்சிலும், காரை வாய்க்கால் மைதானத்திலும் சக மாணவர்களோடு காலிங்கராயன் கரையில் விளையாடும்போது மீண்டும் காலிங்கராயன் தொடர்பு எனக்கு ஏற்பட்டது.

1959 இல் ஈரோட்டில் ஆசிரியப் பணியுடன் ஆராய்ச்சிப் பணியும் தொடங்கியது. முதல் ஆய்வு காலிங்கராயன் பற்றியதுதான். அமரர் என் குருநாதர் எழுமாத்தூர் வேலம்பாளையம் பெரும்புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் ஆய்வை ஆசி கூறித் தொடங்கி வைத்தார்கள்.

பழைய நூலகங்கள், ஆவணக் காப்பகம், சுவடி நூலகம், புலவர் இல்லங்கள், கோயில்கள், செவிவழிச் செய்திகள், பெரியவர்களுடன் உரையாடல் மூலம் பல செய்திகள் கிடைத்தன. புலவர்கள் வெ.க. பச்சையப்பன், இரா. சி. சென்னியப்பன் ஆய்வில் உடன் வந்து உதவினர்.

1963ல் குமாரபாளையம் அரசினர் பயிற்சிக் கல்லூரி மலரில் 'காலிங்கராயன் கால்வாய்' என்ற முதல் கட்டுரையை எழுதினேன். பலர் பாராட்டினர். நூல் வடிவாக்கத் தூண்டினர்.

1966இல் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கிலும், 1967ல் வெளிவந்த 'எங்கள் பவானி' என்னும் நூலிலும், 'கொங்குமலர்' 'கொங்கு நண்பன்' 'கொங்கு' ஆகிய இதழ்களிலும், ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவை, சுழற்குழு,

ஆசிரியர் மையம் போன்ற இடங்களிலும் விரிவாகப் பல கோணங்களில் காலிங்கராயன் கால்வாய் பற்றி எழுதும், பேசும் வாய்ப்புக் கிடைத்தது. என்றாவது இவ்வரலாறு விரிவான நூல் வடிவம் பெறவேண்டும் என அந்நாளில் பலர் விரும்பினர்.

மக்களிடையே கால்வாய் வரலாறு மெல்ல மெல்லப் பரவத் தொடங்கியது. அமரர் வி. எம். கைலாசக் கவுண்டர் அவர்கள் பல இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்ய வசதி செய்து தந்தார்கள். டாக்டர் எல். கே. முத்துசாமி, பொள்ளாச்சி பாராளுமன்றத் தேர்தலில் திரு. மோகன்ராஜ் காலிங்கராயர் போட்டியிட்டபோது நான் எழுதிய சிறு நூலை 25000 பிரதிகள் வெளியிட்ட மு. சின்னசாமி, சி. துரைசாமி போன்றவர்கள் இவ்வரலாறு நூல்வடிவம் பெற விரும்பினர். என்பால் அன்பு கொண்டு உரையாடும்போது கருப்பண கவுண்டர், எஸ். ஆர் .பி. ராஜப்பா, செங்கோட கவுண்டர், ஏ.பி. சின்னசாமி, டாக்டர் பொ. இளங்கோ போன்ற சாத்தந்தை குலப் பெருமக்கள் 'நூல் எழுதுக' என்று தூண்டினர். நூல் வடிவம் பெற்று வெளி வரும்போது இப்பெருமக்கள் இன்று இல்லையே என்று ஏங்குகின்றேன். அப்பெருமக்கள் ஆசிதான் என் கனவு நனவாகியதற்குக் காரணமாகும்.

சித்தோடு திரு. குமார நடவரச ஈவப்பனார் அவர்கள் பல்லாண்டுகள் முன்பே வரலாறு நூல் வடிவம் பெற விரும்பி னார். பாலமடை அம்மன் கோயில் திருப்பணி செய்த திரு யு. ஆர். சின்னசாமிக் கவுண்டர், டாக்டர் நல்லசாமி, டாக்டர் நடராசன் போன்றவர்கள் இம் முயற்சியை வரவேற்றனர்.

திரு கே. ஆர். நல்லசிவம், எழுமாத்தூர் சென்னியப்பன், சிவகிரி பழனிசாமி ஆகியோர் கொங்கு விவசாயிகள் அனைவரும் ஆதரிக்க வேண்டிய அரிய முயற்சி என்று பாராட்டுரைத்தனர்.

சீர்மிகு காலிங்கராயர் வழித்தோன்றலாகத் தோன்றிய ஊத்துக்குளி ஜமீன்தார் நற்பண்புகளின் நாயகர் அன்புருவாகிய அமரர் திருமிகு அகத்தூர் முத்துராமசாமிக் காலிங்கராயர் அவர்களால் இந்த வரலாறு பாராட்டப் பெறும் பேறு பெற்றது. அவர்களின் அன்புத்துணைவியார் ஊத்துக்குளி ஜமீன்தாரினி அருள் உருவாகிய அன்பு அன்னை திருமதி ருக்மணி காலிங்கராயர் அவர்களும், அவர்கள் மக்களும் இந்நூல் வெளிவர நல்லூக்கம் அளித்து உதவி செய்தனர்.

காலிங்கராயன் கால்வாய் வரலாற்று நூலை வெள்ளோடு இராசாக்கோயில் குடமுழுக்கு விழாவில் வெளியிடக் குழுவினர் அன்புடன் அனுமதி அளித்தனர்.

நூல் நன்கு வெளிவர திருவாளர்கள் ஓ.எஸ். ரங்கசாமிக் கவுண்டர், கே.சி. சுப்பையா, கே. சண்முக ராமசாமிக் கவுண்டர், எஸ்.கே. கிருஷ்ணசாமி சகோதரர்கள், பி. சுப்பிரமணியம், அய்யாசாமிக் கவுண்டர் ஆகியோர் அரிய ஆலோசனைகளை வழங்கினர். தென்முகம் வெள்ளோடு உலகபுரம், கனகபுரம், தேவணம் பாளையம் கரைப் பெருமக்கள் வரலாற்று நூல் வெளிவருவதில் மிகவும் ஆர்வம் காட்டினர்.

கலைமகள் அருங்காட்சியகப் பட்டயங்கள் சிலவற்றைப் பார்வையிட கலைமகள் நிருவாகி செல்வி முத்தையா அவர்கள் அனுமதியளித்தார்கள்.

பேராசிரியர் முனைவர் எ. சுப்பராயலு கே. ராஜன் ஆகியோர் அரிய ஆலோசனைகளை வழங்கினர்.

இந்நூலை வெளியிடத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமிகு ச. அகத்தியலிங்கம் அவர்கள் அன்புடன் அனுமதி அளித்தார்கள்.

இந்நூலை விரைவில் அச்சிட எல்லா ஏற்பாடுகளையும் விரைந்து செய்து உதவியவர்கள் சென்னை மாருதி அச்சக

உரிமையாளர்கள் திருவாளர்கள் வி. ஸ்ரீதர், வி. பார்த்திபன் ஆகியோர். ஓவியர் ஆனந்தன் உரிய காலத்தில் உதவிகள் புரிந்தார்.

மேற்குறிப்பிட்ட அனைவருக்கும், இன்னும் இந்த வரலாறு தொடர்பாக உதவிபுரிந்த அத்துணைப் பெரு மக்களுக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கொங்கு ஆய்வு மையம் மூலம் கொங்கு நாடு பற்றிய பல நூல்கள் வெளிக்கொணரவும், கொங்குக் கலைக்களஞ் சியம் தயாரிக்கவும் எண்ணம் உள்ளது. கொங்கு நாட்டு வள்ளல்கள், பெருமக்கள், பொதுமக்கள் என் வரலாற்று முயற்சிகளை ஆதரிப்பார்களாக!

தஞ்சாவூர்
30-6-87

அன்பன்,
**செ. இராசு**

# நாடும் நகரமும்

தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டிய நாடுகளுடன் தொண்டைநாடும் கொங்கு நாடும் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்று கருதும் வழக்கம் முன்பு இருந்தது. இதனைப் பண்டைய இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. 'வியன் தமிழ் நாடு ஐந்து' என்று தண்டியலங்காரமும், 'தமிழ் மண்டிலம் ஐந்து' என்று திருமந்திரமும் கூறுகின்றன.

சங்க காலத்தில் கொங்கு நாடு தனி நாடாகக் கருதப் பட்டது. கொங்கு நாட்டின் வரலாறு, நாகரிகம், கலை, பண்பாடு, பழக்க வழக்கம் பிற சிறப்புக்கள் ஆகியவை தனிப்பட்டவை. கொங்கு நாட்டு மக்கள் கொங்கர் எனப் பட்டனர்.

இக்கொங்கு நாடு மேல் கொங்கு, வட கொங்கு, தென் கொங்கு, மழ கொங்கம் (காவிரி யாற்றுக்குக் கிழக்கே உள்ள பகுதிகள்) எனப் பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்கியது.

நிருவாக வசதிக்காக இக்கொங்கு நாட்டை 24 நாடு களாகப் பிரித்தனர். பிற்காலத்தில் 24 நாடுகளிலும் சில உள் நாடுகள் இணை நாடுகள் பிரிந்து கொங்கு நாடு 42 நாடுகள் ஆயிற்றென வரலாறு கூறுகிறது.

வரலாற்றுப் புகழ் பெற்ற காலிங்கராயன் கால்வாய் பெரும்பகுதி மேல்கரைப் பூந்துறை நாட்டிலும், சிறுபகுதி மேல்கரை அரைய நாட்டிலும் பாய்கிறது. காலிங்கராயன் அணைகட்டிக் கால்வாய் வெட்டிய வள்ளல் காலிங்கராயன் பிறந்த நாடு, ஊர் இவைகளின் சிறப்பை ஒருசிறிது காணலாம்.

## பூந்துறை நாடு

புகழ் தங்கும் பூந்துறைநாடு கொங்கின் 24 நாடுகளிலே முதன்மையான சில நாடுகளில் ஒன்று. கிழக்கே காவிரியாறு, தெற்கே காஞ்சி எனப்படும் நொய்யலாறு, மேற்கே சென்னிமலை, வடக்கே வானி எனப்படும் பவானியாறு இவ்வெல்லைகட்குட்பட்ட 32 பழம் பெரும் ஊர்களைத் தன்னகத்தே கொண்டது பூந்துறை நாடு. காவிரிக்கு மேற்கேயுள்ள காரணத்தால் இந்நாடு 'மேல்கரைப் பூந்துறை நாடு' என்றும் பெயர் பெற்றது.

'உன்னிய தெற்கில் காஞ்சி
உயர்நதி வடக்கு வானி
பொன்னிமா நதியே கீழ்பால்
புகன்றிடும் மேற்குத் திக்கில்
சென்னிமா மலையே யாகும்
சிறக்கமுப் பத்தி ரண்டூர்
மின்னுமேல் கரையாய்க் கொண்டு
விளங்குபூந் துறைநன் னாடு'

என்பது பூந்துறை நாட்டின் எல்லைகளைக் கூறும் பூந்துறைப் புராணப் பாடலாகும்.

## நாட்டுச் சிறப்பு

அடியார்களுக்காக இந்நாட்டில் பொன்மாரி, பூமாரி பெய்தது என்பர். திருமலை நாயக்கனின் அரசியல் அதிகாரியாகிய இராமப்பையனைத் தலைவனாக ஏற்றுக் கொண்டு சங்ககிரியில் முடிசூட்டியவர்கள் பூந்துறை நாட்டினரே! சேரமான் பெருமாள் நாயனார் பூந்துறை நாட்டுக்கு வந்து ஓர் இளைஞனைத் தேர்ந்தெடுத்து அழைத்துக் கொண்டு சென்று முடிசூட்டிய பின்னரே கயிலை சென்றார் என்பது பூந்துறைத் தலபுராணத்திற் காணப் படும் செய்தியாகும். இக்கருத்தைக் கேரள தேச வரலாறும், சோழன் பூர்வபட்டயமும் ஆதரிக்கின்றன. இந்நாட்டின்

தலைநகரமாகிய பூந்துறை தேவார வைப்புத் தலமாகும். நாலாறு நாட்டில் மேலான பூந்துறை என்பர் புலவர். இந்நாட்டின் தலைமைத் தலம் சீர் மிகுந்த சென்னிமலையாகும்.

## நாட்டுவளம்

காவிரி, பவானியாகிய பேராறுகளாலும், நொய்யல், அனுமநதி போன்ற சிற்றாறுகளாலும் எண்ணற்ற குளங்களாலும் குன்றாவளமும் குறையா நலமும் பெற்றுத் திகழுவது பூந்துறைநாடு. புளி, மா, அரசு, தென்னை, கமுகு, வாழை, பலா முதலிய மரங்களில் பூத்துக் குலுங்கும் பூங்கொத்துக்களிலிருந்து பொங்கிப் பெருகும் தேன் வளமுடை வயல்களிற் பாய்ந்து பூந்துறை நாட்டில் நெல் விளைகிறது என்று எழிலுறக் கவிதை வடிக்கின்றார் 'சரவணையா' என்ற புலவர் தன் மேழிவிளக்கம் என்ற நூலிலே!

'திந்திருணி மாவரசு தேங்கமுகு வாழைபலா
வந்துகுலை சாய்ந்து மடல்விரிந்து—சிந்தினதால்
வாய்ந்தரச மொடுபெருகி வயலதனிற் செந்நெல்விளை
பூந்துறை செய்நாடு'

என்பது அவர் கனிக்கவிதையின் இனிப்பு வரிகள்.

வறட்சி மிக்க காடுகளில் எல்லாம் சுவை மிகுந்த உணவு படைத்துண்பதற்குக் காரணமாக இருக்கின்ற சிறு செந்நெல் விளைகிறது. அங்குச் செந்தாமரை செங்கதிரோனைத் தேடி நின்று வாடுவதில்லை. தாமரையின் கேள்வனாம் தங்கப் பரிதியோனே அம்மங்கையை நாடி வருகின்றான்; கூடி மகிழ்விக்கின்றான். நீர்வளம் மிகுதியாக இருப்பதன் காரணமாக நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வெண்மையான முத்துக்கள் தோன்றுகின்றன. பொய்கைக் கோதையாம் அல்லியைப் பொங்கிவரும் பெருநிலவோன் தன் ஒளிக்கைகளால் அள்ளியணைக்கின்றான்! நாட்டிலெங்கும் ஈவோர் இருந்தும் இரப்போர் இல்லை, ஏன்? எல்லா வீடு

களிலும் திருமகள் விளையாடுகின்றாள். நால்வேதங்களை யும் ஐந்து காப்பியங்களையும் பதினெண் புராணங்களையும் மக்கள் விரும்பிப் பயிலுகின்றனர். அந்நாட்டில் பாடப் படுகின்ற பழக்குலைப் பசும்பாட்டுக்கள் செவியில் அமுதைப் பாய்ச்சுகின்றன. இச்செயல்கள் நடப்பதெல்லாம் எந்த நாட்டில்? பூந்துறை நாட்டில்தான் என்று கூறுகின்றார் ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு நாடக நூலாசிரியர்.

"காடெல் லாம்சிறு செந்நெல் விளையும்
கதிரவன் வந்து கமலங்கள் சேரும்
நாடெல் லாம்வெண் தரளம் கொழிக்கும்
நல்ல அல்லியில் வெண்மதி சேரும்
வீடெல் லாம்திரு மின்விளை யாடும்
வேத காவிய புராணங்கள் ஓதும்
பாடல் லாம்பைந் தமிழதை ஆக்கும்
மன்னு பூந்துறை நாடெங்கள் நாடே"

என்பது அப்பாடலாகும். இன்னும் பூந்துறை நாட்டின் பொன்றா வளத்தைப் பற்றிக் கிழான்பாடி பாம்பண்ண கவுண்டன் குறவஞ்சி, பூந்துறைப் புராணம், சென்னிமலைப் புராணம், நல்லண்ணன் காதல் போன்ற இலக்கியங்களும் பல தனிப்பாடல்களும் புகழ்கின்றன.

காலிங்கராயனாம் சிறப்புடைச் செம்மலைப் பெற்ற தால் பெரும்புகழ் பெற்ற வெள்ளாடு இப்பூந்துறை நாட்டில் உள்ள ஊர்கள் முப்பத்திரெண்டனுள் ஒன்று.

இதுவே பூந்துறை நாட்டின் இரண்டாவது தலைநகர மாகவும் காலிங்கராயன் வீற்றிருந்த கோ நகரமாகவும் விளங்கிய சிறப்பினை உடையது. காலிங்கராயனைப் 'பூந்துறை நாட்டுக்கு நாட்டான்' என்று குறிப்பிடும் 'வமிசாவளி' அவனை 'வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரன்' என்றும் பல இடங்களில் குறிக்கின்றது. பூந்துறை நாட்டுச் சபை இவ்வூரில் பலமுறை கூடியதாகக் கல்வெட்டு மூலமாக அறிகின்றோம்.

காணிப்பாடலும் பூந்துறைப் புராணமும் சென்னிமலை யாண்டவர் பிள்ளைத் தமிழும் வெள்ளோட்டை நகரம் என்றே குறிக்கின்றன.

'நற்கா விரிக்குமேல் கரைதனில் பூந்துறைசை
நளிர்கொண்ட வெள்ளோடையூர்
நசையனூர் எழுமாதை எனுமுயர் புகழ்பெரிய
நகரமொடு நான்கதாக'

என்பது சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழில் வரும் சிறுதேர்ப் பருவப் பாடல்பகுதியாகும்.

காலிங்கராயன் காலத்திற்குப் பின்னர் இவ்வூர் காலிங்கராய வெள்ளோடு என்று குறிப்பிடப் பெறுவதால் காலிங்கராயனால் இவ்வூர் பெற்ற பெருமையை நன்கறியலாம்.

கொங்கு நாட்டில் பல பகுதிகளில் நடைபெற்ற சிறந்த அறச்செயல்களில் வெள்ளோட்டில் வாழ்ந்த பெருமக்கள் சாட்சிக் கையொப்பமிட்டிருப்பதைச் சாசனங்கள் வாயிலாகவும், பட்டயங்கள் வாயிலாகவும் அறிகின்றோம்.

## 32 ஊர்களில் வெள்ளோடு ஒன்று

'பூந்துறை வெள்ளோடு நசியனூர் எழுமாதை
புகழ்சேர் பிடாரிநகரம்
பூங்கமமும் ஈங்கியூர் பெருந்துறை சாத்தனூர்
பொன்காளமங்கலம் அதும்
ஆய்ந்த தமிழ்கூறும் குழாநிலை கிழாம்பாடி
ஆண்மைகொள் முடக்குறிச்சி
அனுமநகர் பழமங்கை குலவிளக் குக்காகம்
அறச்சலூர் விளக்கேத்தியும்
வேந்தர்மகிழ் ஈஞ்சநகர் சத்திமங் கலமதும்
மிக்கசே மூர்மங்கலம்
வீரநகர் ஈரோடு பேரோடு சித்தோடு
மிக்கான திண்டல்புதூர்

சேர்ந்துமழை பெய்திடும் இலவமலை திருவாச்சி
திகழ்பனசை ஓடாநிலை
தென்முருங் கைத்தொழுவு முப்பத்தி ரண்டூர்
சிறந்தபூந் துறைசைநாடே'

இவ்விசைநலன் கனிந்த பாட்டு பூந்துறை நாட்டின் கண்ணமைந்த ஒப்பில்லாத முப்பத்திரண்டு ஊர்ப்பெயர் களையும் எடுத்துரைக்கின்றது.

## வெள்ளோட்டின் பெயர்க்காரணம்

கொங்கு நாட்டின் பழமையான ஊர்களுக்கெல்லாம் எவையேனும் காரணங்கள் கருதியே பெயர்கள் வைக்கப் பட்டன. பிற்காலத்தில் அவ்வூர்களின் பெயர்கள் மாறிப் பல்வேறு வடிவங்களை அடைந்தன. அவற்றின் உண்மைக் காரணங்கள் தெரியாமல் மறைந்தன. குளிர் தண்டலை—குளித்தலை ஆனதும், பொழில் வாய்ச்சி—பொள்ளாச்சி ஆனதும் இராசராசபுரம் தாராபுரம் ஆனதும் இதற்கு நல்ல சான்றுகளாகும்.

வெள்ளோடு என்னும் சிற்றூர் ஈரோட்டின் தென் மேற்கில் ஈரோட்டிலிருந்து சென்னிமலை செல்லும் வழியில் 14 கிலோ மீட்டரில் உள்ள ஊராகும். இவ்வூரில் பல செந்தமிழ்ப் புலவர்களும் அரசியல் தலைவர்களும் வள்ளல் களும் தோன்றி வாழ்ந்து ஊருக்குச் சிறப்புண்டாக்கினர். நமது தலைவன் காலிங்கராயன் பிறந்து வளர்ந்ததும் இவ்வூரில் அருகில் விளங்கும் கனகபுரத்தில்தான். புராணக் கதைகளோடு இணைத்து இவ்வூரின் பெயருக்குப் பல காரணங்கள் கூறுவர். காளியண்ணப் புலவர் மிகச் சுவை யான முறையில் வெள்ளோட்டின் பெயர்க்காரணத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

"தேவர்கள் அனைவரும் கொங்கு மண்டலத்தில் பூந்துறை நாடு புகுந்து இறைவனை வணங்க ஏற்ற இடம் எது என்று ஆராய்ந்தனர். அவர்கட்கு முன்னே திருமாலு

டைய் யானை வழிபட இடந்தேடிச் சென்றது. அந்த யானை வெள்ளோடு இருக்குமிடம் வந்தவுடன் நின்றது. தேவர்கள், இறைவனை வணங்கத் தகுந்த இடம் கண்டோம் என்று ஆரவாரித்தனர். நால்வேதங்கள் முழங்க அங்குச் சர்வலிங்க நாயகராய் இறைவன் இருக்கக் கண்டனர். அந்த யானை தன்னுடைய தந்தங்களாலும் கால்களாலும் நிலத்தைத் தோண்ட அங்கு வெண்மணல் இருக்கவும் பால் நிறம் போன்ற ஓடை ஒன்றிருப்பதைக் கண்டனர். அதனைத் தீர்த்தமாக வைத்துத் தேவர்கள் இறைவனை வழிபட்டேகினர். அவ்வோடைக்கு வெள்ளோடை என்று பெயர் ஏற்பட்டது. பின்னர் அப் பெயர் வெள்ளோடு என்று மாறிற்று.

"மேல்பாலில் வாசவன்தன் கரியொன் றேகி
விளங்குமதம் பொழிந்துநிழல் சுழித்து விம்மிக்
காலாலும் கோட்டாலும் நிலத்தைக் கீண்ட
கண்டதுநீர் வெள்ளோடை கமழ்பால் ஓடை"

என்பது அப்பாடல் பகுதியாகும்.

## கோயில்கள்

வெள்ளோட்டின் பெருமையையும் வரலாற்றுப் பழமை யையும் எடுத்துக் காட்டுவதற்கு இன்றும் அங்குள்ள கோயில்களே சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

வெள்ளோட்டின் வடக்கே வயல்களிடையில் பாழடைந்த சிறுகோயில் ஒன்றுள்ளது. அது சமண சமயத்தைச் சேர்ந்த ஆதிநாதர் கோயிலாகும். கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டு வரையில் கொங்கு நாட்டில் ஈரோடு வட்டாரத்தின் பல இடங்களில் (விசயமங்கலம், திங்களூர், சீனாபுரம், வெள்ளோடு, பூந்துறை) சமண சமயத் தவர் வாழ்ந்தனர். இவ்வூர்களிலெல்லாம் சமண சமய ஆலயங்கள் இன்றும் இருக்கின்றன.

இங்குள்ள சிவாலயத்தில் வீற்றிருந்தருள் புரிபவர் சர்வலிங்கேசுவரன் அம்மன்—பாடகவல்லி அம்மன். காலிங்கராயனுடைய வழிபடு கடவுள் இந்த ஈசுவரனே!

இங்குள்ள பெருமாளுக்கு ஆதிநாராயணப் பெருமாள் என்பது திருநாமம். பிற கோயில்கள் நஞ்சுண்ட ஈசுவரன் கோயில், சுப்பிரமணியர் கோயில், அண்ணன்மார் கோயில், இராசாக் கோயில், பொன்காளி அம்மன் கோயில், அயத்தாள் அம்மன் கோயில், ஆயி அம்மன் கோயில், மாகாளியம்மன் கோயில், மாரியம்மன் கோயில் இவை களாகும்.

## கல்வெட்டுக்கள்

இவ்வூரில் சர்வலிங்கேசுவரன் ஆலயம், இராசாக் கோயில், பொன்காளியம்மன் கோயில், மாரியம்மன் கோயில், அண்ணன்மார் கோயில் ஆகிய கோயில்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவ்வூர்க் கல்வெட்டுக் களில் சருவலிங்கர் கோயில் கல்வெட்டுக்களைச் சாசன இலாகாவினர் படி எடுத்துள்ளனர். இக்கோயிலில் மட்டும் ஒன்பது கல்வெட்டுக்கள் இருக்கின்றன. வீரபாண்டியன் காலக் கல்வெட்டுக்கள் மூன்றும் விசயநகர அரசர் காலக் கல்வெட்டுக்கள் நான்கும் காலம் குறிப்பிடப்பெறாமல் உள்ள பாடல் சாசனங்கள் இரண்டும் இருக்கின்றன.

## இலக்கியங்கள்

இவ்வூரைப்பற்றி உள்ள தனிப்பாடல்களேயன்றிக் காணிப்பாடல்களும் ஊர்த்தொகைப் பாடலும் இவ்வூரின் புகழ்பாடும். கொன்றை வேந்தன் வெண்பா இவ்வூரைப் பற்றியதே! இவ்வூரில் உள்ள சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள பாடகவல்லியம்மன்மீது பிள்ளைத்தமிழ் ஒன்றுண்டு. சிவா லயக் கல்வெட்டிலிருந்து 'அழைப்பிச்சான் பாட்டுக் கலம்பகம்' என்ற நூலொன்று இருந்ததாக அறிகின்றோம்.

வெள்ளோட்டில் வாழ்ந்த தெள்ளுதமிழ்ப் பாவலர் குந்தாணி சுவாமிநாதக் கவிராயர்தான் 'சென்னிமலை யாண்டவர் பிள்ளைத்தமிழ்', 'நல்லண்ணன் காதல்' போன்ற நூல்களைப் பாடியவர். 'வாலசுப்பப்புலவன்' என்பவர் ஒருவர் இங்கு வாழ்ந்ததாகக் கொங்கு மண்டல சதகம் மூலமாக அறிகின்றோம். இவ்வூரருகே புலவர் பாளையம் என்ற ஊர் ஒன்றுள்ளது. இராசாக்கள் அம்மானை, பாடகவல்லி பதிகம், குப்பணன் நீதிச்சதகம் என்பன இங்கே பாடப்பட்ட நூல்களாகும்.

## தலைவர்கள்

வெள்ளோட்டில் சாத்தந்தை குலத்தில் நஞ்சையன், காலிங்கராயன், காசிலிங்கக் கவுண்டர், கொழந்தவேல் கவுண்டர், முத்தித்திருமலைக் கவுண்டர், ராசாக்கவுண்டர், நல்லண கவுண்டர், முதலியாக் கவுண்டர், பயிரகுலத்தில் குப்பண கவுண்டர், பழனிக் கவுண்டர் போன்ற பல வள்ளல்கள் வாழ்ந்து ஆலயத்திருப்பணி செய்தும் அருந்தமிழ் வளர்த்தும் புலவர்களைப் பேணியும் பணிகள் பல புரிந் துள்ளனர்.

# பட்டமும் பதவியும்

## இளமைக் காலம்

காலிங்கராயனின் இயற்பெயரைப்பற்றியும் இளமைப் பருவத்தைப்பற்றியும் விரிவாக அறியக் குறிப்புக்கள் எவை யும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. 'இந்தியாவின் ஆளும் தலைவர்களும் பெருமக்களும் நிலக்கிழார்களும்' என்னும் ஆங்கில வரலாற்று நூல் அவரைச் 'சாத்தந்தை காலிங்கராயர்' என்று குறிப்பிடுகிறது. 'சாத்தந்தை, என்ற குலப்பெயருடன் அவர் பெயர் இணைந்து வழங்கப் பெற்றமை தெரிகிறது. அண்மையில் கிடைத்த ஓலைப் பட்டயம் ஒன்றின்மூலம் காலிங்கராயனின் தந்தை பெயர் நஞ்சயன் என்றும் காலிங்கராயனின் இயற்பெயர் லிங்கய்யன் என்றும் தெரிகிறது.

> "தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்வர பாடகவல்லி நாச்சியார் தேவஸ்தானம் ஜீரணோத் தாரணம் பண்ணிக்கொண்டு இருந்தான்"

என்று 'வமிசாவளி' கூறுவதால் சிறந்த சிவபக்தன் என்றும் வெள்ளோடு சர்வலிங்கேசுவரரை வழிபடு தெய்வமாக வழிபட்டு வந்தார் என்றும் தனியாகக் கோயில் திருப்பணி செய்யும் அளவிற்கு மிகுந்த செல்வமுடையவர் என்றும் அறிகின்றோம். வைணவக் கோயில்கள் பலவற்றிற்கும் அவர் திருப்பணி செய்திருப்பதால் சமரச நோக்குடையவர் என்பதனையும் அறிகின்றோம். வமிசாவளிமூலம் காலிங்க ராயனுக்கு ஒரு மகன் இருந்ததாகவும் பண்ணை குலத் தினரை மாமன் முறையாகக் கொண்டு வாழ்ந்தவர் என்றும் அறிகிறோம். மாமன் வீடு கொடுமுடிப் பகுதியில் இருந்த தாகக் கூறுவர்.

சோர்வில்லாத முயற்சியும் அயராத உழைப்பும் அனைவர்மீதும் பற்றிப் படரும் அன்பும் தடைக்கு அஞ்சாத ஆற்றலும் கொண்டு விளங்கியவர் காலிங்கராயர் என்று அவர் வாழ்க்கைக் குறிப்புக்கள் மூலம் தெரிகிறது.

இவர் கற்பவை கசடறக் கற்றவர். செல்வத்துட் செல்வமாம் செவிச் செல்வமும் சிறக்கப் பெற்றவர். வெள்ளோட்டுக்காரர்களும் பூந்துறை நாட்டவர் அனைவரும் கொங்கு நாட்டவர் எல்லோரும் காலிங்கராயன் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தனர்.

காலிங்கராயர் வடமொழி, தமிழ் இரண்டிலும் பெரும் புலமை படைத்திருந்தார் என்றும், திருக்குறளுக்கு உரை இயற்றிய 10 தொன்மையான புலவர்களில் காலிங்கர் என்பவர் நமது காலிங்கராயரே என்றும், புருஷசூக்தமாலா என்னும் வடமொழி நூலுக்குத் தமிழில் விரிவுரை கண்டார் என்றும் கரூர்ப் பெரும்புலவர் அ. கணபதி ஐயா அவர்கள் ஒரு கட்டுரையில் கூறியுள்ளார்கள். காலிங்கராயர் பற்றிய தனிப்பாடல் ஒன்றில் 'கற்ற அறிவினன்' என்று குறிக்கப் பெறுவதால் கணபதி ஐயா கூறுவது உண்மையாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

காவிரியை ஒட்டியுள்ள மேடு பள்ளமான இடத்தில் மிகுந்த பொறியியல் திறத்துடன் நிலத்தை நன்கு அளந்து திட்டமிட்டு ஆராய்ந்து கால்வாயை வெட்டியுள்ளார். கணிதம், பூகோளம் போன்ற கலைகளில் காலிங்கராயன் மிகவும் வல்லவராகத் திகழ்ந்திருக்க வேண்டும். பொறியியல் கலையில் மிகவும் மேலோங்கிய ஆற்றலையும் அறிவையும் காலிங்கராயர் பெற்றிருக்க வேண்டும்.

### பிறந்த ஊர்

'பூந்துறை நாட்டுக்கு நாட்டானாய் வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரன்' என்று ஆவணங்கள் கூறினாலும் காலிங்கராயன் கனகபுரத்தைச் சேர்ந்தவர் என்றும் தென்

முகம் வெள்ளோட்டுக்குரியவர் என்றும் அண்மையில் கிடைத்த பட்டயத்தாலும் சில கல்வெட்டுக்களாலும் உறுதிப்படுகிறது.

காலிங்கராயன் அணை கட்டின பட்டயத்தில் 'கனக புரத்து நஞ்சையன் மகன் லிங்கையன் வானியாற்றில் அணை கட்ட வேணுமென்று' என்ற தொடர் வருகிறது. கனகபுரம் விநாயகர் கோயிலில் 'காலிங்கராயன் வங்கிஷத் தில் காசிலிங்கக் கவுண்டன் உபயம்' என்ற கல்வெட்டுக் காணப்படுகிறது. கவுண்டச்சி பாளையம் பாலமடை அம்மன் கோயிலை 1850ஆம் ஆண்டுத் திருப்பணி செய்த கனகபுரம் கொளந்தவேல் கவுண்டர் தம்மைக்காலிங்கராயன் வம்மிஷம் என்றும் தாம் கனகபுரத்தைச் சேர்ந்தவர் என்றும் அக் கோயில் கல்வெட்டில் குறித்துக் கொள்ளுகின்றார். கனகபுரம் கரையைச் சேர்ந்த செம்மாண்டம் பாளையத்தில் காலிங்கராயர்க்கு நிலங்கள் இருந்ததாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது. எனவே காலிங்கராயர் கனகபுரத்தைச் சேர்ந்தவர் என்பது உறுதிப்படுகிறது.

## அரசியல் தலைவன் ஆதல்

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் கொங்கு நாட்டைச் சடையவர்மன் வீரபாண்டியன் என்பவன் கைப்பற்றினான்.

"கொங்கீழங் கொண்டு
கொடுவடுகு கோடழித்துக்
கங்கை இருகரையும்
காவிரியும் கைக்கொண்டு"

எனவரும் அப்பாண்டியன் மெய்க்கீர்த்திப் பகுதி இச் செய்தியை வலியுறுத்தும். வெற்றி பெற்ற பாண்டியன் படையில் வெள்ளோட்டைச் சேர்ந்த ஓர் இளைஞன் சேர்ந்து மதுரை சென்றான். விரைவில் தன் அறிவு ஆற்றலால் பாண்டியன் படைக்குத் தலைமை பூண்டான். வீரபாண்டியனுக்கு அறிவுரை கூறும் தலைமை அமைச்சனாக

வும் ஆனான். சடையவர்மன் வீரபாண்டியனும் கி.பீ. 1253ஆம் ஆண்டு அவ் வீரனைப் பாராட்டிக் 'காலிங்க ராயன்' என்ற சீர்மிகும் சிறப்புப் பட்டப்பெயரும் அளித் தான். அவரே நமது கால்வாய் வெட்டிய வெள்ளோடைச் சாத்தந்தை காலிங்கராயர் ஆவார்.

ஏறக் குறைய தன் 30ஆம் வயதில் ஆட்சி அலுவலில் சேர்ந்த காலிங்கராயன் (சுமார் கி.பி. 1253ஆம் ஆண்டு) பாண்டிய நாட்டின் வடக்குப் பகுதியாகிய கொங்கு நாட்டிற் குத் தலைவராக நியமிக்கப்பட்டார். 'உத்தர மந்திரி' 'உத்தர ராயன்' 'சுந்தர பாண்டிய கலிங்கராயன்' என்ற சிறப்புப் பட்டப் பெயர்களும் பெற்றமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. வீரபாண்டியன் சுந்தர பாண்டியன் குலசேகர பாண்டியன் என்ற மூன்று கொங்குப் பாண்டிய அரசர்கள் காலத்தில் சுமார் 40 ஆண்டுகள் அரசியல் தலைவராக விளங்கிப் பெருமைகள் பெற்றவர் நம் காலிங்கராயன். கொங்கு நாட்டில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் காலிங்கராயர். தன் பெயரில் நாணயம் அச்சிட்டார் என்பதனையும் அறிகின்றோம்.

## காலிங்கராயன்—பெயர்க்காரணம்

லிங்கையன் என்பது காலிங்கராயனின் இயற்பெயர் என்பதால் அப் பெயரை ஒட்டியே பட்டப் பெயர் காலிங்க ராயன் என்றும் வழங்கப் பெற்றிருக்கலாம் என்றும் கருத லாம். தமிழரசர்கள் பெற்ற கலிங்க வெற்றியின் அடையாள மாகவே 'காலிங்கராயன்' என்ற பட்டப்பெயர் வழங்கப் பட்டது. 'வமிசாவளி' காலிங்கராயன் என்பதற்கு ஒரு புதிய பெயர்க் காரணம் கூறுகிறது. கலிங்கு என்ற சொல்லுக்கு ஏரி, மதகு, நீர் வழியும் அணைக்கட்டு என்று பொருள் உண்டு. கலிங்கல் என்ற சொல்லும் 'ஏரி நிறைந்து நீர் போகும் வழி' என்ற பொருள் தரும்.

எனவே, காலிங்கராயன் அணை கட்டியதன் காரண மாகவே 'கலிங்குராயன்' அல்லது 'கலிங்கல்ராயன்' என

வழங்கப்பெற்றது. பின்னர் அப் பெயரே 'காலிங்கராயன்' என்று மாறியது என்ற கருத்து அதில் கூறப்படுகின்றது.

"அணையும் கட்டிவச்சபடியினாலே காலிங்கக் கவுண்டன் என்னும் பேர் வரப்பட்டுப் பிரசித்திப்பட்டவனாய் இருக்கும் நாளையில்" எனவரும் பகுதியால் இக் கருத்தை அறியலாம். ஆனால் அணை கட்டுவதற்கு முன்னரும் காலிங்கராயன் என்ற பெயர் நம் தலைவனுக்கு வழங்கியதென்பதையும் அணை, குளம் கட்டாத பிற தலைவர்களும் பல்வேறு காலங்களில் காலிங்கராயன் என்று பெயர் பெற்றிருப்பதையும் நோக்கும்போது இக் கருத்து அவ்வளவு வலியுடையது அன்று என்பது தெரிகிறது. எனவே 'காலிங்கராஜன்' என்ற பெயரே 'காலிங்கராயன்' என்று வழங்கப்பட்டதென அறியலாம்.

வமிசாவளி மற்றொரு வகையிலும் பெயர்க்காரணம் கூறுகிறது. 'காலிங்கன்' என்பதுதான் முன்பு வழங்கிய பெயர். பின்னர் ராயர் சமஸ்தானம் உள்ள பெனு கொண்டாவிற்குச் சென்று பன்னிரண்டு ஆண்டுக்காலம் காத்திருந்து பேட்டி கண்டு 'ராயர்' பட்டம் பெற்றுக் காலிங்கராயர் என்று புகழ் பெற்று விளங்கியதாகவும் கூறுகின்றது.

பாண்டியர் ஆட்சியே கொங்கு நாட்டில் பரவியிருந்தது என்பதாலும் காலிங்கராயன் என்ற பெயரிடும் வழக்கம் கி.பி. 12ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடர்ந்து உள்ளது என்பதாலும் 'காலிங்கராயன்' என்ற பெயரே அரசன் அளித்த பட்டப்பெயராக நம் தலைவனுக்குள்ளமையை விளக்கும் கல்வெட்டுக்களைத்தான் ஆதாரங்களாகக் கொள்ள வேண்டும் என்பது தோன்றுகின்றது.

## செல்வச் செழிப்பு

உயர்பதவி வகித்த காலிங்கராயன் செல்வாக்குடன் மிகுந்த செல்வந்தராகவும் இருந்திருக்கவேண்டும். அணை

கட்டிக் கால்வாய் வெட்டும் முயற்சியில் காலிங்கராயன் சோர்வுற்றிருக்கும்போது அவர் தாயார் மகனுக்குத் தைரியமூட்டிப் பணியில் ஈடுபடுத்தினார் என்பது செவிவழிச் செய்தியாகும்.

'மகனே நம் வீட்டில் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. தயிர் விற்ற பணம் தாவாரம் வரை கிடக்கிறது. மோர் விற்ற பணம் முகடுவரை உள்ளது. அவைகளை எடுத்துக்கொண்டு சென்று தைரியமாக அணையைக்கட்டு; கால்வாயை வெட்டு' என்று காலிங்கராயன் தாயார் கூறினார்களாம். இவ்வாறு மகனுக்கு ஊக்கமூட்டிய தாயாரின் பெயரைத் தெரிந்து கொள்ள ஆதாரம் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. 'காலிங்கராய வினியோகம்' என்ற வரி கொங்கு நாட்டில் வசூலிக்கப் பட்டது.

## பங்காளிகள் பகையா?

பங்காளிகளிடம் பகை கொண்டிருந்தார் காலிங்கராயன் என்று சிலர் கூறுவர். அதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. வேட்டுவர்களைக் காலிங்கராயன் வெல்லும் முயற்சியில் எண்ணமங்கலம் சாத்தந்தை குலத்தினர் உதவியுள்ளனர். வெள்ளோடு வெள்ளை வேட்டுவரை அடக்கும் முயற்சியி லும் பாலமடை அம்மன் கோயில் கட்டவும் வெள்ளோடு சர்வலிங்கேசுரன் கோயில் திருப்பணியிலும் வெள்ளோடு கனகபுரம் சாத்தந்தை குலத்தினர் அனைவரும் உதவி யுள்ளனர். எலவமலை சாத்தந்தை குலத்தினர் அணை கட்டும் இடத்திலும் கால்வாய் வெட்டும் இடங்களிலும் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளனர். தான் காடுபிடித்து நாடாக்கி வெள்ளிர வெளிப் பகுதியில் மக்களைக் குடியேற்றிய காலிங்கராயன் வெள்ளோட்டில் இருந்த தன் பங்காளிகளையே குடியேற்றியுள்ளார். இவை அனைத்துக் கும் கல்வெட்டு, பட்டய ஆதாரங்கள் உள்ளன. எனவே தன் பங்காளிகளான சாத்தந்தை குலத்தாரிடம் காலிங்க

ராயன் மிகவும் மரியாதை வைத்திருந்தார்; சாத்தந்தை குலத்தினரும் உயர்பதவி வகித்த தம் பங்காளி காலிங்க ராயனைப் பெரிதும் மதித்து வேண்டிய பல உதவிகள் செய்தனர் என்று உறுதியாகத் தெரிகிறது. எனவே பங்காளிகளுக்கும் காலிங்கராயனுக்கும் பகை இருந்தது என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை.

## ஆட்சிப்பகுதி

கொங்கு நாட்டில் பூந்துறை நாட்டுக்கு உரியனவாய் வெள்ளோட்டை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த காலிங்கராயன் பாண்டியர்களின் ஆட்சிப் பிரதிநிதியாகக் கொங்கு நாடு முழுவதையுமே ஆண்டு கொண்டிருந்த கொங்குப் பாண்டியரின் கீழ் அரசியல் அதிகாரியாக விளங்கினார் என்று அவர் கல்வெட்டுக்கள் வாயிலாக நாமறிகின்றோம்.

வெஞ்சமாங்கூடல், நெரூர், கொடுமுடி, வெள்ளோடு, இராமநாதபுரம் புதூர், அந்தியூர், திங்களூர், குன்னத்தூர், விசயமங்கலம், சர்க்கார் பெரியபாளையம், எலத்தூர், குடிமங்கலம், பேரூர், கரூர், பாரியூர், மொடச்சூர் போன்ற பல பகுதிகளில் காலிங்கராயனின் கல்வெட்டுக்கள் கிடைப்பதால் ஏறத்தாழ அமராவதி ஆற்றுக்கு வடக்கும் காவிரிக்கும் மேற்கும் பேரூரின் கிழக்கும் கோபி, அந்தியூரின் தெற்கும் இவைகளின் மத்தியப்பரப்பில் உள்ள கொங்கு நாட்டுப் பகுதி முழுவதையும் காலிங்கராயன் தன் அதிகார எல்லைக் குட்படுத்தியிருந்தார் என்று தெரியவருகிறது. தன் காலத்தில் கொங்குநாடு எழிலும் ஏற்றமும் பெற்று விளங்க வேண்டும் என்றெண்ணிக் காலிங்கராயன் செய்த பணிகள் எண்ணிலடங்கா.

ஆட்சியின் பொருட்டும் நிருவாகத்தைச் சரி செய்வதன் பொருட்டும் அறக்கொடைகளை நிலைநாட்டும் பொருட்டும் பாண்டியர் தம் ஆணையை நாட்டும் பொருட்டும் நீதி

செலுத்தும் பொருட்டும் மக்கள் குறை கேட்டு முறை செய்ய வும் கொங்குநாடு முழுவதும் காலிங்கராயன் பயணம் மேற் கொண்டுள்ளமை அவருடைய பரந்த கல்வெட்டுக்கள் மூலம் அறிகின்றோம். காலிங்கராயன் அரசர்மீது பற்றும் உடன் அலுவலர்மீது பரிவும் கொண்டு விளங்கினார் என்பது அவர் வெட்டி வைத்த பல கல்வெட்டுக்கள் மூலம் நாமறி கின்றோம்.

# 'பெயரும் பெருமையும்'

## பட்டப்பெயர்

நமது தலைவனின் சிறப்புப் பட்டப்பெயராக அமைந்துள்ள 'காலிங்கராயன்' என்ற பெயர் வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

பழங்கால மன்னர்கள் தம் நாட்டில் சிறப்புற்று விளங்கியோர்க்கும் தங்கள் அரசியல் அதிகாரிகட்கும் அவர்தம் பணியைப் பாராட்டித் தகுதிக்கேற்ற வகையில் பற்பல பட்டப்பெயர்களை அளித்தனர். எட்டி, ஏனாதி, காவிதி என்பன அவற்றுட் சில பெயர்களாக வரலாற்றில் அறிகின்றோம்.

பிற்காலத்திலும் இவ்வழக்கம் தொடர்ந்து இருந்து வந்தது. காலப் போக்கில் பட்டங்களாக அளிக்கும் பெயர்கள் பெருகின. இவ்வாறு அளித்த பல பட்டப்பெயர்களுள் 'காலிங்கராயன்' என்பதும் ஒன்று.

## காலிங்கராயன்-பெயர் உருவாதல்

'விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமான்'

ஆகிய முதலாம் குலோத்துங்கச் சோழன் கி.பி. 1096இல் தென் கலிங்கத்தையும் கி.பி. 1112இல் வடகலிங்கத்தையும் வென்று தன் குடைக்கீழ்க் கொணர்ந்தான். இதில் கி.பி. 1112இல் அனந்தவர்மனோடு நடைபெற்ற வடக்லிங்கப் போர் வெற்றியையே செயங்கொண்டார் பரணியாகத் தரணி போற்றப் பாடினார். குலோத்துங்கன் தன் கலிங்க வெற்றிக்குக் காரணமாக இருந்தவர்களுள் ஒருவனும் சிறந்த சிவபக்தனுமாகிய நரலோக வீரன் என்ற

சிறப்புப் பெயரையுடைய மணவிற்கூத்தனுக்குக் 'காலிங்க ராயன்' என்ற பட்டத்தை அளித்தான். கலிங்க வெற்றியின் அடையாளமாகவே குலோத்துங்கன் இவ்வாறு பட்டப் பெயரை அளித்தான். இம் மணவிற்கூத்தனைத் தில்லைக் கல்வெட்டுப் பாடல் 'காலிங்கர் ஏறு' என்று பாராட்டு கின்றது. காலிங்கராயர் பட்டம் பெற்ற முதல் அரசியல் தலைவர் மணவிற் கூத்தரே ஆவார்.

தென்கரைச் சோழவந்தான் மூலநாதர் கோயில் கல்வெட்டில் 'சீவல்லவன் அழகிய மணவாளனான கலிங்க ராஜன்' என்ற ஒரு பெயர் காணப்படுகிறது. கலிங்கராஜன்-காலிங்கராயன் என மாறியிருக்க வேண்டும். (தமிழ் இலக்கண முறைப்படி சொல் இடையில் உள்ள ஜ-ய என்று மாறும். பங்கஜம் - பங்கயம்; புஜம் - புயம்)

இப்பெயரோடு தொடர்புடைய 'கலிங்கதரையன்' என்ற பெயரும் கல்வெட்டுக்களில் பயின்று வருதலைக் காண்கின்றோம். குலோத்துங்கனுடைய கலிங்க வெற்றிக்கு முன்னர்த் தமிழ் நாட்டு அரசியல் அதிகாரிகள் எவரும் காலிங்கராயன் என்ற பெயரோடு இருந்ததில்லை என்பதை நோக்கக் கலிங்க வெற்றிக்குப் பின்னரே இவ்வாறு பட்டப் பெயர் அளிக்கும் வழக்கு வந்தது என்ற உண்மை புலனாகும். குலோத்துங்கனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த சோழர்களில் பலரும் பாண்டியர்களும் விசயநகர அரசர்களும் போசளரும் (ஒய்சளர்) தொண்டை நாட்டுச் சம்புவராயர் மரபினரும் இப்பெயரைத் தங்கள் அரசியல் அதிகாரிகட்கு வழங்கியதி லிருந்து கலிங்கநாட்டு வெற்றியிலும் காலிங்கராயன் என்ற பெயரிலும் பிற்காலத்தவர் கொண்டிருந்த பெருமதிப்புப் புலனாகின்றது.

பலர் 'காலிங்கராயன்' என்ற பெயரைக் 'காளிங்க ராயன்' என்று எழுதிவருகின்றனர். எந்த ஒரு பழைய ஆவணத்திலும் அவ்வாறு எழுதப் பெறவில்லை. அவ்வாறு எழுதுவது பிழையானதும் வரலாற்றுக்கு மாறுபட்டது மாகும்.

## சோழ நாட்டில்

தமிழ் நாட்டின் பல பகுதிகளில் பற்பல காலங்களில் அரசியல் அதிகாரிகள் காலிங்கராயன் என்ற சிறப்புப் பெயர் பெற்று விளங்கினர். சோற்றால் மடையடைக்கும் சோழ நாட்டில் இப்பெயரோடு விளங்கிய தலைவர்கள் பலர்.

ஆலங்குடி ஆபத்சகாயேசுவரர் கோயிலில் உள்ள மதுரையும் ஈழமும் கொண்ட இராசாதிராச தேவனின் 11ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'காலிங்கராயர்' என்ற ஒரு அரசியல் அதிகாரியின் பெயரைக் காண்கின்றோம்.

பண்பட்ட தில்லையில் கூத்தரசப் பெருமான் ஆலயக் கல்வெட்டில் 'காலிங்கராயர் ஓலை' என்ற பெயரில் ஓர் அரசியல் அதிகாரியின் ஆணை குறிக்கப்பெறுகிறது.

திருவரங்கம் கோயில் கல்வெட்டில் 'காலிங்கராயர் வைக்கிற அகரம்' என ஒரு கல்வெட்டில் காணுகின்றோம். பிறிதோர் கல்வெட்டில் 'காலிங்கராயர் அகரம்' என்றே அது அழைக்கப் பெறுகிறது. அத்திருவரங்கத்திலேயே 'உடையார் பெரியபெருமாள் ஆன காலிங்கராயர் கலியுக ராமச் சதுர்வேதிமங்கலம்' என்று அந்தணர்கட்கு ஊர் ஏற்படுத்தியதாக மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.

திருவிடைமருதூர்ச் சிவாலயத்தில் உள்ள கோனேரின்மை கொண்டான் கல்வெட்டில் 'காலிங்கராயன்' என்ற அதிகாரி சாட்சிக் கையொப்பமிட்டுள்ளான். நன்னிலம் தாலூக்கா திருமீயச்சூர் சிவாலயக் கல்வெட்டில் 'உடையார் காலிங்கராயர்; குலசேகர காலிங்கராயர்' என்று இருவர் குறிப்பிடப்பெறுகின்றனர்.

## பாண்டிய நாட்டில்

திருப்பரங்குன்றம் உமையாண்டான் கோயிலில் உள்ள சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டியன் கல்வெட்டி

னால் ஓர் அலுவலர் பெயர் 'காலிங்கராஜன்' என்றிருப்பதை அறிகின்றோம்.

திக்கெலாம் புகழ் பரப்பும் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் மூன்றாம் பிரகாரம் வடக்குச் சுவரில் உள்ள குலசேகர தேவனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'நெட்டூருடையான் திருவிருந்தான் காலிங்கராயன்' என்ற அரசியல் தலைவர் குறிக்கப்பெற்றுள்ளார்.

மிழலைக்கூறு நடுவிற்கூறு பராந்தக நல்லூர் ஆன கட்டிக்குறிச்சியிலும் 'காலிங்கராயர்' என்ற பெயரைக் காணுகின்றோம்.

'மலர்ந்த சீர்மாட' மதுரைச் சுந்தரேசவரர் கோயிலுக்குத் திருவிழா நடத்த நிவந்தம் விட்ட பலருள் 'முத்தூற்றுக் கூற்றத்துக் கப்பலூரான உலகளந்த சோழ நல்லூர் கரிய மாணிக்காழ்வான் திருவுடை நாயகரான வீரபாண்டியக் காலிங்கராயர்' என்பவர் சிறப்பாகக் குறிக்கப்பெறுகின்றார்.

## ஒய்சளர் காலத்தில்

கொங்கு நாட்டுக் குன்னத்தூர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில் ஒய்சள நாட்டு மன்னன் வீரவல்லாள தேவன் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் உடையாண்டான் அழகப்பெருமாள் பிள்ளையாண்டானான காலிங்கராயன் என்ற குறுப்பு நாட்டு அரசியல் தலைவன் ஒருவன் குறிக்கப் பெறுகின்றான்.

## விசயநகர ஆட்சியில்

திருவரங்குளம் அரிதீர்த்தேசுவரர் கோயிலில் உள்ள வீர அச்சுதராயர் கல்வெட்டில் (கி. பி. 1531) 'செவந்தி காலிங்கராயன்' என்பவரும் பிரான்மலை மங்கை நாதேசுவரர் கோயிலில் உள்ள கிருட்டிண தேவராயன் காலத்துக் கல்வெட்டில் 'அறந்தாங்கிக் கணக்கு அடியார்க்கு

நல்லான் கற்பூரக் காலிங்கராயன்' என்பவரும் அரசியல் அதிகாரிகளாகக் குறிக்கப் பெறுகின்றனர்.

## சம்புவராயர் நாளில்

'எழிலாரும் பொழிலார் கச்சி' என்று நற்றமிழ் வல்ல நாவுக்கரசர் பாவுள் போற்றும் காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ள 'சகல லோக சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜ நாராயண சம்புவராயர்' காலத்துக் கல்வெட்டில் 'எயில் கோட்டத்து ஆர்ப்பாக்கக் கிழான் பெருங்கருணை யாளன் திருவேங்கடமுடையான் காலிங்கராயன்' என்ற அரசியல் அதிகாரி சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

இக்கல்வெட்டுப் பகுதியிலிருந்து அரசியல் அதிகாரி களுக்கும் (அரண்மனை உள் அதிகாரி, நாட்டு அதிகாரி) படைத்தலைவருக்கும் சிற்றூர்த் தலைவர்கட்கும் காலிங்க ராயன் என்ற சிறப்புப் பெயர் வழங்கி வந்தமை புலனாகிறது. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் காலிங்கராயன் என்ற பெயர் வழக்கிலிருந்ததை நாம் அறிகின்றோம்.

## காலிங்கராய அரண்மனை

அரசியல் தலைவர்கட்கு மட்டுமின்றித் தங்களுக்கு மிக விருப்பமான பிறவற்றிற்கும் 'காலிங்கராயன்' என்று பெயரிட்டு அரசர்கள் மகிழ்ந்தனர் என்று கல்வெட்டுக்களின் மூலமாக நாமறிகின்றோம்.

பார் புகழ நாடாண்ட பாண்டியர்கள் தாங்கள் சீர் திகழ வீற்றிருந்து செங்கோலோச்சிய அரண்மனைக்கும் அமர்ந்த இருக்கைக்கும் காலிங்கராயன் என்ற சிறப்புப் பெயரைச் சூட்டியிருந்தனர் என்பதற்கும் சான்றுகள் சில கிடைத்துள் ளன. 'கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு மூன்றாவது 292ஆம் நாள் பிரசாதம் செய்தருளின திருமுகப்படி சோழ மண்டலத்துப் பாண்டிய குலபதி வளநாட்டுக் கண்டியூர் கோயில் பள்ளி

யறைக் கூடத்துப் பள்ளிப்பீடம் காலிங்கராயனில் எழுந்தருளி யிருக்க' எனவரும் இத்தொடரால் சோழ நாட்டை வென்ற பாண்டியன் கண்டியூரில் இருந்த தன்னுடைய அரண்மனை யில் ஒருபகுதிக்குக் காலிங்கராயன் என்று பெயர் வைத்த சிறப்பை அறிகின்றோம்.

'மதுரைக் கோயில் பள்ளியறையுள்ளாலை பள்ளிப்பீடம் காலிங்கராயனில் எழுந்தருளியிருந்து' எனவரும் குலசேகர பாண்டியன் கல்வெட்டுத் தொடரால் மதுரை அரண்மனை யிலும் ஒருபகுதி இச்சிறப்புப் பெயர் கொண்டு விளங்கிய பெருமையை அறிகின்றோம். சீவல்லபதேவர் காலத்திலும் 'மாடக்குளக்கீழ் மதுரைக் கோயில் உள்ளாலை அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிப்பீடம் காலிங்கராயன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. மதுரோதய வளநாட்டு இராசசிங்கன் குளக்கீழ் இராசேந்திரசோழபுரத்திலும் இதே பெயரில் அரண்மனைப் பகுதி விளங்கியுள்ளது.

## காலிங்கராய நந்தவனமும் நிலமும்

உடையார் பாளையம் சென்னிவனம் சென்னியாண்ட சுவாமி கோயிலில் சுரும்புப் பாடலுக்கு அரும்பு விரியும் அழகிய நந்தவனம் ஒன்று இருந்தது. அந்த நந்தவனம் 'காலிங்கராய நந்தவனம்' என்று கவின்பெயர் தாங்கிச் சிறப்புற்றிருந்தது. அந்த நந்தவனத்தை 50 குழி நிலப் பரப்பில் உண்டாக்கியவர் உடையார்பாளையம் பாளையக் காரர் 'காலாட்கள் தொழ உடையார்' என்றும் கல்வெட்டால் அறிகின்றோம். திருச்சிமாவட்டம் காவேரிப் பாளையம் கல்வெட்டால் ஒரு நிலத்தின் பெயர் 'காலிங்க ராயன் கொல்லை' என்று அறிகின்றோம்.

## காலிங்கராய நடனமாது

காளையார் கோயில் காளீசுவரர் கோயிலில் விழாக் காலத்தில் நடனமாட வந்தாள் ஒரு நங்கை. அவருக்குக்

கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் எம் மண்டலமும் கொண்டருளிய குலசேகர பாண்டியதேவன் தன் 40ஆம் ஆட்சியாண்டில் உரிமைகள் சிலவற்றை உவந்தளித்தான். அப்பெண்ணின் பெயர் 'நக்கன் செய்யா ளான காலிங்கராயத் தலைக்கோலி' என இன்றும் நின்று நிலவுகிறது; அங்குள்ள கல்வெட்டு மூலம்!

## காலிங்கராயன்—நாணயமும் வரியும்

'காலிங்கராய வினியோகம்' என்ற பெயரில் ஒரு வரி இருந்தது என்று நெரூர், வெஞ்சமாங்கூடல் கல்வெட்டுக் களால் அறிகின்றோம். இது காலிங்கராயன் செய்த பணிகட்காக நாட்டு மக்கள் அளித்த வரி என்பார் கல்வெட்டாய்வாளர் திரு தி. நா. சுப்பிரமணியனார். இது காலிங்கராயன் கால்வாயின் பராமரிப்புக்கு மக்கள் செலுத்திய வரியும் ஆகலாம். இன்னும் கொங்கு நாட்டில் 'காலிங்கராயன் காசு', 'காலிங்கராயன் பணம்' என்ற நாணயங்கள் வழக்கில் இருந்தமையை அறிகின்றோம்.

## ஒப்புமைப் பெயர்கள்

அரசியல் அதிகாரிகட்கு அரசர்கள் வழங்கிய காலிங்க ராயன் என்ற பட்டப்பெயரை ஒத்து வேறு பற்பல பட்டப் பெயர்களையும் ஏறக்குறைய அதே காலத்தில் அளித்துள்ள னர். அவர்களுட் சில வருமாறு :

அழகராயன், இராசாண்டராயன், ஈழத்துராயன், கச்சிராயன், களப்பாளராயன், கனகராயன், காங்கேய ராயன், காடவராயன், குமணராயன், குருகுலராயன், கொங்கராயன், சிமிஞ்சராயன், தன்மபோதிராயன், தெலுங்கராயன், தென்னவராயன், தொண்ணராயன், பாஞ்சாலராயன், மலையப்பியராயன், மாதவராயன், மழவ ராயன், மூவேந்தராயன், வத்தவராயன், வாணாதிராயன், வில்லவராயன், வைகைராயன், வைசியராயன், வைதும்ப ராயன்,

## பெயரின் பெருமை

மேற்கூறிய பல்வேறு சிறப்புப் பெயர்களில் அரசியல் தலைவர்களில் மிகவும் சிறந்தவர்களுக்கே தலைமையானவர்களுக்கே காலிங்கராயன் என்று பெயர் அளித்துப் பாராட்டுவது வழக்கமாக இருந்தது என்பதைச் சில கல்வெட்டுக்களால் குறிப்பாக அறிகின்றோம்.

சோழவந்தான் கல்வெட்டில் குலசேகரதேவன் ஓர் உரிமைச் சாசனம் வழங்கும்பொழுது, 'ஐயன் காலிங்கராயன் நமக்குச் சொன்னமையால்' தான் அறச்செயல் செய்வதாகக் குறிப்பிடுகின்றார். சடையவர்மன் சுந்தரபாண்டியனின் குருவித்துறைக் கல்வெட்டிலும், மூன்றாம் குலோத்துங்க சோழனின் எண்கண் கல்வெட்டில்கூடக் 'காலிங்கராயர் நமக்குச் சொன்னமையில்' என்ற தொடரைக் காணுகின்றோம். திருவரங்குளம் கல்வெட்டில் ஒரு கணக்கு அதிகாரி "வல்லநாட்டுக் கணக்கு நாடுமதித்த காலிங்கராயர்" என்று குறிப்பிடப் பெறுகின்றான். 'உடையார் காலிங்கராயர்' என்று வேறு கல்வெட்டில் ஒருவர் குறிக்கப் பெறுகின்றார்.

இச்சான்றுகள் அரசர்கள் 'காலிங்கராயன்' என்ற பெயரை எவ்வளவு சிறப்பாகவும் புனிதமானதாகவும் மேலானதாகவும் மதித்துப் போற்றினார்கள் என்பதையும் இன்றியமையாச் சிறப்பு அரசியல் அதிகாரிகளுக்கே இப் பெயரை அளித்தனர் என்பதையும் சாற்றுகின்றன.

தனிப்பாடல் ஒன்றில் 'அண்ணல் காலிங்கன்' என்ற தொடர் வருகிறது. கொங்கு நாட்டு வேளாளர்களில் சாத்தந்தை குலத்தினர் பிற்காலத்தில் தங்களைக் 'காலிங்கராயன் வங்குசத்தில்' வந்தவர்கள் என்று பெருமையாகக் கூறிச் சொல்வதைக் கனகபுரம் கல்வெட்டாலும், கவுண்டச்சிபாளையம் பாலமடை அம்மன் கோயில் கல்வெட்டாலும் அறிகின்றோம். பிற குலத்தினரும் 'காலிங்கராயன்' என்று பெயர் வைத்துக் கொண்டனர் என்பதைக் காஞ்சிக் கோயில்

(செம்பன் குலத்தினர்) குன்னத்தூர்க் (கணவாளர்) கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

காலிங்கராயனுக்குப் பின் வந்த சாத்தந்தை குலத்தினர் பலரும் காலிங்கராயக் கவுண்டர் என்று பிற்காலம் வரை பெயர் வைத்துக் கொண்டதைக் கொங்குக் காணியான பட்டயம், மதுக்கரைப் பட்டயம், அகிலாண்ட தீட்சிதர் செப்பேடு ஆகியவற்றால் அறிகின்றோம்.

எனவே தமிழகமெங்கும் பல அரசர்கள் பல்வேறு காலங்களில் தங்கள் மிக உயர்ந்த அதிகாரிகட்கு வழங்கிய சிறப்பான பெயராகிய 'காலிங்கராயன்' என்ற பெயரையே நமது அணையும் கால்வாயும் அமைத்த அருளாளராகிய தலைவரும் பெற்றுள்ளார். நம் தலைவர் ஒருவரே பாண்டியர் நாளில் கொங்கு நாட்டில் இப்பெயர் தாங்கி இணையிலாது ஓங்கி அதிகாரம் செலுத்தி வசையொழித்து இசைகொழித்து வாழ்ந்தவராகின்றார். சிறப்புமிகு இக் காலிங்கராயன் என்ற பட்டம் பெற்றதால் அவர் பாண்டிய மன்னர்களிடம் பெற்றிருந்த உயர்வும் பெருமையும் மதிப்பும் நன்கு புலனாகிறது.

# அணையும் கால்வாயும்

'நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே'

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடுகின்றார்.

உணவு கொடுத்தவர்கள் உயிரையே கொடுத்தவர்கள் ஆகிறார்கள். உணவு நிலத்தோடு நீர் சேர்வதால் உண்டாவது. எனவே நிலத்தொடு நீர் சென்றடையும் பணியை யார் செய்கிறார்களோ அவர்கள் உடம்பையும் உயிரையும் காப்பவர்கள் ஆகின்றார்கள் அவர்கள் புகழே உலகில் நிலைத்து நிற்கும் என்பது இப்பாடல் கருத்து.

இதை அறிந்தே தமிழக அரசர்கள் பலரும் காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கினர் அரசர் வழிநின்ற உயர் அலுவலர்களும் அரசர்களைப் போன்ற நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் பணியைத் திறம்படச் செய்தனர்.

போர்க்களத்திற்குச் சென்று போரிட வீட்டுக்கொருவர் புறப்பட்டு நாட்டைக் காத்தனர். அதேபோல் ஆற்றை அடைத்து வேளாண்மையைப் பாதுகாக்கவும் வெள்ளத்தை அடைத்து முறைப்படுத்தவும் வீட்டுக்கொருவர் புறப்பட்டுச் சீரமைப்புச் செய்ய வேண்டும் என்ற பாண்டியன் ஆணையைத் திருவிளையாடல் புராணக் கருத்து நமக்கு அறிவுறுத்துகிறது.

காலிங்கராயன் பாண்டியர் தலைவன் ஆனபின் தம்முடைய பூந்துறை நாடு வளம் பெறும் பொருட்டுப் பவானியில் இடம் தேர்ந்து, இடம் அளிக்க மறுத்த பாளையக் காரன் வெள்ளை வேட்டுவனை வென்று நாட்டு மக்கள் உதவியுடன் காலிங்கராயன் அணை கட்டிக் கால்வாயை யும் வெட்டினார். அதனால் என்றும் அழியாப் பெரும் புகழ் பெற்றார்.

காலிங்கராயன் அணைகட்டத் தேர்ந்தெடுத்த பவானி ஆறு இலக்கியப் புகழ்பெற்றது. பதிற்றுப்பத்தில் 'சாந்துவரு வானிநீர் மென்மையான சாயலும் தூய்மையும் தண்மையும் உடைய சேரன் இளஞ்சேரல் இரும்பொறையன் திருமேனிக்கு உவமையாகக் கூறப்படுகிறது.

கொங்கு நாட்டில் உள்ள ஆறுகளையெல்லாம் தொகுத்துப் பின்வருமாறு கொங்கு மண்டல சதக ஆசிரியர் கூறுகின்றார்.

'திருமணி தொப்பைபூங் காவேரி
வானியும் செய்யநதி
தருமணி காஞ்சி பொருநைநள்
ளாறொடு சண்முகமும்
குருமணி பாலை நதிவாழை
காரி குடவந்தியும்
வருமணி சண்பகம் சிற்றாறு
சூழ்கொங்கு மண்டலமே!'

என்பது அப்பாடலாகும். இப்பாடலில் 'கங்கையிற் புனித மாய' காவிரியுடன் இணையாகக் கூறப்படும் பெருமையைப் பெற்று விளங்குகிறது வானியாறு.

'வடகொங்கில் வானியாற்றில்' எனவரும் வேதாந்த தேசிகர் கூற்று வானியாறு வடகொங்கு நாட்டில் பாய்கிறது என்பதைத் தெரிவிக்கிறது. ஏற்கெனவே பூந்துறை நாட்டின் வடக்கு எல்லையாக வானியாறு விளங்கும் தன்மையைக் கண்டோம்.

பூந்துறை நாட்டில் பாயும் நான்கு ஆறுகளில் இரண்டாவதாக வானியாற்றை வைத்துப் பாடுகின்றார் சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ் நூலாசிரியர் குந்தாணி சுவாமிநாதக் கவிராயர்.

'சரசகாவிரி வானி காஞ்சி அனுமையும்
சதுர்வித நதி'

என்று கூறும் அவ்வாசிரியர் மற்றோர் இடத்தில் வானியாற்றைத் 'தெய்வ வானி' என்றும் குறிப்பிடுகின்றார்.

சிந்தையள்ளும் சந்தக்கவிகள் பாடிய அருணகிரிநாதர் பவானியில் எழுந்தருளியுள்ள முருகனைப் புகழ்ந்து பாடும்போது "சிலைவேட சேவற் கொடியோனே திருவானி கூடற் பெருமாளே" என்பார். பவானியைத் திருவானி கூடல் என்றழைக்கின்றார் அருணகிரியார், 'செஞ்சொற் கறைசை திருவானிகூடல்' என்று கொங்கு மண்டல சதக நூலும் வாணியைத் திருவானிகூடல் என்றே குறிப்பிடும். சிலர் திருவாணிகூடல் என்று பாடபேதம் கொண்டு இத்திருப்புகழை மதுரைப் பாடலோடு சேர்ப்பர்.

இங்குள்ள கூடுதுறை, பிரயாகை (அலகர்பாத்) போலத் 'திரிவேணி சங்கமம்' என்று கூறப்படுகிறது. வடநாட்டில் கங்கையோடு யமுனையாறு கலக்குமிடத்தில் சரஸ்வதி அந்தர் வாகிணியாகக் கலந்து பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஏற்படுவதைப் போல இங்கும் காவிரியும் பவானியும், அந்தர் வாகிணியாக அமுதநதியும் கலப்பதால் தமிழ் நாட்டுப் பிரயாகையாக இது விளங்குகிறது.

'கோல மிகுந்த பவானியும்
பொன்னியும் கூடுதுறை'

என்பார் கொங்கு மண்டல சதக ஆசிரியர். இன்னும் அவிநாசித் தலபுராணம், பூந்துறைப் புராணம் போன்ற பல்வேறு புராணங்களாலும் பல சிறு பிரபந்தங்களாலும்

பிங்கல நிகண்டு, திவாகர நிகண்டு போன்ற நிகண்டு களாலும் புகழப் பெற்ற ஆறுதான் பவானியாறு.

இவ்வாறு வரலாறு இலக்கியப் புகழ்பெற்ற பவானி ஆற்றில்தான் காலிங்கராயன் அணைகட்டத் தீர்மானித் தார். பழைய கோவை மாவட்டத்திலுள்ள சுமார் 30 கால்வாய்களில் காலிங்கராயன் கால்வாயே முதலாவதாக வைத்துக் கூறப்பட்டது.

பவானிக்கு அருகிலுள்ள ஊராட்சிக் கோட்டை மலையை விலைக்கு வாங்கினார். அம்மலையிலிருந்து அணை கட்டுமிடம் வரை உள்ள வழியையும் விலைக்கு வாங்கினார். இதனை மெய்ப்பிக்கும் அடையாளமாக 'மலையாயிரம் தடம் ஆயிரம்' என்ற பழமொழி ஒன்று ஊராட்சிக் கோட்டைப் பகுதியில் இன்றும் வழங்கு கின்றது. இதிலிருந்து ஊராட்சிக் கோட்டை மலையை ஆயிரம் பொன்னுக்கும் வழியை ஆயிரம் பொன்னுக்கும் அவர் வாங்கியதாக அறிகின்றோம்.

அம்மலையில் மிகுதியான கற்களை உடைத்து அவை களைப் பல எருமை வண்டிகளின் மூலமாக அணை கட்டும் பகுதிக்கு எடுத்துக்கொண்டு வந்து அணையைக் கட்டினார். காலிங்கராயனும் இரண்டு எருமைக் கடாக்கள் பூட்டிய வண்டியில் கல் எடுத்தாராம். அக் கடாக்களுக்கு 'இராமன்-இலட்சுமணன்' என்று பெயர் வைத்திருந்தார் என்பர்.

மலையிலிருந்து அணைவரை வரும் வழியில் பல இடங்களில் தளர்ச்சி நீங்கத் தங்குமிடங்களையும் தாகந் தணிக்க நீர் நிலைகளையும் ஏற்படுத்தினார். வழியில் பொரி, கடலை போன்ற தின்பண்டங்களும் ஏராளமாக வைக்கப்பட்டு இருக்குமாம். வேலையாட்கள் அவைகளைத் தின்றுகொண்டே வேலை செய்யலாமாம். காலிங்கராயன் ஏவலாட்கள் மீது கொண்டிருந்த அன்பை இதன் மூலம் அறிகின்றோம். ஊராட்சிக் கோட்டை மலையில் காலிங்க ராயன் மோர் குடித்த இடம், உணவு உண்ட இடம் என்று சில இடங்களை இன்றும் காட்டுகின்றனர். ஆனால் அவை

களைப் பற்றிய கல்வெட்டோ சான்றோ ஒன்றும் அங்கில்லை. இன்றும் காலிங்கராயர் குடும்பத்தின் தனிப் பட்ட உடைமையாக ஊராட்சிக் கோட்டை மலை திகழுகிறது.

அணையில் நீர் வழிந்து வரும் கலிங்கில் கற்களை இணைத்து அந்த இணைப்பு நிலையாக நிற்கக் கம்பிகளைக் கொடுத்து ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி அதனை இணைத் துள்ளார். அணைத் தோப்பின் கிழக்கில் நீர் பாய்ந்து நேராகக் காவிரியில் கலந்து விடாமல் தண்ணீர் அணைக்கு வந்து சேர மிக நீளமான தடுப்புச் சுவரை ஆற்றின் இடையில் கட்டியுள்ளார். அதனால் நீர் தடுக்கப்பட்டு அணையை நோக்கிப் பாய்கிறது. நீர் மிகுதியாக வரும் காலங்களில் தான் அணைத்தோப்பின் கிழக்குப் பகுதியில் பவானியாற்றில் தண்ணீர் வரும்.

## கல்வெட்டுக்களில்

கொங்கு நாடெங்கும் கொங்குப் பாண்டியர் வீர பாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகர பாண்டியன் காலத்துக் கல்வெட்டுக்களில் காலிங்கராயன் பெயர் பொறித்த பல கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றைப் பிற்சேர்க்கையில் இணைத்துள்ளோம்.

இக்கல்வெட்டுக்களில் உயர் அலுவலராகக் காலிங்க ராயன் குறிக்கப்பட்டுள்ளார். தனிப்பாடலில் வீரபாண்டிய வேந்தமைச்சன் என்ற தொடர் இருப்பதும் கவனிக்கத் தக்கது.

காலிங்கராயன் வீரபாண்டியனின் ஆட்சியாண்டு 15இல் நாள் 129 அன்று கம்மாளர்களுக்குச் சில உரிமைகள் கொடுத் துள்ளார். அக்காலமே அணைகட்டி முடிக்கப்பெற்ற கால மாக இருக்கலாம் காலிங்கராயன் வினியோகம் என்றவரியை யும் காணுகின்றோம்.

கொங்கு நாட்டில் பிற்காலத்தில் இப்பெயரில் தலைவர் ஒருவரும் இல்லாததை நோக்கப் பாண்டியர் நாளில் இருந்த

காலிங்கராயனே அணைகட்டிக் கால்வாய் வெட்டினார் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. அதன் காலம் கி.பி. 1265 ஆகும்.

## செவிவழிச் செய்தி

காலிங்கராயன் அணை கட்டிக் கால்வாய் வெட்டிய அரிய செயல்பற்றிச் செவிவழிச் செய்தியாக சில கதைகள் வழங்குகின்றன.

காலிங்கராயன் பண்ணை குலத்தைச் சேர்ந்த தன் அத்தை வீட்டில் திருமணத்திற்குப் பெண் கேட்டதாகவும் 'எங்கள் நடுவீட்டில் வாய்க்காலா கொண்டுவந்து விடுகிறாய்?' என்று அத்தை கேட்க அவ்வாறே வாய்க்கால் வெட்டி அத்தை வீட்டு நடுவே விட்டார் என்று கூறுவர்.

வேறு சிலர் திருமண நிச்சய தினத்தன்று பெண் வீட்டுச் சமையல்காரன் மாப்பிள்ளை வீட்டார்களுக்குச் சமையல் செய்ய என்ன அரிசி போடுகிறது என்று கேட்க 'அவர்கள் கம்பு விளைகிற சீமையில் இருப்பவர்கள். என்ன அரிசி என்று தெரியவா போகிறது; பழைய அரிசி போடு, என்று சொல்ல அதுகேட்டு நெய்விளையும் பூமி ஏற்படுத்தக் கால்வாய் வெட்டினார் என்றும் கூறுவர்.

காலிங்கராயன் தன் சொந்த ஊராகிய வெள்ளோட்டுப் பகுதியைக் கால்வாய்ப் பாசனத்தால் வளம்பெறச் செய்ய வில்லை. எனவே இக்கதைகள் நம்புதற்கு உரியவை அல்ல. அரசியல் உயர் அலுவலனான காலிங்கராயன் திட்டமிட்டு நாட்டு நல்வாழ்வின் பொருட்டுச் செய்த பெரும் பொதுப் பணியே அணையும் கால்வாயுமாகும்.

## வமிசாவளி கூறும் செய்தி

வமிசாவளி பெரும்பாலும் இக்கதையை ஒப்புக்கொள்ளு கிறது. ஆனால் காலிங்கராயன் பண்ணைக் குலத்தைச் சேர்ந்த மாமன் மைத்துனன் வீட்டில் தன் மகனுக்குத்

திருமணம் செய்ய ஏற்பாடு செய்யும்போது தடைப்பட்டது என்றும் கால்வாய் வெட்டிச் சபதம் முடிந்தபின் திருமணம் நடைபெற்றது என்றும் கூறுகிறது. 18ஆம் நூற்றாண்டுத் தமிழ் நடையின் அழகை நாமறிய வேண்டுமல்லவா? வமிசாவளியில் உள்ளவாறே அப்பகுதியைக் காண்போம்.

"பூந்துறை நாட்டிற்கு நாட்டானாய் வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரனாய் இருக்கும் நாளையில் கங்கை குலம் சாத்தந்த கோத்திரம் காலிங்கக் கவுண்டன் என்கின்ற தன்னுடைய குமாரனுக்குக் கலியாணம் பண்ணவேண்டுமென்று நினைச்சு மாமன் மச்சுனனான பண்ண குலத்தாளி வீட்டிலே பெண் கேட்டுக் கலியாணம் செய்யத் தக்கதாக யோசிச்சு பெண் சம்மதமாகி அந்த ராத்திரி சாப்பிடுகிறதுக்குச் சமையல் பண்ணுகிறவன் வந்து இவர்களுக்குச் சமையல் பண்ணுகிறதுக்கு எந்த அரிசி போடுகிறது என்று கேழ்க்க 'அவாள் கம்பு விளைகிற சீர்மையிலே இருக்கிற பேர்களுக்கு எந்த அரிசி என்று தெரியவா போகிறது. பழ அரிசிதானே போடுபோ' என்று சொல்ல அது சேதி மேற்படி காலிங்கக் கவுண்டன் கேட்டு அவாள் வீட்டிலே சாப்பிடாதபடிக்கு இருந்து நெல்லு விளையும்படியாக நீர்ப்பாங்கு உண்டுபண்ணிக் கொண்டு உங்கள் வீட்டுப் பெண் கொண்டு சாப்பிடுகிறோமென்று சபதம் கோரிக் கொண்டு வந்து தன் ஊரிலே வந்து சேர்ந்து மனதிலே தனக்குத் தோணியிருக்கும் நாளையில் இவர் இஷ்டமான சர்வேஸ்வரரைத் தன்னுடைய அபீஷ்டம் சித்தியாக வேணுமென்று நினைச்சு இருக்கும் வேளையில் இராத்திரி சொப்பனத்திலே ஒரு விருத்த பிராமண ரூபமாய் வந்து இந்தச் சர்ப்பம் போகிற வழியாக வாய்க்கால் வெட்டி வைக்கச் சொல்லி காரணமாகச் சொப்பனமாச்சுது. அந்தச் சொப்பனமான உடனே கண் விழிச்சுப் பார்க்குமிடத்தில் ஒரு சர்ப்பம் பிரதிட்சமாக இருந்தது. தான் கண்டு இருக்கப்பட்ட சொப்ப

னத்தைக் கண்டு அறிய வேணுமென்று நினைச்சு வீடுகட்கு வெளியிலே வந்த சமயத்திலே சர்ப்பம் இவனைக் கண்டு முன்னே நடந்தது. அந்தச் சர்ப்பத்தைக் கண்டு தொடர்ந்து போய் இந்த வழியாகப் போகுதென்று அடையாளங்கள் போட்டுக் கொண்டு வருகிறபோது கொடுமுடி சேத்திரத்திலே சர்ப்பம் நின்றது. அந்தச் சர்ப்பம் போன போக்கிலே வாய்க்காலும் வெட்டி வைக்க வேணுமென்று நினைத்துப் பவானி ஆற்றிலே குறுக்கே அணை கட்டி வைக்கவேணுமென்கிறதாக நினைச்சிருந்த சமயத்தில் பவானிக்கூடல் ஸ்தானத்துக்கு மேல்புறத்தில் பவானி ஆற்றிலே சர்ப்பம் குறுக்கே படுத்துக்கொண்டது. அந்த இடத்திலே அணைகட்டி வைக்கவேணுமென்று பவானிக் கூடலுக்கு வடக்கே வூராச்சி மலையும் தடமும் சுத்தக் கிரயத்துக்கு வாங்கி அணை கட்டுகிற சமயத்திலே வெள்ளை வேட்டுவர் என்கிற பாளையக்காரன் அணை கட்டுகிற எல்லை தன்னதென்று சண்டை பண்ணினமையாலே வெள்ளை வேட்டுவரை ஜெயிச்சு அணையும் கட்டி வெகு திரவியங்கள் செலவளிச்சு சர்ப்பம் போயிருந்த அடையாளங்களைப் பிடிச்சு வாய்க்கால் வெட்டிவைச்சு பவானி அணை முதல் கொடுமுடி ஸ்தானத்து அத்து வரைக்கும் முக்காத வழி தூரத்துக்குச் சர்ப்பம் போன போக்கிலே வாய்க்கால் வெட்டின ஏழு காதவழி நடை கோணக் கோணலாக வாக்கியால் வெட்டி வச்சான்.

அந்தச் சர்ப்பம் போன போக்கிலே வாக்கியால் வெட்டி வச்சுப் பவானி ஆற்றிலே சர்ப்பம் படுத்துயிருந்த இடத்திலே அணையும் கட்டிவிச்ச படியினாலே காலிங்கக் கவுண்டன் என்று பேர் வரப்பட்டுப் பிரசித்திப் பட்டவனாய் இருக்கும் நாளையில் முன்னாலே சபதம் கோரியிருக்கப்பட்ட பண்ணை குலத்திலே தன் பிள்ளைக்குக் கலியாணமும் செய்து கொண்டு அம்ச புருஷனாய் தெய்வ கடாட்சத்தினாலே சம்பத்து நாமதேயமான ‘காலிங்கன்’ என்கிற நாமதேயமும்

வேளாள சாதியான படியினாலே 'கவுண்டர்' என்கிற நாமதேயமும் ரெண்டு நாமதேயமும் சேர்ந்து 'காலிங்கக் கவுண்டன்' என்கிற பேர் பிரசித்திப்பட்டவனாய் தான் கட்டி வைச்ச அணைக்குக் காலிங்கக் கவுண்டன் அணையென்றும், காலிங்கக் கவுண்டன் வாக்கியால் என்றும், தான் உண்டுபண்ணின நீர்ப்பாங்கு நிலத்தில் விளையப்பட்ட நெல்லுக்குக் 'காலிங்க நெல்லு' யென்றும் விளையப் பண்ணிச் சம்பந்த பாத்தியங்களும் செய்துகொண்டு இருந்தான்'''

என்பதே கால்வாய் வெட்டியதுபற்றி வமிசாவளி கூறும் செய்தியாகும். இன்றும் இந்நினைவு மாறாமல் 'காலிங்க ராயன் அணை' என்றும், வாய்க்கால் 'காலிங்கராயன் வாய்க்கால்' என்றும் அணையின் அருகிலுள்ள ஊர் 'காலிங்கராயன் பாளையம்' என்றும் வழங்கப்பெறுகின்றன. இக்கால்வாய் நீர்பாய்ந்து விளையும் நெல்லுக்குக் 'காலிங்க நெல்லு' என்று பெயர். இச்செயற்கரிய செயலைச் செய்த பெருந்தகையின் காலத்தில் இவன் பெயரால் காலிங்கராயன் காசு, காலிங்கராயன் பணம் என நாணயங்கள் வழக்கத்தில் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவற்றை நோக்கக் காலிங்கராயன்மீது நாட்டினர் கொண்ட அளப்பரிய பற்றை அறிகின்றோம்.

## ஆங்கிலநூல் கருத்து

'இந்தியாவின் ஆளுந்தலைவர்களும் பெருமக்களும் நிலக் கிழார்களும்' என்னும் ஆங்கில வரலாற்று நூலும் வமிசாவளிக் கருத்தைப் பெரும்பாலும் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனால் கனவில் தோன்றிக் கூறியவர் வெள்ளோடு சர்வலிங்கேஸ்வரன் என்பதற்குப் பதிலாகச் சுப்பிரமணிய சுவாமி கூறினார் என்றும், பாம்பு வழிகாட்டிச் சென்றது என்பதற்கு மாறாகப் பாம்பு சென்றிருந்த வழியையே பின்பற்றிக் கால்வாய் வெட்டினான் என்றும், அந்தப் பாம்பையும் மயில் துரத்திக்கொண்டு சென்றது என்றும் ஆங்கில நூல் கூறுகிறது. எனவே, அது முதற்

கொண்டு காலிங்கராயனுக்கும் அவன் பரம்பரையினர்க்கும் இன்றும் மயிலே குலத்தின் சின்னமாக விளங்குகிறது என்றும் கூறுகிறது. காலிங்கராயனுக்கு வழிகாட்டிச் சென்ற பாம்பின் பெயர் 'காலிங்கராயன்' என்று இந்நூல் கூறுகிறது. கண்ணபெருமான் அடக்கியது 'காலிங்கன்' என்ற பாம்பையே என்று புராணம் கூறும். இதனை உட்கொண்டு அவ்வாறு குறிப்பிட்டிருக்க வேண்டும்.

## காலம்

காலிங்கராயன் அணை கட்டிக் கால்வாய் வெட்டிய ஆண்டு கலியுக சகாப்தம் 2000 என்று வமிசாவளியும் ஆங்கில வரலாற்று நூலும் கூறுகின்றன. இவ்வாண்டு மிகைபடக் கூறலாகவே இருக்கின்றது. ஆனால் அவை இரண்டும் குறிப்பிடும் பரம்பரையினரின் ஆட்சியாண்டு களின் தொகைகளைக் கூட்டிப்பார்க்கும் பொழுது காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டுதான் வருகிறது. அக்காலமே கல்வெட்டுக்கள் அனைத்திலும் காலிங்கராயன் பெயர் கூறப் படும் காலமாகும். கி.பி.13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் களிலே மட்டுமே காலிங்கராயன் பெயரைக் காணுகின் றோம். தனிப்பாடலில் வீரபாண்டிய வேந்தமைச்சன் என்று கூறப்படுகிறது. கி.பி. 1800இல் எழுதப்பட்ட கைபீது, 582 ஆண்டுகட்கு முன்பு கால்வாய் வெட்டப் பட்டதாகக் 1800இல் கூறுகிறது. கால்வாயைப் பார்வையிட்ட புக்கானன் 400 ஆண்டுகட்கு முன்பு வெட்டப்பட்டது என்று கூறு கின்றார். கல்வெட்டுக்களின் கூற்றுப்படிக் கி.பி.1253இல் வீரபாண்டியனிடம் அரசியல் அலுவலனாக அமர்ந்த காலிங்கராயன் 12 ஆண்டுக் காலம் முயன்று கி.பி. 1265ஆம் ஆண்டு இப்பணியை முடித்தான் என்று நம்புவ தற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன.

## உதவியவர்கள் யார்?

வரலாற்றுக் குறிப்பெழுதிய புக்கானன் (1800) 'காலிங்கராயன் ஒரு செல்வந்தராகவும் செல்வாக்குப் பெற்ற

வராகவும் இருந்த காரணத்தினால் தன் சாதி மக்களிட மிருந்து கால்வாயின் தேவைக்கான பணத்தைத் திரட்டினார்' என்று கூறுகின்றார். இச் செய்தியையும் 'காலிங்கராயன் வினியோகம்' என்ற வரியையும் நோக்க இது உண்மைச் செய்தியாக இருக்கலாம் என்று கொள்ளுதல் வேண்டும்.

எலவமலை, காலிங்கராயன் பாளையம், குன்னத்தூர் வெள்ளிரவெளி போன்ற பகுதிகளில் காலிங்கராயர் தன் பங்காளிகளான சாத்தந்தை குலத்தாரைப் புதிய ஊர்களில் குடியேற்றியுள்ளார். எனவே அணை, கால்வாய்த் திருப்பணி கட்குப் பங்காளிகளின் துணை இருந்திருக்க வேண்டும் என உறுதியாக எண்ணலாம்.

பாண்டிய அரசனும் பிற அரசியல் அலுவலர்களும் உதவி செய்தமை குறித்து முன்னர்க் கண்டோம். செவிவழிச் செய்தி கூறுவது போலத் தாயார் தேடி வைத்திருந்த குடும்பச் சொத்தினைக் கொண்டும் காலிங்கராயன் அணை கட்டிக் கால்வாய் வெட்டியிருக்கலாம். ஆனால் வெள்ளோடு, அந்தியூர், பேரூர்க் கல்வெட்டுக்களின் மூலம் காலிங்கராயன் கம்மாளர் எனப்படும் ஆசாரிமார்களுக்குச் சில உரிமைகள் அளித்தமை குறித்து முன்னர்க் கண்டோம். அணை, கால்வாய்த் திருப்பணிக்கு ஆசாரிமார் மிகுதியும் உழைப் பால் உதவி செய்திருக்க வேண்டும்; அதனாலேயே உரிமை களை அம்மக்கள் பெற்றிருக்க வேண்டும் என ஊகிக்க வேண்டியிருக்கிறது. பல்வேறு இன மக்களின் உதவியுடன் சாத்தந்தை குலம் பங்காளிகளின் துணையுடன் நாட்டு நன்மைக்காகக் காலிங்கராயன் இப்பணியைச் செய்து முடித்திருக்க வேண்டும்.

## சாபத்தின் உண்மை என்ன?

செவிவழிச் செய்தியாக வழங்கும் வரலாற்றில் மற்றொரு செய்தி குறிக்கப்படுகிறது. காலிங்கராயன் திருப்பணிக்கு அவனுடைய தாயாதிகளான சாத்தந்தை

குலத்தினர் எவ்வித உதவியும் செய்யவில்லை; சிறிய குட்டைக் கொழுவைக்கூடக் கொடுக்க மறுத்தனர். மறுக்கவே காலிங்கராயன் தான் செய்த மாபெரும் பணி முடிந்தவுடன், தனக்கு ஒரு உதவியும் செய்யாத தன் தாயாதிகளான சாத்தந்தை குலத்தினரை அழைத்து, "நீங்கள் இக்கால்வாய்த் தண்ணீரைக் குடிக்கக்கூடாது. இக் கால்வாயிலிருந்து நீர் பாயும் நிலத்தை நீங்கள் உழுது பயிரிடக்கூடாது; அணை பெருகவேண்டும். உங்கள் குடி கருக வேண்டும்'' என்று கூறினார் என்பர். இதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. ஒருவன் ஓர் அறச்செயலைச் செய்கின்றான் என்றால் அவன் வழியினரே, அவன் குடும்பத் தினரே அந்த அறச்செயலின் பயனை நுகர்வதில் பங்கு கொள்ள விரும்பக் கூடாதல்லவா? அதுபோலச் சாத்தந்தை குலத்தாரின் துணையுடன் காலிங்கராயன் செய்த இம்மா பெரும் அறச்செயலில் அவர்கள் வழியினரே பங்கு கொள்வது நன்றன்று; அது பிறர்க்கே முழுவதும் பயன்பட வேண்டும் என்று அணை, கால்வாயைப் பயன்படுத்தாமல் சாத்தந்தை குலத்தினர் ஒதுங்கியிருந்தனர். இதுவே உண்மையாகும்.

காலிங்கராயர் பல்வேறு அறச்செயல்களைச் செய்தவர்; கோயில்களைக் கட்டியவர்; குளங்களை வெட்டியவர்; நாடெங்கும் வரி விதித்து வசூலித்தவர். பாண்டியர் அரசியல் அலுவலராகவும் ஆற்றல் படைத்தவராகவும் இருந்தவர். எனவே காலிங்கராயன் வழியினர் அவரை எதிர்த்திருக்க முடியாது. அமைதியான ஆட்சிக்காலத்தில் தான் அறச்செயல்கள் நடக்கும். எனவே பிற்காலத்தில் உண்மையறியாமல் சாப வரலாற்றைக் கற்பனையாக நாட்டில் வழங்கவிட்டிருக்க வேண்டும்.

வெள்ளோடு, கனகபுரம், கவுண்டச்சி பாளையம் கல்வெட்டுக்களிலும், நல்லணவேள் காதல் போன்ற இலக்கியங்களிலும், தனிப்பாடல்களிலும் சாத்தந்தை குலத்தினர் தாங்கள் காலிங்கராயன் வமிசத்தில் வந்தவர் கள் என்று பெருமையாகக் கூறிக்கொள்ளுகின்றனர். எனவே

எவ்வகையிலும் அவர்கள் காலிங்கராயனை மதித்துள்ளனர். காலிங்கராயனும் பங்காளிகள் மீது பகைகொள்ளவில்லை என்பதனையே அறிகின்றோம்.

## நாவிதன் கரையும் ஊரும்

காலிங்கராயன் அணை கட்டி முடிக்க ஆன 12 ஆண்டுகளும் சபதம் செய்து அது முடியும் வரை தாடி வைத்துக் கொண்டிருந்தார். "சீரில் பொலியும் தவம் இருந்து தெய்வ வானி அணைதேக்கி" என்பது பழம்பாடல் பகுதியாகும்.

அணை, கால்வாய் வேலைகள் முடிந்தவுடன் காலிங்கராயன் மிகுந்த சோர்வினால் அப்படியே படுத்து உறங்கிவிட்டார். அப்பொழுது குடும்ப நாவிதன் வந்து அவர் உறக்கம் கெடாத வகையில் தாடியை மழித்து எடுத்து விட்டான். காலிங்கராயன் விழித்து எழுந்தவுடன் மகிழ்ந்து நாவிதனைப் பார்த்து 'உன்னைப் பாராட்டுகின்றேன்; உனக்கு என்ன வேண்டும்' என்று கேட்டார். அப்போது தன் பெயர் நின்று நிலவ ஏதேனும் செய்ய வேண்டும் என்று நாவிதன் இறைஞ்சினான். காலிங்கராயன் மகிழ்ந்து காலிங்கராயன் கால்வாயின் முதல் கரையை நாவிதன் கரையென்று நாவினிக்க அழைத்தார். தன் பெயரிட்ட காலிங்கராயன் பாளையம் என்ற ஊருக்கு அருகில் நாவிதன்பாளையம் என்ற ஊருண்டாக்கிச் சருவமானியமாக அளித்தார்.

இதனை வமிசாவளியும் பின்வருமாறு நயமான நடையில் நவிலுகின்றது.

"இப்படி வாக்கியால் வெட்டி அணை கட்டி பிள்ளைக்குக் கலியாணம் பண்ணுகிற வரைக்கும் சபதம் கோரி தீட்சை வளர்த்துக் கொண்டுயிருக்கும் சமயத்தில் தெய்வ கடாட்சத்தினாலே மனோபீஷ்டம் நிறைவேறியிருக்கும் சமயத்தில் ஒரு நாசுவன் தீட்சை மயிரை வாங்கிப் போட்டு நிலைக் கண்ணாடியை

எதிரே வச்சு வணக்கத்துடனே நின்று கொண்டுயிருந்தான். நித்திரை தெளிஞ்சு நிலைக் கண்ணாடி பார்த்தவுடனே ஆயுஷ்காரமாய் இருந்தபடியினாலே சந்தோஷம் வந்து நாசுவனைப் பார்த்து உனக்கு என்ன வேணுமென்று கேட்டான். அந்த நாசுவன் என்பேர் விளங்கி இருக்கும்படியாகப் பண்ணவேணுமென்று மனுவு கேட்டுக் கொண்டான், தாம் கட்டி வைச்ச அணையோரம் தாம் இருக்கப்பட்ட காலிங்கன் பாளையத்துக்குத் தென்புறம் நாசுவன் பேராலே ஊரு உண்டு பண்ணி 'நாசுவன் பாளையம்' என்றும் பேர் விளங்கப் பண்ணி அந்த நாசுவனுக்கு அந்தப் பாளையம் சர்வமானியமாகக் கொடுத்தார்.

## தெய்வீகத் தன்மை

காலிங்கராயர் தவமிருந்து அணை கட்டிக் கால்வாய் வெட்டினார் என்று சென்னிமலையாண்டவர் பிள்ளைத் தமிழ் கூறுகிறது.

நாட்டுப்பாடல், வானிலிங்கேசுவரர் வேதநாயகி இருவரும் வரம் அருளக் காலிங்கராயர் இத்திருப்பணியை முடித்தார் என்று கூறுகிறது.

காலிங்கராயர் கைபீது வேதியர் வடிவில் கனவில் சிவபெருமான் வந்து கூறினார் என்றும், பாம்பு வழி காட்டியது என்றும் கூறுகிறது.

இவை அனைத்தும் தெய்வீக சக்தியால் அணை கட்டிக் கால்வாய் வெட்டப்பட்டது என்று கூறப்படுவது குறிப்பிடத் தக்கது.

## பல பெயர்கள்

காலிங்கராயன் கால்வாயைப் பல இடங்களில் 'கோண வாய்க்கால்' என்று அழைக்கின்றனர். கோணல் கோணலாகக் கால்வாய் இருப்பதே அதற்குக் காரணம். ஈரோட்டில் 'காரை வாய்க்கால்' என்று அழைக்கின்றனர். ஈரோட்டில் வாய்க்காலின் கீழே பெரும் பள்ளம் செல்லுகிறது; மேலே

காலிங்கராயன் கால்வாய் செல்லுகிறது. நீர் கசியாமல் இருக்கக் கால்வாய் காரையால் கட்டப்பட்டிருக்கிறது. எனவே 'காரை வாய்க்கால்' என்று அழைக்கின்றனர். இன்னும் பல இடங்களில் 'பவானி வாய்க்கால்' என்றும் சிறியதாக இருப்பதால் 'சின்ன வாய்க்கால்' என்றும், புதிதாகக் கீழ்பவானி வாய்க்கால் வெட்டப்பட்டிருப்பதால் காலிங்கராயண் கால்வாயைப் 'பழைய வாய்க்கால்' என்றும் பல இடங்களில் பல பெயர்களால் அழைக்கின்றனர். பலர் கால்வாய் என்ற சொல்லைக்கூடப் பின்னர் சேர்க்காமல் 'காலிங்சராயன்' என்ற தனிச் சொல்லாலேயே கால்வாயைக் குறிப்பர்.

## கோணலின் காரணம்

பவானி தொடங்கி நொய்யலில் கலக்கும் வரை காலிங்க ராயன் கால்வாய் மிகவும் கோணல் கோணலாக இருக்கிறது. அதனால்தான் 'கோண வாய்க்கால்' என்று கூறுகின்றனர். எனவேதான் பாம்பு வழிகாட்டியதாகக் கதை நாட்டில் உலவுகின்றது என அறிகின்றோம். ஆனால் இதன் உண்மை யான காரணம் என்ன?

பவானி அணை கடல் மட்டத்திலிருந்து 534 அடி உயரம். நொய்யலாற்றில் காலிங்கராயன் கால்வாய் கலக்குமிடம் கடல் மட்டத்திலிருந்து 412.48 அடி உயரம். நேராகப் பவானிக்கும் நொய்யலுக்கும் இடையில் உள்ள தூரம் 32கல். ஆனால் வளைந்து செல்லுவதால் கால்வாயின் நீளம் 57 கல் ஆகிறது. காலிங்கராயன் கால்வாய் பவானியிலிருந்து நேராக நொய்யல் வரை செல்லுமானால் வயலுக்குத் தண்ணீர் பாயாமல் நேராக விரைந்து ஓடி நொய்யலில் விழுந்துவிடும். எனவேதான் நீர் தேங்கி நின்று வயலுக்குப் பாய்ந்து வளப்படுத்துவதாகவும் நீரின் வேகத்தைக் குறைத்துக் கரைக்கு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவு களைத் தடுப்பதற்காகவும் கால்வாய் வளைந்து வளைந்து மேட்டுப்பாங்கான இடத்திலேயே தொடர்ந்து செல்லு

கிறது. இது காலிங்கராயனின் பொறியியல் திறத்தை நன்கு வெளிப்படுத்துகிறது.

## காஞ்சியில் கலத்தல்

காஞ்சி என்ற பெயரையுடைய நொய்யலாற்றில்தான் காலிங்கராயன் கால்வாய் இறுதியாகக் கலக்கிறது என்று முன்பே கண்டோம். 'மீ கொங்கில் அணிகாஞ்சி' என்று செந்தமிழ் வல்ல சுந்தரமூர்த்தி நாயனாரும் இந்நதியினைப் போற்றியுரைத்துள்ளார்.

திருப்பாண்டிக் கொடுமுடிக்குத் தெற்கே காலிங்கராயன் கால்வாயைத் தொடர்ந்து நாம் செல்வோமானால் காலிங்கராயன் கால்வாயின் அளவு சுருங்கியிருப்பதைக் காணலாம். 'வெங்கமேடு' அருகில் உள்ள நாகமநாயக்கன் பாளையத்தில் மிகச் சுருங்கிக் கழிவுநீர்க் கால்வாய் போல மாறித் தென்கிழக்கில் உள்ள ஆவுடையா பாறை என்றும் ஊரை நோக்கிச் செல்லுகிறது காலிங்கராயன் கால்வாய். ஆவுடையாபாறையில் புகைவண்டிப் பாதையை ஒரு சிறு பாலத்தின் மூலம் கடந்து தெற்கு நோக்கி ஓடி நொய்ய லாற்றில் கலக்கின்றது. இந்த இடத்தின் எதிர்க்கரையில் செல்லாண்டியம்மன் கோயில் இருக்கிறது. காலிங்கராயன் நொய்யலோடு கலக்கும் இந்த இடத்தைப் பொது மக்கள் 'கூடுதுறை' 'கூட்டாற்று மூலை' என அழைக்கின்றனர். இந்த இடத்தில் காலிங்கராயன் கால்வாயின் அகலம் சுமார் 3 அடியேயாகும்.

## கிளைக் கால்வாய்கள்

காலிங்கராயன் கால்வாயில் மூன்று கிளைக்கால்வாய் கள் உள்ளன.

1. மலையம்பாளையம் பிரிவு வாய்க்கால் :- காலிங்க ராயன் கால்வாயில் 31.6.430 மைலில் பழனிக்கவுண்டம் பாளையம் அருகே பிரிந்து சுமார் 4 மைல் தூரம் காலிங்க ராயன் கால்வாய்க்கு இணையாகவே ஓடி மலையம்

பாளையம் அருகே காலிங்கராயன் கால்வாயுடனே கலக்கிறது. இக்கால்வாய் சுமார் 675 ஏக்கர் நிலங்களை வளப்படுத்துகிறது.

2. பெரியபட்டம் பரிசோதனை வாய்க்கால் :-நாகம நாயக்கன் பாளையத்தில் காலிங்கராயன் கால்வாய் நொய்யலில் கலப்பதற்காக ஆவுடையா பாறையை நோக்கிப் பாயுமிடத்தில் ஒரு தடுப்பை ஏற்படுத்தி அங்கிருந்து ஒரு கால்வாயைத் தென்மேற்காகக் கொண்டு செல்லுகின்றனர். அது பெரியபட்டம் என்ற ஊரைக் கடந்து செட்டிபுள்ளா பாளையம் என்ற ஊரில் நொய்யலோடு கலக்கிறது. அதற்கும் காலிங்கராயன் கால்வாய் என்றே பெயர் கூறி அழைக்கின்றனர். ஆனால் இந்தப் பெரியபட்டம் கிளைக் கால்வாயைப் பற்றி வேறு சில செய்திகளும் இங்கு வழங்கப் பெறுகின்றன. இக்கால்வாய் 625 ஏக்கர் நிலத்திற்கு நீர் அளிக்கிறது. இதன் நீளம் 1.5.600 மைல் ஆகும்.

3. ஆவுடையாபாறை பிரிவு வாய்க்கால் :- ஆவுடையா பாறையில் காலிங்கராயன் கால்வாய் நொய்யலோடு கலக்கு மிடத்திற்கு அருகில் மைல் 56.5.234 இல் கால்வாயை ஒரு கலிங்கின் மூலமாகத் தடுத்துத் தண்ணீரை மேற்கு நோக்கிக் கொண்டு செல்லுகின்றனர். அதற்கும் 'காலிங்கராயன் கால்வாய்' என்றே பெயர் கூறுகின்றனர். இருநூறு ஏக்கர்களை வளப்படுத்தி இக்கால்வாய் 'புதுத்தோட்டம்' என்ற இடத்தில் நொய்யலோடு கலக்கிறது. இதற்குக் 'கல்லுக்கட்டுமடை' என்றும் பெயர் கூறுகின்றனர். 'ஆவுடையபாறைப் பிரிவு வாய்க்கால்' என்பது பொதுப் பணித்துறையினர் பெயர். இதன் நீளம் $\frac{1}{4}$ மைல்.

## பிற்காலத் திருப்பணி செய்த இருவர்
## வட்டக்கல் வலசு சின்னத்தம்பிக் கவுண்டர்

சுமார் நூறாண்டுகளுக்கு முன்னர் பெருமழை பெய்து வெள்ளப் பெருக்கெடுத்தது. அதன் காரணமாகப் பள்ளங்களில் ஓடிவந்த தண்ணீர் காலிங்கராயன் கால்வாயினுள் புகுந்து பல இடங்களில் கரைகள் உடைந்தன. பொதுப்

பணித்துறையினரால் விரைந்து பழுதுபார்க்க முடியாத அளவுக்கு உடைப்பு மிகுதியானதால் உழவர்கள் பெரிதும் துன்புற்றனர்.

அப்போது வட்டக்கல்வலசில் வாழ்ந்த கொங்கு வேளாளரில் கண்ண குலத்து நிலக்கிழாரான சின்னத்தம்பிக் கவுண்டர் அவர்கள் பெரும்பகுதிக் கால்வாய்க் கரைகளை அடைக்கத் திட்டமிட்டார்.

தம் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துரைத்தார். வட்டக்கல்வலசுச் சின்னத்தம்பிக் கவுண்டரின் நுண்ணறிவையும் விடாமுயற்சியையும் கண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் சின்னத்தம்பிக் கவுண்டருக்கு உதவி புரிந்தார். எங்கு வேண்டுமானாலும் சின்னத்தம்பிக் கவுண்டர் எவ்வளவு மரங்களை வேண்டுமானாலும் வெட்டிக்கொள்ளலாம். பாறைகளை உடைக்கலாம். மண் எடுக்கலாம். யாரையும் உதவிக்கு அழைத்துக்கொள்ளலாம் என்று சாசனம் எழுதித்தந்தார்.

தம் செல்வத்தாலும், செல்வாக்கினாலும், ஆட்களைத் திரட்டி அரிய முயற்சியால் சின்னத்தம்பிக் கவுண்டர் கால்வாய்க்கரைகளைப் பழுது பார்த்துக் கட்டினார். கால்வாய் முன்பு போலவே நன்றாக அமைந்து தண்ணீர் வந்தது. உழவர்கள் மகிழ்ந்தனர்.

## மணியம் காளியப்ப கவுண்டர்

சுமார் 75 ஆண்டுகட்கு முன்பு மணியம் காளியப்ப கவுண்டர் என்பவர் ஆவுடையாறை அருகே தண்ணீர் வீணாகச் சென்று நொய்யலில் கலப்பதைக் கண்டு வருந்தி ஆவுடையாபாறை அருகிலிருந்து கிளைக்கால்வாய் ஒன்றமைத்துப் பாசனத்திட்டம் ஒன்றை அளித்தார். அவரே முன்னின்று அந்தச் செயலை முடித்தார். இன்று அவர் அமைத்த திட்டம் நன்கு செயல்பட்டுப் பலநூறு ஏக்கர்கள் பாசனம் பெறுகின்றன. பெரியபட்டம் பரிசோதனைக் கால்வாய் என்பது இதன் பெயராகும்.

பிற்காலத்தில் பணிபுரிந்த இவர்கள் இருவரும் நம் பாராட்டுக்குரியவர்கள் ஆவர்.

## காலிங்கராயன் பவானியாற்றில் கட்டிய மற்றொரு அணை

டணாயக்கன் கோட்டை என்பது பவானி ஆற்றங்கரையில் இருந்த புகழ்வாய்ந்த பழைய கோட்டையாகும். இப்போது அக்கோட்டை கீழ்பவானி அணையில் மூழ்கி விட்டது.

டணாயக்கன் கோட்டைப் பகுதியில் ஊருக்குச் சற்று மேற்கே பவானி ஆற்றில் அணை ஒன்று கட்டிச் சிதைந்த நிலையிலும் 1800 வாக்கில் 400 ஏக்கர் நிலத்திற்குப் பாய்ந்து வந்தது. கீழ்பவானி அணை கட்டியபின் இந்த அணை முழுவதும் அணையினுள் மறைந்து விட்டது. 1799இல் மேக்ளியாட் இந்த அணையைப் பழுதுபார்த்தார். தூர்ந்த கால்வாயைச் செப்பனிட்டார்.

இந்த அணைக்கட்டைக் கட்டியவர் வேளாளர் லிங்கையன் என்பவர் என்று ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது. 1933ஆம் ஆண்டு டிசம்பர் 29இல் வெளிவந்த முல்லைக்கொடி என்னும் மாத இதழில் இந்த அணை பற்றிய குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

காலிங்கராயன் அணை கட்டின பட்டயம் மூலம் காலிங்கராயனின் இயற்பெயர் லிங்கையன் என்பதனை அறிகின்றோம். டணாயக்கன் கோட்டை அணை தொன்மையானதாகவும் உள்ளது. எனவே பவானியின் இறுதியில் அணை கட்டிய காலிங்கராயன் பவானியின் தொடக்கப்பகுதியிலும் அணை கட்டியுள்ளார் என்பதைத் தெளிவாக அறிகின்றோம். இது மிகவும் அரிய செய்தியாகும். புக்கானன் எழுதிய யாத்திரைக் குறிப்புக்களிலும் இந்த அணைபற்றிக் கூறப்பட்டுள்ளது. அவருடைய குறிப்பிலும் இவ்வணை கட்டியவர் பெயர் லிங்கையன் என்றே காணப்படுகிறது.

## அண்ணலும் அறப்பணிகளும்

காலிங்கராயன் கொங்கு நாட்டின் அரசியல் தலைவ ராகப் பூந்துறை நாட்டு வெள்ளோட்டில் வீற்றிருந்தபோது கொங்கு நாடெங்கும் பற்பல அறப்பணிகளைச் சிறப்புடன் செய்துள்ளார். குளங்கள் வெட்டுதல், கோயில் கட்டுதல், பழங்கோயில்களைப் புதுப்பித்தல், ஊர் உண்டாக்குதல், மக்களைக் குடியேற்றுதல், மக்களுக்கு உரிமைகள் அளித்தல் போன்ற பல்வேறு நயத்தகு நற்செயல்களைச் செய்துள் ளமையைக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் சிறப்பித்துப் பேசுகின்றன.

### குளங்கள் வெட்டுதல்

கடியலூர் உருத்திரங் கண்ணனார் பட்டினப்பாலை என்னும் சங்க இலக்கியத்தில் கரிகாலனைப் புகழும்போது அவன் 'காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கினான்' என்று குறிப்பிடுகின்றார். காவிரிக்குக் கரை கட்டுவித்துக் கல்லணையை உண்டாக்கிய கரிகாலனைப் போலவே கொங்கு நாட்டிலும் பற்பல திருப்பணிகளைக் காலிங்கராயன் செய்துள்ளார். எனவே உருத்திரங் கண்ணனாரின் புகழ்ச்சி காலிங்கராயனுக்கும் பொருந்தும்.

வீரபாண்டியனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் கி.பி. 1255இல் கொங்குக் குறுப்பு நாட்டு விசயமங்கலத்தின் ஒரு பகுதியாகிய வானாகப் புத்தூருக்குக் காலிங்கராயன் சென்றார் அங்கிருந்த வாகைக்குளம் நெடுநாள் பாழ்பட்டுக் கிடப்பதாகக் கேள்விப்பட்டார். அதைப் பழுது பார்க்குமாறு குறுப்பு நாட்டுச் சபையாருக்கு ஆணையிட்டு அதற்கு வேண்டும் பொருட்செலவையும் எதிர்காலத்தில் குளத்தைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் ஆகும் செலவையும் விசயமங்

கலம் ஊர்ச்சபையார் கொடுக்கவேண்டும் என்றுகாலிங்க ராயன் கட்டளையிட்டார். திருப்பணி செய்யப்பெற்ற இக் குளத்திற்குத் தன் அரசன் பெயரால் 'வீரபாண்டியப்பேரேரி' என்று பெயர் வைத்தார். இன்றும் அக்குளம் விசயமங்கலத் தில் உள்ளது.

கொடுமுடி தேவத்தான ஊராகிய விதரியான திருச்சிற்றம்பல நல்லூரில் ஒரு குளம் பாழ்பட்டு மழை பெய்து நீர் நிறையும் காலத்தில்கூட உடைவு குலைவுபட்டுக் கிடந்தது. கி.பி. 1256ஆம் ஆண்டு காலிங்கராயன் இக் குளத்தை அடைத்துத் திருத்தி 'வெள்ளைக்குளம் வரகுணன்' என்று பெயரிட்டார். இப்பெயர் பாண்டியர்தம் முன்னோர் கள்மீது காலிங்கராயன் கொண்ட பற்றைக் காட்டுகிறது.

வீரபாண்டியனின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1260) வெள்ளோட்டிலுள்ள சிறிய குளத்தையும் பெரிய குளத்தையும் கனகபுரத்தில் ஒரு குளத்தையும் குறுக்குக் குளத்தையும் காலிங்கராயன் வெட்டுவித்தார்.

கி.பி. 1264ஆம் ஆண்டு (கோபி வட்டம்) எலத்தூரில் உள்ள குளம் உடைத்துக் கொள்ளவே காலிங்கராயன் அதனை அடைத்துத் திருத்தினார்.

வீரபாண்டியனுடைய 24ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1274) சர்க்கார் பெரியபாளையத்தில் உள்ள நல்லாட்டுக் குளத்தைச் செப்பனிட்டார்.

## கோயில் கட்டுதல்

வெள்ளோட்டுச் சிவன் கோயிலைக் காலிங்கராயன் தான் திருப்பணி செய்து புதுப்பித்துக் கட்டினார் என்று 'தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்வர பாடகவல்லி நாச்சியார் தேவஸ்தானம் சீரணோத்தாரணம் பண்ணிக் கொண்டு இருந்தான்' என்னும் பகுதியால் வமிசாவளி தெரிவிக்கின்றது. 'இந்தியாவை ஆளும் தலைவர்களும்

பெருமக்களும் ஜமீன்தார்களும்' என்ற ஆங்கில வரலாற்று நூலும் அதை உறுதிப்படுத்துகின்றது.

திங்களூரில் உள்ள பெருமாள் கோயிலைக் கட்டி அதற்குச் 'சுந்தர பாண்டிய விண்ணகரம்' என்று காலிங்க ராயன் பெயரிட்டதாய்த் திங்களூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது.

நாகமலை என்று சிறப்புப் பெயரையுடைய திருச் செங்கோடு அர்த்தநாரீசுவரர்க்குக் காலிங்கராயன் பல திருப்பணிகளைச் செய்ததாகவும் கொடைகள் அளித்ததாக வும் அறிகின்றோம். இதனைத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை சிறப்புடன் குறிப்பிடுகிறது.

வெள்ளோட்டின் வடக்கே கவுண்டச்சிபாளையம் அருகேயுள்ள பாலமடை அம்மன் கோயிலை அணை கட்டு வதற்கு முன்பாகக் காலிங்கராயன் கட்டினார். பாலமடை அம்மனை அணைப்பகுதிக்கே எடுத்துக் கொண்டு சென்று பிரதிட்டை செய்யக் காலிங்கராயன் எண்ணியதாகவும் ஆனால் இப்பொழுது அம்மன் கோயில் இருக்குமிடம் வந்த வுடன் அம்மன் பெயர மறுத்து அங்கேயே குடிகொண்ட தாகவும் ஆகவே அந்த அம்மனைக் காலிங்கராயன் தான் கட்டிய அணையை நோக்கி இருக்கும்படிப் பிரதிட்டை செய்ததாகவும் கூறுவர். அக்கோயில் கல்வெட்டில் அம்மன் பெயர் பாலமுடி அம்மன் என உள்ளது.

ஊற்றுக்குழியிலேயுள்ள அகத்தூர் அம்மன் ஆலயத்தைக் கட்டியவர் காலிங்கராயரே! இச்செய்தியைப் பின்வரும் வமிசாவளிப் பகுதி விளக்கும்.

> "ஊத்துக்குழிக்கு வந்து, பின்னர் இராய சமஸ் தானத்திலே தமக்கு கனவிலே பிரசன்னமான இஷ்ட தெய்வத்தைக் கோரி பிரார்த்தனை பண்ணி அகத்தூர் அம்மனென்று நிதர்சனமாக்கப்பட்ட தேவாலயம், சீரணோத்தாரணம் பண்ணி அகத்தூர் அம்மன் என்று

பேர் பிரசித்தி படும்படியாய்ப் பூசை நைவேத்தியங்கள் செய்விச்சுக் கொண்டு"

எனவரும் பகுதியால் அறியலாம். அகத்தூர் அம்மன் கோயில் கல்வெட்டுக்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இன்றும் காலிங்கராயர் வமிசத்தினரின் குலதெய்வம் அகத்தூர் அம்மன் எனப் புகழ்பெற்றுச் சிறப்புடன் விளங்குகிறது.

இன்னும் பல கோயில்கட்கு நந்தா விளக்கெரிக்கவும் கோயில் திருப்பணிகட்காகவும் திருநாள் கொண்டாடவும் காலிங்கராயன் நிவந்தம் விட்டதாகக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். வேறு பலர் செய்த இவைபோன்ற பல்வேறு அறச்செயல்களை முன்னின்று திறம்பட நடத்தியதாகவும் கல்வெட்டுக்கள் முரசறைகின்றன.

**ஊர் உண்டாக்குதல்**

காலிங்கராயன் செய்த பல அறச்செயல்களுக்கு மிகவும் உதவியாக இருந்தவர் கச்சிராயன் என்ற பாண்டியர் அரசியல் அதிகாரி ஒருவர். கச்சிராயன் செய்த உதவிகளை எண்ணிச் செய்ந்நன்றி மறவாச் செம்மலாகிய காலிங்கராயன் அவர் பெயர் என்றும் நாட்டில் நின்று நிலவும் பொருட்டு அவர் பெயரில் கச்சிராயநல்லூர் என்னும் ஊர் ஒன்றை உண்டாக்கினார். கி.பி. 1263ஆம் ஆண்டு வீர பாண்டியனின் பிறந்த நாளன்று கரூர் அருகே உள்ள அவ் ஊர்ப் பகுதியில் நெடுநாள் பாழ்பட்டுக் கிடந்த வழிப்போக்கி நத்தத்தைத் திருத்தினார். நன்செய், புன்செய், தோட்டம் இவைகளைச் செப்பனிட்டு அப்பகுதியில் மக்களைக் குடியேற்றினார்.

குறுப்பு நாட்டில் குன்னத்தூர் (குன்றத்தூர்) அருகே காடாக இருந்த பகுதியை அழித்து நாடாக்கி வெள்ளிரவெளி என்ற ஊரை உண்டாக்கினார். குன்னத்தூர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் கல்வெட்டு இவ்வூரைக் 'காடுபிடித்தழித்துக் கொண்ட வெள்ளிரவெளி' என்று குறிப்பிடுகின்றது.

காலிங்கராயன் அணைப்பகுதியில் உள்ள காலிங்க ராயன் பாளையம் என்று வழங்கப்பெறும் நாவிதம் பாளையம் காலிங்கராயன் உண்டாக்கிய ஊரேயாகும். இவ்வூர் அணை நாசுவம் பாளையம், மேட்டு நாசுவம் பாளையம் என இரண்டு பகுதிகளாக வழங்கப்படுகிறது. பொள்ளாச்சி அருகேயுள்ள ஊத்துக்குளியைக் காலிங்க ராயன்தான் முதன் முதலில் மக்கள்வாழும் வண்ணம் ஊராக அமைத்தவர். ஊத்துக்குளி உள்ள காவிடிக்கா நாட்டின் பல பகுதிகள் முன்பு சேரமான் பெருமாள் நாயனாரால் சாத்தந்தை குலத்தாருக்கு மானியமாக விடப்பட்டிருந்தன. ஏற்கெனவே காலிங்கராயனுடைய மாட்டுப் பட்டிகள் அங்கு இருந்தன. வெள்ளோட்டை விட்டுச் சென்ற காலிங்க ராயர் நேராக அங்கு சென்றார். மாடுகள் நீர் குடிக்க ஊற்றுக்கள் தோண்டியுள்ள இடத்தில் ஊர் அமைத்தார். அதனை 'ஊற்றுக்குழி' என்றனர். இன்று ஊற்றுக்குழியில் உள்ள கிணறே அவர் ஏற்படுத்திய 'ஊற்றுக்குழி' என்பர். அங்கு கல்வெட்டும் உள்ளது. இன்று அப்பெயரே மக்கள் நாவில் மருவி ஊத்துக்குளி என்று வழங்கி வருகின்றது. வேறு ஊத்துக்குளிகளிலிருந்து பிரித்துக் காட்டும் பொருட்டு அதனை ஜமீன் ஊத்துக்குளி என அழைத்தனர்.

## மக்களுக்கு உரிமைகள் அளித்தல்

கொங்கு நாட்டில் வேளாளர் வாழுமிடங்களில் கம்மாளர் எனப்படும் ஆசாரிகள் குலத்தார் வாழ்ந்தால் கால்களுக்குச் செருப்பு அணிந்துகொண்டு செல்லக்கூடாது; வீடுகட்குச் சுண்ணாம்பு முதலிய சாந்துகள் எவையும் பூசக் கூடாது; அவர்கள் வீடுகளில் மங்கல காரியங்கள் நடந்தால் அல்லது தீய காரியங்கள் நடந்தால் மங்கலவாத்தியங்கள், பேரிகை முதலியன வாசிக்கக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்துக் கட்டளையிட்டனர். ஆனால் வீரபாண்டியன் ஆட்சியின் 15ஆம் ஆட்சியாண்டான கி.பி. 1265 முதல் அவர்களுக்கு இத்தடை நீங்கியது. இத்தடையை நீக்கி அவர்கட்கு அரசன் சார்பில் உரிமை அளித்தவர் நமது

காலிங்கராயர்தான்! இவ்வுரிமையைச் சோழ மன்னர் அளித்ததாகக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது. ஆனால் வெள்ளோட்டுக் கல்வெட்டில் வீரபாண்டியன் காலத்தில் இவ்வுரிமைகள் அளிக்கப்பெற்றதாகத் தெளிவாக உள்ளது. கொங்கு நாட்டின் பிற பகுதிக் கல்வெட்டுக்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. அக்கல்வெட்டுப் பகுதியைக் கீழே காணலாம்.

> "சுபமஸ்து ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 15ஆவது சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்திகள் கோனேரிமேல் கொண்டான் காங்கய நாடும் பூந்துறை நாடும் உள்ளிட்ட பற்றில் கண்மாளர்க்குத் தங்களுக்கு நன்மை தின்மைக்குப் பதினஞ்சாவது ஆடி மாதம் முதல் இரட்டைச் சங்கும் ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்வதாகவும் தங்கள் வீடுகளுக்குச் சாந்திட்டுக் கொள்ளவும் தாங்கள் புறப்பட வேண்டுமிடங்களுக்குப் பாதரட்சை கோத்துக் கொள்ளவும் சொன்னோம். இப்படிக்கு நம்மோலை பிடிபாடாகக் கொண்டு ஆசந்திராதித்தவரை செல்வதாகத் தங்களுக்கு வேண்டுமிடங்களிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க இவை காலிங்கராயன் எழுத்து யாண்டு 15 நாள் 129"

இக்கல்வெட்டிலிருந்து காலிங்கராயன் காலம் வரை இந்தத் தடை இருந்ததென்றும் காலிங்சராயன் இந்தத் தடையை உடைத்தெறிந்தான் என்றும் அறிகின்றோம். கொங்கு நந்த வரலாற்று ஆய்வாளர் கோவைக் கிழார் அவர்கள் கோனேரின்மை கொண்டான் என்ற பெயர் சோழன் எனக் கொண்டு இவ்வுரிமைகளை அளித்தவன் சோழன் என்பார். இவ்வாறு பாண்டியர்களும் கோனேரின்மை கொண்டான் என்று பெயர் வைத்துக் கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். வெள்ளோடு சிவாலயத்தில் கோனேரின்மை கொண்டான் என்ற பெயரோடு ஸ்ரீ வீரபாண்டிய தேவன் என்ற பெயரும் இணைந்து வருகிறது. கல்வெட்டின்

இறுதியில் காலிங்கராயன் கையொப்பமும் உள்ளது. எனவே இவ்வுரிமைகளை பாண்டியர் சார்பில் கொங்கு நாட்டுப் பகுதியில் அளித்து நிறைவேற்றியவர் காலிங்கராயரே என்று அறியலாம்.

காலிங்கராயன் அளித்த கம்மாளரின் உரிமைகள் எங்கெங்கு மறுக்கப்படுகிறதோ அவ்விடங்களிலும், கம்மாளர் விரும்பும் பிற இடங்களிலும் "கல்லிலும் செம்பிலும் இந்த ஆணையை வெட்டிக் கொள்க" என்று காலிங்கராயன் உரிமை அளித்துள்ளான். இதுபோன்ற உரிமைச் சாசனங் கள் பூந்துறை காங்கேய நாட்டு உரிமைக்காக வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கோயிலிலும் தென் கொங்கு நாட்டு உரிமைக்காகப் பேரூர்ப் பட்டீசுவரர் கோயிலிலும், வடகொங்கில் வடகரை நாட்டு உரிமைக்காக அந்தியூர் செல்லீசுவரசுவாமி கோயிலிலும் குடிமங்கலம் சோழீசுவரர் கோயிலில் தென்கொங்கு நாட்டிற்காகவும் கரூர்ப் பசுபதீசு வரர் கோயிலில் வெங்கால நாட்டிற்காகவும் பாரியூர் அமரபரணீசுவரர் கோயிலில் காஞ்சிக் கூவல் நாட்டிற்காக வும் மொடச்சூர் மெய்ப்பொருள் நாதர் கோயிலில் தலையூர் நாடு முதலிய ஏழு நாடுகளுக்காகவும் கல்வெட்டுக்கள் இருப்பதை இன்றும் காணலாம்.

இவைகளின் மூலம் காலிங்கராயன் மக்கள் நல்வாழ்க்கை யில் நாட்டம் கொண்டிருந்தவர் என்றும், எளியோர்க்கிரங் கும் இதயம் கொண்டவர் என்றும் அறிகின்றோம்.

பாண்டிய மன்னர்களின் பண்புடைத் தலைவராக விளங்கிய காலிங்கராயன் மக்கள் நலம் பேணி நாட்டு நலத்தின் பொருட்டு நல்லாட்சி நடத்திய நல்லமைச்சராக விளங்கி அழியாப் புகழ்பெற்று விளங்கினார். அவர் ஆற்றிய அரும்பணிகள் இன்றும், என்றென்றும் அவர் புகழ்பாடும் அழியாக் காவியமாக நின்று நிலவுகிறது. 'மாவிசயம் பெறு காலிங்கன்' என்று கொங்குமண்டல சதகம் கூறுவதால் பாண்டியர் பொருட்டுப் படைநடத்திக் காலிங்கராயன் கவினுறு வெற்றிகளும் அடைந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது.

# தெய்வமாகக் கொள்ளல்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது வான்புகழ் வள்ளுவரின் வாய்மொழி. கொங்கு நாட்டு வேளாளர்களின் உரிமையுடைய காணித் தெய்வங்கள் பலவும் உலகில் பிறந்து தலைமைப் பண்புகளுடன் பிறர்க்காக வாழ்ந்த பெருமக்களே ஆவர். குடித்தலைவர்களாக விளங்கிக் கோயிலில் குடிகொள்ளும் தெய்வங்களாக அவர்கள் வாழ்வில் உயர்ந்தனர். குன்றுடையாக் கவுண்டர் மக்களான பொன்னரும் சங்கரும் அண்ணன்மார்களாகக் கொங்கு நாடெங்கும் வீற்றிருந்து கொங்கு நாட்டுக் குடிமக்கள் அனைவருக்கும் அருள் தந்து வாழ்வித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது நாமெல்லாம் அறிந்த உண்மையாகும். அப்பிச்சிமார், குப்பியண்ணன், ராவுத்தணன், நாட்டுராயன் முதலிய கொங்கு வேளாளர்களின் காணித் தெய்வங்களும் இவ்வுலகில் பிறந்து இணையில்லாப் புகழுடன் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமக்களே ஆவர். காலிங்கராயன் பிறந்த சாத்தந்தை குலத்துக் குல தெய்வமான வெள்ளோடு 'இராசா'வும் இவ்வுலகில் தோன்றிப் பீடுற வாழ்ந்த ஒரு தெய்வீகப் பெருமகனே ஆவார். வெள்ளோடு இராசாக் கோயிலில் தெய்வமாக நின்று என்றும் அந்த இணையற்ற தெய்வத்திருஉரு மக்களை வாழ்வித்து வருகிறது.

## காலிங்கராய தெய்வம்!

எல்லையில்லாப் பெரும் புகழுடன் பாண்டிய மன்னர் படைத்தலைவராகவும் அமைச்சராகவும் விளங்கி, உலகு போற்றும் உயர்பணிகள் பலவற்றைக் கொங்கு நாட்டினர் பொருட்டுச் செய்த நம் கொங்குவேளாள சாத்தந்தை குலக்

குரிசில் காலிங்கராயனைப் பிற்காலத்தில் தெய்வமாகவே கொங்கு நாட்டு மக்கள் வழிபட்டனர். காலிங்கராயன் அணையின் இடையில் வளமுடன் அமைந்துள்ள தீவான அணைத்தோப்பு என்னும் சோலையில் காலிங்கராயனுக்குக் கோயில் ஒன்று கட்டியுள்ளனர். ஆண்டுதோறும் அக் கோயிலுக்கு விழாவும் நடத்தி வந்தனர். காலிங்கராயனுக்கு மட்டுமல்ல அவருக்குக் கால்வாய் வெட்ட வழிகாட்டிய பாம்புக்கும் கோயில் அமைத்தனர் என்பதையும் சில சான்று களால் நாம் அறிகின்றோம்.

## அணைத்தோப்பில் ஆலயம்

காலிங்கராயன் அணையின் இடையில் உள்ள தீவில் அமைந்துள்ள தோப்பில் 'உத்தரராயன் கோயில்' என்னும் பெயருடன் கோயில் ஒன்றுள்ளது. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் கொங்கு நாடு பாண்டியர் ஆட்சிக்குட்பட்டுப் பாண்டிய நாட்டின் வடக்கு எல்லையாக இருந்தது. எனவே வீரபாண்டியன் தன் நாட்டின் வடபகுதியாகிய கொங்கு நாட்டிற்கு அரசனைப் போல விளங்கிய அரசியல் அதிகாரி யாகிய காலிங்கராயனுக்கு 'உத்தரராயன்' என்ற பட்டப் பெயரை அளித்தனன் (உத்தரம்—வடக்கு; ராயன்—ராசன்-அரசன்). காலிங்கராயனுக்கு 'உத்தர மந்திரி' என்ற பட்டப் பெயரும் இருப்பதைத் திருமுருகன்பூண்டி முருகநாதர் கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. பாண்டியனுக்காக ஆணையிடும் அமைச்சர் என்றும் உத்தர மந்திரி என்பதற்குப் பொருள் கொள்ளலாம்.

இன்று அந்த உத்தரராயன் கோயிலில் உருவ அமைப்பில் சிலைகள் ஒன்றும் இல்லை. உத்தரராயன் என்ற சிறப்புப் பெயரையுடைய காலிங்கராயனுக்கு முன்பு சிலை வடித்துப் பிரதிட்டை செய்து வணங்கியிருப்பர். காலவெள்ளத்தில் அஃது அழிந்துவிட்டது போலும்.

அக்கோயிலில் உள்ள வேறு ஒரு கடவுளுக்குப் 'பெத்தாரையன்' என்று பெயர் கூறுகின்றனர். அது

பெற்றாரையன் என்னும் சொல்லின் திரிபாக இருக்கலாம். அவர் 'காலிங்கராயனைப் பெற்றாரையனாக' அதாவது காலிங்கராயனின் தந்தையாக இருக்கவேண்டும். ஒரு சிறந்த தலைவனைப் பெற்றெடுத்த பெற்றோருக்குச் சிலை வைத்து வழிபடுவது பண்டைய வழக்கம். உத்தம சோழனின் தாயார் செம்பியன் மாதேவிக்குச் சிலை வைத்து வழிபட்டனர். அவரை 'ஸ்ரீ மதுராந்தக சோழ தேவரான உத்தம சோழ தேவரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவி" என்று கல்வெட்டுக்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. எனவே காலிங்கராயனுக்கும் காலிங்கராயனின் தந்தைக்கும் நாட்டினர் நன்றி மறவாது அக்கோயிலைக் கட்டினர் என்பது புலனாகும்.

## தலைமதகில் தெய்வத் திருவுரு

காலிங்கராயன் அணையின் தலைமதகின் அருகில் உள்பக்கம் இடப்புறம் கிழக்கு நோக்கி ஒரு சிறிய மேடையும் அதன்மீது ஒரு பாம்பின் சிலையும் இருக்கின்றது. பாம்பின் அருகில் மேடையில் ஒருசிலை இருக்க வேண்டிய இடம் காலியாக உள்ளது. அங்குச் சிலை இல்லை; ஆனால் காலிங்கராயனின் சிலையைப் பிரதிட்டை செய்திருந்த இடம் அதுவாகவே இருக்கலாம் என ஊகிக்க முடியும். பீடத்தில் கிழக்கு நோக்கி ஒரு தூண் பதிக்கப்பட்டுள்ளது. அதில் அரசக்கோலத்துடன் சிலை ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. அந்தச்சிலை காலிங்கராயன் சிலையாக இருக்கலாம். கல்வெட்டு ஒன்றும் அங்கே காணப்படவில்லை. சாசனம் இருப்பதாக வமிசாவளி கூறுகிறது. ஆனால் அஃதிருக்கும் இடம் தெரியவில்லை.

மேலே குறிப்பிட்ட இவ்விரண்டிடங்களில் ஒன்றுதான் முதலில் காலிங்கராயனுக்கு ஏற்பட்ட கோயிலாக இருக்க வேண்டும். முதலில் அணைத்தோப்பில்தான் கோயில் கட்டியிருப்பர். பவானியாற்றில் மிகுதியாக நீர் வரும் காலங்களில் ஆற்றைக் கடந்து அங்கு சென்று வழிபட இடையூறாக

இருந்திருக்கும். எனவே அணைமுகப்பில் தலைமதகின் அருகில் வேறு கோயில் அமைந்திருக்க வேண்டும் இச் கோயில் அமைப்பை வமிசாவளியும் ஏற்றுக் கொள்கிறது.

## வமிசாவளியில் தெய்வீகக் குறிப்பு

வமிசாவளி பின்வருமாறு கோயில் கட்டிச் சிலை யெடுத்து வழிபட்ட அச்செய்தியைக் குறிப்பிடுகிறது.

"காலிங்கக் கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட அணை யிலே கவுண்டனையும் சர்ப்பத்தையும் சிலா பிரதிமை ரூபமாகக் கல் வெட்டி வச்சுச் சிலா சாசனமும் எழுதி யிருக்கிறது. அந்த அணை போட்டு இருக்கப்பட்ட இடத்தில் குடிகள் பரம்பரையாய் வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக் கொண்டு வருகிறது. வருஷப் பிரதியும் காலிங்கக் கவுண்டன் பிரதிமைக்குப் பூசை நைவேத்தியம் பண்ணிக்கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாண்மை விளைஞ்சு கொண்டு வருகிறது இப்படி ஈஸ்வரர் அனுக்கிரகத்தினாலே ரொம்ப மூர்த்தி கரம் உண்டாயிருக்கிறது"

இதன்படிக் காலிங்கராயன் பிரதிமைக்கு வருடம்தோறும் வழிபாடு நடத்துவதன் மூலமே தவறாமல் மழை பெய்கிற தென்றும் அதன் மூலமாக வானியாற்றில் வெள்ளம் வந்து பூமி விளைகிறது என்றும் மக்கள் நம்பினர் என்பதையும் காலிங்கராயன் மீது முன்னோராகிய கொங்குநாட்டுக் குடி மக்கள் அளவிறந்த பற்றுக் கொண்டிருந்தனர் என்பதையும் நாமறிகின்றோம்.

## ஆங்கில நூலின் கருத்து

காலிங்கராயன் பரம்பரையில் வந்தவர்கள் மட்டுமல்ல, கொங்கு நாட்டு வேளாளர்கள் அனைவரும் காலிங்க ராயனையும் வழிகாட்டிய பாம்பையும் தெய்வமாகவே வழிபட்டனர் என்பதை 'இந்தியாவின் ஆளுந்தலைவர்களும்

பெருமக்களும் நிலக்கிழார்களும்' என்னும் ஆங்கில வரலாற்று நூல் கூறுகிறது.

> Stone statues of Kalingarayar and the serpent were placed near the anicut, and festivals and Pujas were performed by his descendants and other ryots

என்பது அந்நூல் கூறும் பகுதியாகும்.

## பள்ளு நூலில்

'ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு' என்னும் நயத்தகு நாடக நூலில் காலிங்கராயன் பெற்ற தெய்வத் தன்மை இரண்டு முக்கியமான இடங்களில் விளக்கப்படுகிறது. அப்பள்ளு நாடக நூலை மேடையில் நடித்துக் காட்டியவர் சஞ்சீவி என்பவர். எங்கு? வேளாளர்கள் கூடிய அவையில்; இதைக் கூறுகின்ற ஆசிரியர் புலவர் கரூர் முத்துக்கருப்பனார், அந்த வேளாளர்கள் காலிங்கராயனின் கருணையினால் தான் வாழ்கிறார்கள் என்றும், அவர்கள் வாழ்வும் உழவுத் தொழிலும் மேன்மேலும் ஓங்குவதற்குக் காரணம் அவர் களுக்குக் காலிங்கராயன் கருணை இருப்பதுதான் என்றும் பாடுகின்றார்.

"காலிங்க ராயன் கடாட்சத்து னாலே
சாலவே இந்தத் தரணியில் வாழும்
குடியான வர்கள் கூடிய சபையில்
வடிவான பள்ளை வந்துமே ஆடிய"

தாகவும் சஞ்சீவி தனக்குச் சதுருடன் செம்பொன்னை அவர் கள் கொடுத்ததாகவும் அறிகின்றோம்.

பள்ளு நூலில் மற்றுமொரு இன்றியமையாத குறிப்பைக் காண்கின்றோம். மழைவேண்டும் என்று ஆண்டானிடம் பணிபுரியும் பள்ளர்கள் வேண்டிக் கொள்ளுமுன் மணிய காரன் வந்து இச்சையாகிய தேவதை தங்கட்கு ஏற்கவே

பூசை செய்யுமாறு கட்டளையிடுகின்றான். அதைக் கேட்ட பள்ளர்கள் ஈரோட்டுத் தலத்தில் உள்ள விநாயகன், முருகன், வள்ளி, தெய்வயானை, ஐயனார், தொண்டீசுவரர், வாரணியம்மன், கலியுகவரதர், கமலவல்லித்தாயார், கொங்கிலம்மன், கொல்லிவாய்க் கருப்பன் போன்ற எல்லாத் தெய்வங்கட்கும் பூசை நடத்துகின்றனர். தெய்வத் திருமேனிகட்கும் வழிபாட்டுக்கும் வேண்டிய பொருள் அனைத்தும் விரும்பிக் கொடுக்கின்றனர்.

வாரணி அம்மனுக்குப் பொன் கலமும், மங்கலகிரிவாச ருக்குத் தங்கக் கிரீடமும் அளிக்கின்றனர். இத்தெய்வங்களை வழிபடுவதற்கிடையில் காலிங்கராயனையும் அவர்கள் மறக்கவில்லை. பள்ளர்களின் வேளாண்மையைச் சிறப்படையச் செய்து குடியை வாழ்விக்கும் தெய்வமல்லவா காலிங்கராயன்! எனவே,

'கங்கை கோத்திரம் காலிங்க ராயற்குக்
கண்ட சரமும்உத் தொண்டியும் சாற்றுங்கள்'

என்று மணியகாரர் கட்டளையிட, அவ்வாறே பள்ளர்கள் செய்கின்றனர். காலிங்கராயனின் இனத்தவராகிய வேளாளர்கள் மட்டுமல்லர், கொங்கு நாட்டவர் அனைவரும் இதன் மூலம் காலிங்கராயனைத் தெய்வமாக வழிபட்டனர் என்பது விளங்குகின்றது. ஈரோட்டில் காலிங்கராயன் கால்வாய்க் கரையிலேயே இப்பள்ளு நாடகத்தைப் பெற்றுச் சிறப்புற்ற ஐயனாரப்பன் கோவில் இன்றும் இருக்கிறது.

## பள்ளர் வழிபட்ட கோயில் எது?

பள்ளர்கள் வழிபட்ட எல்லாத் தெய்வங்களும் ஈரோட்டிலும் ஈரோட்டைச் சூழ்ந்தும் அருகில் இருப்பனவே! பள்ளர்கள் ஈரோட்டில் வாழ்ந்தமையே அதற்குக் காரணம். எனவே காலிங்கராயனைப் பள்ளர்கள் வாழ்த்தி வணங்கிய காரணத்தால் காலிங்கராயன் கோயில் ஈரோட்டிலும் ஒன்று இருந்திருக்கவேண்டும். அக்கோயில் எங்கிருந்தது என்ப

தற்குச் சில சான்றுகள் கிடைத்திருக்கின்றன. ஈரோட்டின் கிழக்கு எல்லையில் காலிங்கராயன் கரையில் 'காரைவாய்க் கால் மைதானம்' என்னுமோர் இடம் இருக்கிறது. அதனருகில் பாம்புக் கோயில் ஒன்றுள்ளது. சுமார் 10 அடி நீளத்திற்குக் கிழக்கு-மேற்காகப் பாறையில் அழகிய புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுச் சுற்றியும் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அக்கோயிலில் மற்றுமொரு சிறப்பு உண்டு. அப்பாம்பிற்கு அபிடேகம் செய்யும் நீர் எல்லாம் ஓர் ஆழக்குழியில் சென்று பின் புதைகால் வழியாகக் காலிங்கராயன் கால்வாயையே அடைகிறது. அக்கழிவு நீர்க்கால்வாய் வெளியே தெரிவதில்லை. இங்கு முன்பு ஓர் ஆண் தெய்வத்தின் சிலை இருந்ததாகவும் கூறுகின்றனர். அதுவே காலிங்கராயன் தெய்வத்தின் சிலையாக இருக்க வேண்டும் என்று எண்ணலாம். காலிங்கராயனுக்கும் வழி காட்டிய பாம்புக்கும் கோயில் எடுக்கப்பட்டதாக ஆங்கில வரலாற்று நூலும் வமிசாவளியும் கூறுகின்றன. இங்குப் பாம்புக்கோயில் மட்டும் எஞ்சியிருக்க, காலிங்கராயன் கோயில் அழிந்துவிட்டது போலும்.

## கட்டியது யார்?

இக்கோயிலை யார் கட்டியது? உரிமையுடையவர்கள் யார் என்று இக்கோயில் பூசை செய்யும் திருவேங்கட ராமசாமி என்ற முதியவரைக் கேட்டால் அவர் கூறும் செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

> 'ஆசாரிமார்கள் இக்கோயிலைக் கட்டினார்கள், அவர்கள் இக்கோயிலுக்கு உரிமையுடையவர்கள். கொங்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆசாரி மார்கள் இக்கோயிலுக்கு வருவார்கள். அவர்கள்தாம் விழா முதலியன நடத்தினார்கள். அருகில் இருக்கும் மண்டபமும் அவர்களுடையதே! ஆனால் சிலகாலமாக இக்கோயில் ஐயர்கள் கைக்கு மாறிவிட்டது'

என்று கூறுகின்றார் அப் பெரியவர்.

வேட்டுவர் - வேளாளர் போராட்டத்தின் காரணமாக ஆசாரிமார்களின் உரிமைகள் சில பறிக்கப்பட்ட செய்தியை யும் பின்னர்க் காலிங்கராயன் அவர்கட்கு மீண்டும் உரிமை அளித்த செய்தியையும் முன்னரே கண்டோம். காலிங்க ராயன் அவர்களுக்கு உரிமை அளித்த மாபெரும் நன்மைக் காக ஆசாரிமார்கள் தங்கள் நன்றியைக் காட்டக் காலிங்க ராயனுக்கும் வழிகாட்டியதாகக் கருதப்பட்ட பாம்புக்கும் ஈரோட்டில் கோயில் கட்டியிருக்கலாம்.

## வெள்ளோட்டில் உருவச்சிலை

வெள்ளோட்டில் உள்ள சருவலிங்கேசுவரர் கோயிலின் தெற்கு வாயில் முன்மண்டபத்தின் தென்மேற்குத் தூணில் ஒரு தலைவர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அவ்வூர் மக்களும் அக்கோயில் அர்ச்சகர்களும் அச்சிற்பம் காலிங்க ராயன் சிற்பமே என்று கூறுகிறார்கள். காலிங்கராயன் வெள்ளோட்டில் தங்கியிருந்தார் என்பதும் இச் சருவ லிங்கேசுவரன் கோயிலில் பல திருப்பணிகள் செய்து கொடை களும் அளித்துள்ளார் என்பதாலும் மேற்கண்ட செய்தி உண்மையாக இருக்கலாம்.

## பாலமடை அம்மன் கோயிலில்

கவுண்டச்சிபாளையம் அருகேயுள்ள பாலமடை அம்மன் கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவரின் வெளியே ஒரு கொங்குத் தலைவரின் சிற்பம் உள்ளது. பாலமடை அம்மன் ஆலயத்திற்கும் காலிங்கராயன் கால்வாய்க்கும் உள்ள நெருங்கிய தொடர்பை நோக்க அச்சிற்பம் காலிங்கராயன் சிற்பமாக இருக்கக் கூடும் என எண்ண இடமுள்ளது.

## கலைமகள் கலைக்கூடத்தில்

கொங்குக் கலைக்கூடம் ஒன்று ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஈரோட்டின் அருகேயுள்ள பிராமணப் பெரிய அக்கிரகாரம் என்னும்

ஊரில் காலிங்கராயன் கால்வாய்க் கரையில் சிதைந்த ஒரு கோயிலில் இருந்த ஒரு சிலையை அவ்வூர்ப் பொது மக்கள் கலைமகள் கலைக்கூடத்திற்கு அனுப்பினர். அச்சிலையை அவ்வூர்ப் பொது மக்கள் 'காலிங்கராய சுவாமி' என்றே குறிப்பிட்டுக் கூறுகின்றனர். எனவே அந்த அக்கிரகாரப் பகுதியில் காலிங்கராயனுக்குக் கோயில் ஒன்று இருந்தது என்பது திண்ணம்.

அச்சிலையைத் தேடி எடுத்துப் பாதுகாத்துவரும் கலைமகள் பள்ளிகளின் நிருவாகி செல்வி எம். முத்தையா அவர்கள் நம் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்கள் ஆகின்றார்கள்.

இவைகளின் மூலம் கொங்கு நாட்டவர் அனைவரும் காலிங்கராயனைத் தெய்வமாக வழிபட்டதையும் அணையில் மட்டுமல்ல, ஈரோடு போன்ற பல இடங்களில் பல மக்களும் கோயில் அமைத்து வணங்கி வரம் பெற்று வாழ்ந்தனர் என்பதையும் நாமறிகின்றோம்.

## இராசாக் கோயிலில்

வெள்ளோடு இராசாக் கோயிலில் சாத்தந்தை குலத்தலைவர்கள் சிலருடைய சிற்பங்கள் தூண்களில் அழகிய சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளன. சில சிற்பங்கள் அடியார் போலவும், சில சிற்பங்கள் அரசியல் அலுவலர் போலவும், சில சிற்பங்கள் அரசர் போலவும் அமைக்கப் பட்டுள்ளன. அச்சிற்பங்களில் ஏதாவது ஒன்று சாத்தந்தை குலச் செம்மல், இராசாவைக் குல தெய்வமாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல் நம் காலிங்கராயன் சிற்பமாக இருக்க வேண்டும். கல்வெட்டுக் குறிப்புக்கள் ஏதும் இல்லாத நிலையில் அவைகளில் எந்தச் சிற்பம் காலிங்கராயனுக்கு உரியது என்று நம்மால் அறிய முடியவில்லை.

# புலவர் பாடிய புகழ்

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்"

என்னும் வள்ளுவர் வாய்மொழி உயிருக்கு ஊதியமாகப் புகழ்ப் பேற்றைச் சிறப்புறக் கூறுகிறது. சங்க காலத்தில் வாழ்ந்த பாரியைப் போன்ற வள்ளல்கள் இன்றும் சாகா வரம் பெற்றுப் புகழுடன் விளங்குகின்றனர். பாவலர்கள் அவர்களைத் தம் படையல்கள் மூலம் என்றும் வாழும் சிறப்பினராகச் செய்துள்ளனர்; இறவா வரம் ஈந்துள்ளனர். அவ்வள்ளல் பெருமக்களும் புலவர்களால் தாம் பாடப் படுவதைப் பெருமதிப்பாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

காலிங்கராயன் வாழ்ந்த காலத்தில் புலவர்கள் பலர் அவர் செய்த அரும்பெரும் செயலைப் பாடிப் புகழ்ந்திருக்க வேண்டும். அப்பாடல்களில் இப்பொழுது ஒன்றும் கிடைக்க வில்லை. ஆனால் காலிங்கராயன் காலத்திற்குப் பின்னர் அவர் செய்த பணிகளால் நாடு பல நற்பயன்கள் பெறுவதைக் கண்டு புலவர்கள் பலர் காலிங்கராயன் செயலைப் பாராட்டிப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். கொங்கு மண்டல சதகம், சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ், ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு, திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, பூந்துறைப் புராணம் நல்லணவேள் காதல் முதலிய இலக்கியங்களும், பல தனிப் பாடல்களும் காலிங்கராயனின் அழியாப்புகழை அழகுற முரசறைந்து முழக்கிக் கொண்டிருக்கின்றன.

## கொங்கு மண்டல சதகம்

தமிழ் நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்த புலவர்கள் அவரவர்கள் வாழ்ந்த பகுதிகளின் இயற்கையமைப்பு, வரலாற்றுச் சிறப்பு, சமயச் சிறப்பு, தமிழ் வளர்ச்சி, அரசர் கள், கொடைவள்ளல்கள், பெருமக்களின் வாழ்வியல்

சிறப்பு இவைகளையெல்லாம் தொகுத்து மண்டல சதகங்களாகப் பாடிச்சென்றுள்ளனர். அவையெல்லாம் மிகச்சிறந்த வரலாற்றுண்மைகள் நிறைந்த நூல்களாகும். சோழ மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், மகதமண்டல சதகம், பாண்டிமண்டல சதகம் முதலியன அவ்வகையில் தோன்றிய சதக நூல்களாகும். ஆனால கொங்கு நாட்டிற்கு மூன்று சதக நூல்கள் இருக்கின்றன. கார்மேகக் கவிஞர் பாடிய 'கொங்குமண்டல சதகம்' அச்சில் வெளிவந்துள்ளது. அதனைத் திருச்செங்கோடு தி.அ.முத்துசாமிக் கோனார் முதலில் பதிப்பித்துள்ளார். வாலசுந்தரக் கவிராயர் பாடிய கொங்குமண்டல சதகத்தை வேலம்பாளையம் பெரும் புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அச்சிட்டார். அவைகள் இரண்டுடன் கம்பநாதர் பாடிய கொங்குமண்டல சதகத்தையும் சேர்த்துப் பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தினர் மூன்று கொங்குமண்டல சதகங்களையும் ஒன்றாக வெளியிட்டுள்ளனர்.

கார்மேகக் கவிஞரின் பாடலில் காவிரியில் கலக்கும் பவானியில் அணைகட்டிப் பூக்கள் விரியும் புகழ்மிகு வயல்களுக்குப் பாய்ந்து நொய்யலில் கலக்கும் கால்வாய் வெட்டிய செயல் புகழப்படுகிறது.

"காவிரி யோடு கலக்குறு வானியைக் கட்டணைநீர்
பூவிரி செய்களுக் கூட்டிநற் காஞ்சி புகுதவிசை
தேவர்கள் சாம்பவர் பாவாணர் எல்லாம் தினம்மகிழ
மாவிச யம்பெறு காலிங்க னும்கொங்கு மண்டலமே!"

எனப்படும் பாடல் காலிங்கராயன் புகழினைக் கவினுறச் சுட்டுகின்றது.

## சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ்

மேல்கரைப் பூந்துறை நாட்டின் தலைமைத் தலமாக விளங்கும் சென்னிமலைக்குப் புராணம், யமக அந்தாதி,

காதல், பிள்ளைத்தமிழ் போன்ற பல பிரபந்தங்கள் உள்ளன. சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழைப் பாடியவர் வெள்ளோட்டில் வாழ்ந்த குந்தாணி சாமிநாதக் கவிராயர் ஆவார். அந்நூலில் தாலப்பருவப் பாடல் ஒன்றில் காலிங்கராயன் கால்வாய் வெட்டியதன் நோக்கத்தையும் வெட்டிய முறையையும் கூறுகின்றார் அதன் ஆசிரியர். உலகில் பாவம் நம்மைவிட்டு நீங்கவும் பல காலமாக வரும் வழிவழிப் பெருமை சிறந்து விளங்கவும் விரிந்து பரந்து செல்லுகின்ற காவிரியாற்றின் புகழ் உலகில் மேன்மேலோங் கவும் சிறந்து விளங்கும்படியாகத் தவமிருந்து தெய்வத் தன்மை பொருந்திய பவானியாற்றில் காலிங்கராயன் அணை தேக்கிக் கால்வாய் வெட்டியதாகக் கூறுகின்றார் சாமிநாதக் கவிஞர். அவர் கூறும் சுவையான பாடலைப் பாருங்கள்!

“பாரில் பவம்விட் டொழிந்தகலப்
பலகால் நியமம் பண்பிலங்கப்
படரும் தென்கா விரிப்பெருமை
படைக்கக் கொங்கு மிகச்செழிக்கச்

சீரில் பொலியும் தவமிருந்து
தெய்வ வானி அணைதேக்கிச்
சிறுகால் வீச வானுறங்கச்
சில்லை ஒலிக்கத் தண்டலைகள்

பூரித் தெழுந்த செழுந்தீம்பால்
போதமுனிவர் சிவயோக
புனிதஞ் செய்ய நீதிசெயும்
புகழோன் குலம்பேர் பெறவிளங்கும்

சாரித் திரப்பூந் துறைநாடாள்
சைவா தாலோ தாலேலோ
சதுமா மறைசூழ் சிரகிரிவாழ்
தலைவா தாலோ தாலேலோ!”

காலிங்கராயன் கால்வாய் விளங்குவதால் புகழ் பெற்றது பூந்துறை நாடு. அப்பூந்துறை நாட்டில் அருளாட்சி செய்பவன் சென்னிமலை முருகப் பெருமான் என்று பாடிப்பரவுகிறார் புலவர்.

## திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் தலைமைத் தலமாக விளங்குவது அறுபடை வீட்டில் ஒன்றாகிய ஏரகம் என்னும் திருச்செங்கோடு. திருச்செங்கோட்டிற்கு யார் யார் திருப்பணி செய்தார்களோ அவர்கள் பெயருடன் அவர்கள் செய்த திருப்பணிகளையும் தனித்தனிச் செய்யுள் வடிவில் தொகுத்துக் கூறுவது திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்னும் சிறந்த வரலாற்று நூலாகும். காலிங்கராயன் திருச்செங்கோட்டுக்குச் செய்த திருப்பணியையும் அந்நூல் கூறுகிறது. பசுவின் வடிவாகவும் இலிங்க வடிவும் கொண்டு விளங்கும் நாகமலை என்னும் திருச்செங்கோட்டில் குடிகொண்டுள்ள உமையொருபாகனுக்குக் காலிங்கராயன் ஏழுமா நிலம் ஈந்தான். அதனால் பெரும்புகழ் பெற்றான் என்று அந்நூல் கூறுகிறது.

"ஆலிங்க நாகமலை அர்த்தநா ரீசுரர்க்குக்
காலிங்க ராயன்எனும் காராளன்—மாலிங்க
மென்றேமா மாந்தை நிலமெழுமா வுங்கொடுத்தான்
அன்றே புகழ்எய்தி னான்"

என்பது திருப்பணிமாலைச் செய்யுள் ஆகும்.

## ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு

பள்ளர்களின் வாழ்க்கை முறையை ஒட்டிப் பாடப்படும் சுவையான பிரபந்த நூல்களில் ஒன்று பள்ளு. ஈரோட்டில் கோயில் கொண்டுள்ள ஐயனாரப்பன் மீது பாடப்பட்டது ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு நூலாகும். காலிங்கராயன் கால்வாய்க் கரைமீதே இக்கோயில் அமைந்துள்ளது. அந்

நூலின் இறுதியில் பள்ளு நூலை இயற்றிய முத்துக்கருப்பனுக்கும் மேடையில் பள்ளுநூலை நாடகமாக நடித்துக் காட்டிய சஞ்சீவி என்பவனுக்கும் பரிசுகள் வழங்கப்பெறுகின்றன. பரிசுகள் வழங்கப்பெற்ற இடம் எது?

"காலிங்க ராயன் கடாட்சத்து னாலே
சாலவே இந்தத் தரணியில் வாழும்
குடியா னவர்கள் கூடிய சபையில்"

பரிசுகள் வழங்கப்பெற்றன என்று அந்நூல் கூறுகின்றது.

பள்ளர்கள் தாம் வழிபடும் கடவுளர்கட்கெல்லாம் பல சிறப்புக்களைச் செய்யுமாறு கட்டளையிடும் இடத்தில்

"கங்கை கோத்திரம் காலிங்க ராயற்குக்
கண்ட சரமும்உத் தொண்டியும் சாற்றுங்கள்"

என்று குறிப்பிடப்பெறுவதைக் காண்கின்றோம்.

ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு நூலின் வாயிலாக இப்பகுதி வேளாளர்கள் சிறப்பெய்தி இவ்வுலகில் வாழக் காலிங்கராயன் கால்வாய்தான் காரணம் என்றும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அக்கால்வாய் வெட்டிய காலிங்கராயன் உலகினரால் தெய்வமாக வணங்கப்பட்டான் என்ற செய்தியையும் அறிகின்றோம்.

## நல்லணவேள் காதல்

வாழ்வாங்கு வளமுடன் வாழும் ஒரு தலைவனின் இல் வாழ்க்கைச் சிறப்பினைக் கூறி, அவனது பெருமையும் புகழும் பேசி, விருந்தோம்பித் தன் குழுவுடன் அவன் வேட்டைக்குச் செல்லுவதாகக் கூறித் தலைவன் அங்கு அழகிய பெண்ணொருத்தியைக் கண்டு காமுறுவதாகப் பாடும் இலக்கியவகை காதல் பிரபந்தம் எனப்படும். கூளப்பநாயக்கன் காதல், கொடுமணல் கந்தசாமிக் காதல் என்பன அவற்றுட் சில.

வெள்ளோடு சாத்தந்தை குல நல்லண கவுண்டர் பற்றிச் சுவாமிநாதக் கவிராயர் பாடிய நூல் நல்லணவேள் காதல் என்பது. அந்நூலில் அவர்தம் குடிப்பெருமை கூறுமிடத்துப் பவானி ஆற்றைக் கொண்டு ஐந்து காத நீளத்துக்குக் கால்வாய் வெட்டிய காலிங்கராயன் மரபினர் அவர் என்று பெருமையாகக் கூறப்படுகிறது.

'வானிநதி யைக்கொண்டு
வாய்க்கால்ஐங் காதவழி
தானுயர்வாய்க் கொண்டுபோய்த்
தான்நடத்தும் மெய்க்குலத்தோன்'

என்பது அந்நூல் பகுதியாகும்.

## பூந்துறைப் புராணம்

நாடு நகரச் சிறப்புக்களுடன் ஓரிடத்தின் வரலாற்றுப் பெருமைகளையும் புராணச் சிறப்புக்களையும் உயர்வு நவிற்சிகளுடன் பலபடப் புகழ்ந்து பாடும் நூல் புராணம் ஆகும். பூந்துறைப் புராணம் என்பது அவற்றுள் ஒன்று. காளியண்ணக் கவிராயர் பாடிய இப்பூந்துறைப் புராணத்தில் இரண்டு இடங்களில் காலிங்கராயன் கால்வாய்ச் செய்தி சுட்டிக் கூறப்படுகிறது.

'..................வானி
முகூர்த்தமிடக் கால்வாய்கள்
முந்திவயல் பாயும்'

என்பது பூந்துறைப் புராணப் புகழ் வரிகளாகும்.

## வனமும் வயலாகும்

காலிங்கராயன் கால்வாய் பற்றிய தனிப்பாடல்கள் பல கிடைத்துள்ளன. காவிரியாறொடு கலக்கும் பவானி ஆறானது இடையிலேயே மடங்கும் வண்ணம் வீர பாண்டியன் என்னும் பாண்டிய மன்னனின் அமைச்சராக

விளங்கியவரும் கல்வியை நன்கு கற்றவருமான காலிங்க ராயன் வெட்டிய கால்வாயின் கழிவுநீர்கூட வனத்தை நல்ல வயலாக்கும் தன்மையுடையது என்று பாடுகின்றார் அப் பாடலைப் பாடிய ஆசிரியர். இதோ அப்புகழ்மணம் கமழும் தனிப்பாடல்...

'எற்று திரைப்பொன்னி கூடுறு வானி இடைமடங்க
வெற்றி மிகுத்த அதிவீர பாண்டிய வேந்தமைச்சன்
கற்ற அறிவினன் காலிங்க ராயன்செய் கால்கழிநீர்
உற்ற வனத்தை உறுவய லாக உயர்த்தியதே'

## பூந்துறை நன்னாடு வாழ

உலகில் மூன்று மிகப்பெரிய ஆற்றல்மிகு தீரச் செயல்கள் நிகழ்ந்துள்ளனவாம். முதலாவது சீதா பிராட்டியைச் சிறை மீட்கும் பொருட்டு இராமபிரான் இலங்கைக்குச் செல்லச் சேது அணை கட்டியது. இரண்டாவது காவிரியாறு பெருகி நாட்டை அழித்தபோது கரிகால் பெருவளத்தான் காவிரிக்குக் கரை எழுப்பியும் கல்லணை கட்டியும் நாட்டுக்கு நலன் விளைத்த அரிய செயலாகும். அதனை ஒத்த மூன்றாவது பெரிய செயல் எது தெரியுமா? மலைகளை யுடைய பூந்துறை எனப்படும் நல்ல நாடு வளம்பெற்று வாழும்பொருட்டுப் பவானி ஆற்றில் கரையிட்டு அடைத்துக் காலிங்கராயன் அணை கட்டியதாகும். இந்தப் போற்றுதற் கரிய செயலைச் செய்தவன் வெள்ளோடு சாத்தந்தை குலக் காலிங்கராயன் ஆவான் என்று கூறுகின்றார் சிறப்புமிகு இத்தனிப்பாடலைப் பாடிய ஆசிரியர்.

'திரைகொண்ட வாரியை மாலடைத் தான்செழுங் காவிரியை
உரைகொண்ட சோழன்மு னாளடைத் தான்உலகு ஏழறிய
வரைகொண்ட பூந்துறை நன்னாடு வாழ்கஅவ் வானிதனைக்
கரைகொண் டடைத்தவன் வெள்ளோடைச் சாத்தந்தை காலிங்கனே'

## மங்காத கீர்த்தி

காலிங்கராயனின் வழித்தோன்றலாகச் சாத்தந்தை குலத்தில் தோன்றி விளங்கிக் கனகபுரத்தில் வாழ்ந்து கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் சிறப்புப் பெற்றுப் பெருநிலக் கிழாராகவும் புகழ்பெற்ற கிராம நிருவாகியாகவும் வாழ்ந் தவர் கனகபுரம் பழனிவேல் கவுண்டர் மகன் குழந்தைவேல் கவுண்டர் ஆவார். அவர் பாலமடை அம்மன் கோயிலில் திருப்பணி செய்தவர். புலவர்கள் பலரை ஆதரித்தவர். அவரைப் பற்றிய சில தனிப்பாடல்கள் கிடைத்துள்ளன. அப்பாடல் ஒன்றில் காலிங்கராயன் பெருமை பலபடப் புகழ்ந்து கூறப்படுகிறது. சூரிய சந்திரர் உள்ளவரை காலிங்க ராயன் கால்வாய்ப் பெருமை நின்று நிலவும் என்ற குறிப்பு இப்பாடலில் காணப்படுகிறது.

வானி அணைகட்டி வாய்க்கால்ஐங் காதம் வழிநடந்து
பானும தியும்உள் ளமட்டும் கீர்த்தி படைத்தவன்நீ
தானவன் காலிங்க ராயன் பழனிவேல் தந்தைசுதா
வானின்ற கீர்த்தி குழந்தைவேல் என்றிடும் மன்னவனே

## நாட்டுப்புறப் பாடல்

காலிங்கராயன் கால்வாய் உள்ள ஊர்களில் கால்வாய் அமைப்பு, நிர்வாகம்பற்றிப் பல பாடல்கள் பாடப்படு கின்றன. அவற்றுள் ஒன்று காலிங்கராயர் வரத்தினால் அணை கட்டுவித்தார். குரங்கன்பள்ளம், ஈரோடு பெரும் பள்ளம் ஆகிய இடங்களில் பாலங்கள் கட்டுவித்தார். பல அதிகாரிகள் கால்வாய் நிருவாகத்தில் இருந்தனர். அவர் கட்குச் செய்க்கு 5 வள்ளம் கொடுக்கவேண்டும். அதிகாரி களின் ஆணைப்படியே நீர் பாய்ச்சவேண்டும். இல்லாவிடில் அபராதமும் தண்டனையும் உண்டு என்று கூறுகிறது.

மண்டலம் தன்னிலே ஈரோடு கடிகரா
மறுகடிகள் நிகராகுமோ
வானிலிங் கேசுரர் வேதநா யகியம்மை
வந்துமுன் சாட்சிசெய்ய
வாய்த்தபுகழ் சாத்தந்தை காலிங்க ராயர்அணை
வரத்தினால் கட்டிவைத்தார்
வானிமுதல் ஆதிகரூர் அறுகாத மும்வளர்
வெகுசனம் பிழைக்கவேதான்

அண்டனவர் இப்புவியில் உற்பனம தாகவே
அதிகவெள் ளாமையாக
அடிக்கடி பாலங்கள் மராமத்து வேலைகள்
அதிலுள்ள குரங்கன் கட்டி
அசையாத கல்லின்மேல் பிசகாம லேநல்ல
ஆயிரம் சேரியமுது
அசைவிட்டு துளையிட்டு சிலம்பிட்டு மேநல்ல
அசையாமல் தூண்நிறுத்தி

அகாண்டமாய் வருகின்ற பெரும்பள்ளம் தன்னிலே
அதுவுமொரு பாலமாக
ஆறுக்கு ஆர்திறணை நாலுக்கு நால்செவுதி
ஆறுபோல் பெருகிவரவும்
அதற்குள்ள பாற்பத்தியம் மேல்மணியம் டபேதார்
அப்புறம் சுபேதாரும்
அவர்களுக் கோநிகுதி செய்க்கைந்து வள்ளம்
அணைவள்ளத் தால்அளக்கவும்

கண்டிதம தாகவே வருகின்ற தண்ணீரும்
காய்தாப் படிபாயவும்
காய்தா முத்திரை பேதகம் தப்பினால்
கையிழுத் தேபிடித்துக்

கக்கிவிக்கித் தின்ற குக்கலைப் போலவே
கனமான சன்மானமும்
துட்டத் தனத்துடன் ராத்திரியில் மதகைத்
துணிவுடன் பிடிங்கிவிட்டால்

சோட்டால் அடித்து ஐந்து ரூபாயும் வாங்கியே
சோடுகைக் குட்டையாடி
துனித்தபெரு வாசியூர்முதல் ஆவுடைபாறைவரை
அவன்கழுத்தில் தோல்துடும்பு
போட்டடித்துத் துரந்தரீகமாகவே
அனந்தசேகரம் பிள்ளை தாசில்தார் தொட்டு
இப்படித் தோறாமல் மாற்றாமல்
வெங்கட்ட நரசிம்மன் சொன்னதில் பாதியாவும்

தொச்சம் இதையன்றியே மிச்சமிலை இன்றியே
துகையிலாப் பேர்கள் ரொம்ப
சுகமுலவும் பெருந்துறை கிருஷ்ணப்ப சுவாமியவர்
சூட்சமுடன் வாழ்க நன்றே''

## சக்திக்கனல் வாழ்த்து

கொங்கு நாட்டின் சீர்மிகு செந்தமிழ்க் கவிஞர் சக்திக் கனல் அவர்கள். காலிங்கராயன் கரையில் உள்ள கல்வெட்டுப் பாளையம் அவரது ஊராகும். (அவரது இயற்பெயர் கே.பி.பழனிசாமி) காலிங்கராயன் கால்வாய் பற்றி அவரது அழகிய பாடலைக் கீழே காணலாம்.

காவிரி பவானியோடு கைகுலுக்குமாம்—கூடல்
கழனியெல்லாம் முத்துமுத்தாய் நெல்கொடுக்குமாம்!
பூவிரியும் தாழைமடல் மணம்விரிக்குமாம்—கொங்கு
பூத்தமலர் மணம்பரப்பி வாழ்த்திசைக்குமாம்!

பூந்துறைவெள் ளோடருகில் வெண்மணற்பரப்பு—அது
பூசை வாங்கும் குலதெய்வம் இராசாவின்இருப்பு
சாந்தமிகு சாத்தந்தை நஞ்சையன்மகனாம்—அவன்
தமிழ்ப்பெயரோ லிங்கையகா லிங்கராயனாம்!

வெள்ளோட்டில் சருவலிங்கர் கோவில்கட்டினான்—
அங்கும்
மேலும்மேலும் கனகபுரம் குளங்கள்வெட்டினான்
குன்னத்தூரில் மங்கலத்தில் நீரைத்தேக்கினான்—
குண்டு
குழிகளில்லா சாலைகளை நிறுவிக்காட்டினான்!

வீரபாண்டி ஏரியின்நீர் இவன்புகழ் சொல்லும்—ஊரில்
வேலையற்ற கொடியவரை இவன்பலம்வெல்லும்
ஆரவாரம் எதுவுமில்லா ஆட்சி யமைத்தான்—அன்பால்
அனைத்துமக்கள் உள்ளத்திலே மாட்சிமைபெற்றான்!

பவானிமுதல் ஆவுடையார் பாறைவரையுமே—இவன்
பாத்திகட்டி நாற்றுவளர் பாசனம்தந்தான்
அவன்இலையேல் காலிங்கன் கால்வாய் ஏது?—அது
அற்புதமாய் வளைந்துசெல்லும் அழகினைஓது!

நாவிதனைக் கூடநன்றி யோடுநோக்கினான்—மக்கள்
நலம்பெறவே திட்டமிட்டுப் பசுமையாக்கினான்!
பூவிதழின் மென்மைஉள்ளம் காலிங்கன்உள்ளம்—
அதோ
பொங்குதுபார் காலிங்கன்கால் வாயினில்வெள்ளம்!

# வெளிநாட்டார் குறிப்புக்கள்

காலிங்கராயன் கால்வாயின் அமைப்பு, அணையின் தன்மை, அதன் சிறப்புமிக்க பொறியியல் திறன், சிறப்புத் தன்மை, அதன் பெருமை, வரலாற்றுத் தொன்மை ஆகியவை வெளிநாட்டார் பலரை மிகவும் கவர்ந்துள்ளது.

கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டில் கொங்குப் பகுதிக்கு வந்த பல வெளிநாட்டினரும் பிறநாட்டு அரசியல் அலுவலர் களும் பொறியியல் நிபுணர்களும் ஆட்சித் தலைவர்களும் காலிங்கராயன் கால்வாய் குறித்துச் சுவையான முக்கியத் தகவல்களை எழுதி வைத்துள்ளனர்.

சுவார்ட்சு (Swartze)
புக்கானன் (Dr. Bhuchanan)
மெக்கென்சி (Lt. colonel colin Meckanzie)
ரௌட்டன் (Wroughton)
ஹன்னான் (Hannan)
வெட்டர்பர்ன் (Colonel Wedderburn)
அருண்டேல் (Arundels ICS)
மாண்ட் கோமரி (Colonel Montgomerie)
மீடு பென்னி குக் (Mead Penny Cuick)
அட்ரி (Awdry)
மார்கன் (General Morgan)
சர் ஆர்தர் காட்டன் (Sir Arthar cotton)

போன்ற பலரின் பயனுடைய குறிப்புக்கள் பழைய வரலாற்றுச் செய்திகளைக் கூறுவதுடன் எதிர்காலப் பாசனத்திட்டங்களுக்கும் இன்றியமையாத பல கருத்துக் களைத் தருகின்றன.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர்கட்கும் மைசூர்த் தலைவர்கட்கும் நடைபெற்ற கொங்குநாடு

பற்றிய உரிமைப் போரில் காலிங்கராயன் கால்வாயப் பகுதி பெரிதும் இடம் பெற்றிருந்தது. இக் கால்வாயின் பெரும் பகுதி இப்போர்களினால் அழிந்து சிதைந்து விட்டது என்றறிகிறோம். பல ஆங்கில வரலாற்று நூல்களிலும் மாவட்டக் கெசட்டியர்களிலும் அரசாங்க நிருவாக அறிக்கைகளிலும் காலிங்கராயன் கால்வாயைப் பற்றிய அக் காலத்திய பல வரலாற்றுச் சான்றுகள் விரிவாகக் கிடைக் கின்றன.

## சுவார்ட்சு

தமிழ் நாட்டிற்குக் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் பணிக்கென வந்த பல பாதிரிமார்கள் கல்வியைப் பரப்பும் பணியையும் மருத்துவப் பணியையும், தமிழ் இலக்கியப் பணியையும், இலக்கண ஆய்வையும் செய்து தமிழ் நாட்டிற்கு அரிய பல தொண்டுகள் செய்ததை நாடு நன்கறி யும். அவர்களில் பலர் வரலாற்றுச் செய்திகளையும் குறித்திருக்கின்றனர். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் தஞ்சை, மைசூர் வரலாற்றோடு மிகத் தொடர்புடைய சுவார்ட்சு பாதிரியார் (1726—1798) கொங்கு நாட்டின் பல இடங்களைப் பார்த்துக் குறிப்பெழுதி வைத்துள்ளார். அவர் 1779 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 ஆம் நாள் பவானிக் கும் ஈரோட்டிற்கும் வந்துள்ளார். 1769இல் முதல் மைசூர்ப் போர் முடிந்து ஐதர் அலியும் ஆங்கிலேயரும் 11 ஆண்டுக் காலம் (1780 வரை) நட்புறவோடு இருந்த காலம் அது. அப்போது காலிங்கராயன் கால்வாயைப் பார்த்துப் புகழ்ந் துள்ளார் சுவார்ட்சு பாதிரியார்.

## புக்கானன்

நான்காம் மைசூர்ப் போர் 1799இல் முற்றுப் பெற்றது. அவ்வாண்டு ஏற்பட்ட சீரங்கப்பட்டணம் வீழ்ச்சியில் (4-5-1799) பெருவீரனாகிய திப்பு மறைந்தான். அவன் மறைவிற்குப் பின் கொங்குநாடு முழுவதும் ஆங்கிலேயர்

கைக்கு மாறிவிட்டது. உடனடியாகக் கொங்குநாடு இரண்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. நொய்யலாற்றின் தெற்கே ஒரு பிரிவையும் நொய்யலாற்றின் வடக்கே ஒரு பிரிவையும் அமைத்தனர். தென் பிரிவிற்குத் தாராபுரமும், வட பிரிவிற்குப் பவானியும் தலைநகரங்களாக அமைக்கப் பட்டன. 6-7-1799இல் வடபிரிவிற்குக் கேப்டன் மாக்ளியாட் டும் (Captain Colonel W. Macleod) தென்பிரிவிற்கு ஹர்டிசும் (Hurdis) முதல் ஆட்சியாளர்களாக நியமிக்கப் பட்டனர். இக்காலத்தில்தான் கிழக்கிந்தியக் கம்பெனியார் டாக்டர் புக்கானன் என்ற ஆங்கில வரலாற்றாசிரியரைக் கொங்கு, கருநாடக, மலையாள நாடுகளுக்கு அனுப்பி அப் பகுதிகள் பற்றிய செய்திகள் எல்லாவற்றையும் ஆய்ந்து அறிக்கை அளிக்கும்படி நியமித்தார்கள்.

டாக்டர் புக்கானன் கோவை மாவட்டம் முழுவதையும் மைசூரையும் சுற்றிப் பார்த்து விரிவாக, "சென்னையிலிருந்து மைசூர் கன்னடம் மலபார் வழியாக யாத்திரை" (Journey from Madras through Mysore Canara and Malabar) என்ற அருமையான நூலொன்றினை எழுதியுள்ளார். 1800ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தன் யாத்திரையைத் தொடங் கிய புக்கானன் 1800ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி ஈரோட்டிற்கு வந்துள்ளார். ஈரோட்டில்தான் காலிங்க ராயன் கால்வாயைப் புக்கனான் பார்த்து மிக மகிழ்ந்திருக் கின்றார். அதன் வியத்தகு வேலைப்பாட்டைப் பார்த்து மெய்மறந்து நின்றுவிட்டார். பின் அதன் வரலாற்றினை யும் இம்மாபெரும் பணியைச் செய்து முடித்த காலிங்கராயன் வரலாற்றையும் கேட்டறிந்தார். தன் குறிப்பில் ஈரோடு நகரத்தைப்பற்றியும் தான் கண்டு மகிழ்ந்த காலிங்கராயன் கால்வாயைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். அப்பகுதியைக் காண்போம்.

"பவானியிலிருந்து புறப்பட்டு ஈரோட்டுக்குப் பக்கத்தில் ஓடுகிற கால்வாய் ஒரு சிறந்த வேலைப் பாடுள்ள கால்வாய். இதன் நீளம் 15 மணி

பயணத் தூரம். பாசன நில அளவின் பரப்பு பல இடங்களில் பலவகையாக அமைந்துள்ளது. இந்த இடத்தில் (ஈரோட்டில்) ஒருசிறு பாலத்தின் மேல் இக் கால்வாய் ஓடுகிறது. முன்பு இக்கால்வாய் கரூர்வரை இருந்ததாகவும் நொய்யலாற்றை ஒரு பாலத்தின் வழியாகக் கடந்தது. இது ஒரு அருமையான வேலைப் பாடாக அமைந்துள்ளது. இக்கால்வாய்ப் பணி முழுவதும் காலிங்கராய வேளாளர் என்பவரால் செய்யப்பட்டது. அவர் ஒரு செல்வராகவும் செல்வாக்குப் பெற்றவராகவும் இருந்த காரணத்தால் தன்சாதி மக்களிடம் இருந்து கால்வாயின் தேவைக்கான பணத்தைத் திரட்டினார். இது சற்றேறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது.

அவரது சந்ததியினர் இப்பொழுது இல்லை. அவரது குடும்பத்தினர் இச்சிறந்த பணிக்காக நிலங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை.

சற்றேறக்குறைய 1045 'மா' நிலங்கள் அதாவது 3459 ஏக்கர்கள் இக்கால்வாயினால் பாசனவசதி பெறுகிறது. புன்செய் நிலம், ஏறக்குறைய 1713 ஏக்கர் கள் (400 புல்லாக்கள்) இருக்கின்றன''

அக்காலத்தில் (1800) மைல் பழக்கத்திற்கு வரவில்லை. அதனால் 15 மணி மலபார் பயணத்தூரம் என்கின்றார். அத்தூரம் சுமார் 60 மைல்கள் ஆகும்.

புல்லா என்பது 1 வள்ளம் ஆகும். 1 வள்ளம் 4 ஏக்கருக்குச் சமம். எனவே 400 புல்லாக்கள் ஏறக்குறைய 1600 ஏக்கர்கள் ஆகும்.

## மெக்கென்சி

கர்னல் மெக்கென்சி இந்தியாவின் நில அளவுத் தலைமை இயக்குநராகப் பதவியேற்றவர் (1753-1821). வரலாற்று உணர்ச்சி மிகுந்த அவர் தமிழகத்தில் இருந்த

பொழுது எண்ணற்ற கல்வெட்டு, செப்பேட்டுச் செய்திகளையும், பாளையக் காரர்களின் பரம்பரை பற்றிய செய்திகளையும், ஓலைச்சுவடிகளையும், பிற எண்ணற்ற புராண, இலக்கிய வரலாற்றுச் செய்திகளையும் பொருள்களையும் பல மொழிகள் தெரிந்த ஆட்களைக் கொண்டு கம்பெனியார் உதவியின்றி அவர் சொந்தப் பணத்தில் ஏறக்குறைய ரூ 15,000 செலவில் தொகுத்து வைத்தார். அவைகளில் காலிங்கராயன் பரம்பரையில் வந்த குமரசாமிக் காலிங்கராயர் தம் பரம்பரைபற்றி எழுதிக் கொடுத்த குறிப்பும் ஒன்றாக இருக்கின்றது. காலிங்கராயனைப் பற்றியும் கால்வாயைப் பற்றியும் பல அரிய குறிப்புக்களை நாம் அதில் காணலாம். அதன் நகல் சென்னை அரசினர் பழஞ்சுவடிச் சாலையில் இன்றும் உள்ளது. அதன் தலைப்பு "Calinga Ray Gauunden pattagar of uootoocoolie in Malabar" என உள்ளது. அந்த ஆவணம் முழுமையாக இந்நூலின் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது.

## ரெளட்டன்

பவானி ஆற்றைப் பற்றியும் காலிங்கராயன் கால்வாயைப் பற்றியும் ரெளட்டன் 1845ஆம் ஆண்டு பல சுவையான புள்ளி விவரங்களைத் தருகின்றார்.

> "காலிங்கராயன் அணை கடல் மட்டத்திலிருந்து 534 அடி உயரம். நொய்யலில் காலிங்கராயன் கால்வாய் கலக்குமிடம் 412.48 அடி உயரம். இடையில் உள்ள தூரம் 32 மைல். பவானியிலிருந்து தெற்காகவும் தென்கிழக்காகவும் மைலுக்கு 3.79 அடி தாழ்வாகக் கால்வாய் ஓடுகிறது. காலிங்கராயன் கால்வாயின் நீளம் ஏறக்குறைய 57 மைல். கால்வாய் நீர் 8866 ஏக்கர்களுக்குப் பாய்கிறது. காலிங்கராயன் கால்வாயில் 1840 மதகுகள் இருக்கின்றன. ஒரு மதகிலிருந்து செல்லும் நீர் 4.8 ஏக்கர் பாய்கிறது. மதகுகள் மிகமிக அதிகமாக இருக்கின்றன. பல இடங்களில் அவைகள்

அடுத்தடுத்து மிகவும் நெருக்கமாகவும் இருக்கின்றன. அதனால் புது மதகுகள் எதுவும் ஏற்படுத்த முடிவதில்லை. கால்வாயின் 1,2,3,6,9,16ஆம் மைல்களில் பல மண் மதகுகள் இருக்கின்றன. 3,9,15,25,34,36, 39,41, 47ஆம் மைல்களில் காட்டாறுகள் வந்து கால்வாயோடு கலக்கின்றன.''

## ஹன்னான்

காலிங்கராயன் கால்வாயிலுள்ள சில குறைகளையும் சுட்டிக் காட்டுகின்றார் ஹன்னான்.

"கால்வாய் முழுவதிலும் நேரடியாகவே வயலுக்குத் தண்ணீர் பாய்ச்ச வசதியாகப் பல மதகுகள் இருக்கின்றன. இந்த மதகுகளின் எண்ணிக்கையைக் குறைத்துச் சிறு கிளைக்கால்வாய்களை அமைத்து நீர் பாய்ச்சினால் இன்னும் ஏராளமான நிலங்கட்கு நீர் பாய்ச்ச முடியும். இக்கால்வாயிலுள்ள மிகப் பெரிய குறைபாடு அது மிகப் பெரியதாக இருப்பதே''

என்று குறிப்பிடுகின்றார்.

"தொடக்கத்தில் 30,000 ஏக்கர்கள் பாயவேண்டியதற்கு மேல் தண்ணீர் வருகிறது; ஆனால் கால்வாயின் கடைசியில் மிகக் குறைந்த தண்ணீரே செல்கிறது. வாய்க்கால் பெரியது. ஆனால் அதனால் அடையும் பயனோ மிகக் குறைவு''

## வெட்டர்பர்ன்

இவர் ஓர் அற்புதமான திட்டத்தைத் தந்துள்ளார்.

"30,000 ஏக்கர்களுக்கு மேல் பாயக்கூடிய அளவு தண்ணீர் அணையிலிருந்து விடப்படுகிறது. ஆனால் பெரும்பகுதித் தண்ணீர் வீணாகிறது''

என்று ஹன்னான் கூறிய குறையை நீக்கவே இத்திட்டத்தைத் தயாரித்துள்ளார் என்றறிகின்றோம். காலிங்கராயன் கால்வாய் இப்பொழுது நொய்யல்வரைதான் செல்லுகிறது. கால்வாய் இறுதியில் நொய்யலாற்றில் கலக்கிறது. ஒரு கால்வாயின் வழியாக மீதியாகும் தண்ணீரை நொய்யலைக் கடந்து செல்லச் செய்து அமராவதி (கரூர்) வரை கொண்டு சென்றால் புதிதாக 13,000 ஏக்கர்கள் பாயும்" என்று காலிங்கராயன் விரிவுத்திட்டத்தை 27-3-1872ஆம் ஆண்டு ரூபாய் 8,71,000 செலவில் தயாரித்துக் கொடுத்தார் வெட்டர்பர்ன். அரசு அனுமதி கொடுத்தும் போதிய பணம் இல்லாத காரணத்தால் இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. பின் இத்திட்டம் எவருடைய நினைவிற்கும் இன்றுவரை வரவில்லை.

## அருண்டேல்

காலிங்கராயன் கால்வாயிலுள்ள சிறு குறைகளைச் சுட்டிக் காட்டுகின்றார் கோவை மாவட்டத் தலைவராக இருந்த அருண்டேல்.

> "காலிங்கராயன் அணையின் தலை மதகிலேயே 20 அல்லது 30 ஏக்கர்கள் பாய்வேண்டிய நீர் வருகிறது. ஆனால் இரவும் பகலும் இடைவிடாமல் தலை மதகில் நீர் பாய்ந்தும் வளப்படுத்துகின்ற நிலப்பகுதி 2 அல்லது 3 ஏக்கர்தான். மற்றத் தண்ணீர் அனைத்தும் கழிவு நீராக வீணாகச் செல்லுகிறது"

என்று வருந்துகின்றார் அருண்டேல். மதகுகளைப் பற்றியும் பின்வருமாறு கூறுகின்றார்.

> "காலிங்கராயன் கால்வாயில் பல மதகுகள் சரியாக அமைக்கப்படவில்லை. பொதுவாக அணையின் அருகில் தலைப்புக் கால்வாயில் இருக்கும் மதகுகளே அவ்வாறு மிக மோசமாக இருக்கின்றன. உறுதியற்ற சாதாரணக் கற்களாலும் மண்ணாலும் ஒரு சுரங்கம் போலக்

காலிங்கராயன் கால்வாயின் மதகுகள் கட்டப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் கடுமழை பெய்தது. அதன் காரணமாகக் கால்வாயின் முதல் 7 மைலுக்குள்ளாகவே இருக்கும் 17 மதகுகள் உடைத்துக் கொண்டன.''

## பவானியில் பிற அணைகள்

1850ஆம் ஆண்டு சர் ஆர்தர் காட்டன் என்பவர் பல திட்டங்களை அளித்துள்ளார். மாண்ட் கோமரியும் (1828) மீடு பென்னிகுக் அட்ரி குழுவினரும் (1878) மார்கனும் (1883) காலிங்கராயன் அணையையும் கால்வாயையும் பார்வையிட்டனர். பவானியாற்றில் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறை வேற்றுமாறு பரிந்துரை செய்தனர். சத்தியமங்கலத்தின் மேற்கே 4ஆவது கல்லில் பவானியாற்றைத் தடுத்து அணை கட்டினால் தாராபுரம், பல்லடம் தாலூக்காப் பகுதியில் 50, 000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சலாம் என்று மாண்ட் கோமரி குறிப்பிடுகின்றார்.

இத்திட்டம் பொதுப்பணித் துறையில் 'மேல் பவானித் திட்டம்' (Upper Bhavani project) என அழைக்கப்பட்டது. இது பின்னர்க் 'கீழ் பவானித் திட்டம்' (Lower Bhavani project) எனப்படும் திட்டமாக நிறைவேற்றப்பட்டது. கீழ்பவானிக் கால்வால் 1952 செப்டம்பர் மாதம் பூர்த்தி ஆயிற்று. பாசனம் பெறும் நிலம் 2,07,000 ஏக்கர்கள்.

பவானி ஆற்றில் பல்வேறு தடுப்புக்களை (கலிங்குகளை) ஏற்படுத்தினால் பல ஆயிரம் ஏக்கர்களுக்குப் பாய்ச்சும் வண்ணம் நீர் கிடைக்கும் என்று கூறினர் அட்ரி குழுவினர்.

அட்டபாடி என்னும் அமைதிப் பள்ளத்திலிருந்து வரும் பவானியைத் தடுத்து மாயாறு என்னும் பள்ளத்தாக்கினிடையில் போளுவாம்பட்டி அருகே அணை கட்டவேண்டும் என்றார் மார்கன்.

## சில குறிப்புக்கள்

கோவை மாவட்டக் கெசட்டியர், மானுவல் போன்ற நூல்களிலும், இந்தியாவை ஆண்ட நிலக்கிழார்கள் பற்றிய ஆங்கில வரலாற்று நூலிலும், முத்துசாமிக் கோனாரின் 'கொங்கு நாடு' என்ற நூலிலும் காலிங்கராயன் கால்வாயைப் பற்றிய குறிப்பைக் காணுகின்றோம். கொங்கு நாட்டின் முதல்தரமான கால்வாய் ஆகிய இதன் கரையின் எல்லா இடங்களும் சோழ நாட்டைப் போன்ற மிக வளம் பொருந்தியதாகக் காணப்படுகின்றன. கி.பி. 1799இல் கொளாநல்லிக்கு அப்பால் உள்ள கரையின் பெரும்பகுதி உடைந்துவிட்டது. கொளாநல்லிக்கு அப்பால் தண்ணீரே செல்லவில்லை. அதனால்தான் புக்கானன் 1800ஆம் ஆண்டில் 3459 ஏக்கர்கள் பாய்ந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

1840 மதகுகளில் 1762 முதல் 1799 வரை ஐதர், திப்புவிற்கும் ஆங்கிலேயர்க்கும் நடைபெற்ற போரில் பல மதகுகள் சீர்குலைந்து சிதைந்துவிட்டன. காலிங்கராயன் கால்வாய்ப் பகுதியில் எடுத்த ஓர் அளவையில் நீர் பாயும் நிலங்களில் 31% வண்டல் கலந்த களிமண் என்றும், 68% செம்மண் என்றும், 1% மணல் என்றும் அறிகின்றோம்.

1880இல் 7545 ஏக்கர்கள்தாம் நீர் பாய்ந்தது. ஆனால் இப்பொழுது 15, 743 ஏக்கர்கள் நேரடியாக நீர்வளம் பெறுகிறது. பதிவு செய்யப் பெறாத வகையிலும், வலப்புறப் பாசனத்திலும் 5400 ஏக்கர்கள் பாசன வசதி பெறுகின்றன. மொத்தம் 21,143 ஏக்கர்கள் பாசன வசதி பெறுகின்றன.

கால்வாயின் நீளம் 56 மைல் 5 பர்லாங்கு 350 அடி ஆகும். வினாடிக்கு 650 கியூசெக்ஸ் தண்ணீர் அணையிலிருந்து விடப்படுகிறது.

## காலிங்கராயன் பாளையம் காலிங்கராயன் கால்வாய்ப் பாலக் கல்வெட்டு

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் துறூறி துரையும் பொறியாளர் பேப்பர் துரையும் 1832இல் கால்வாயைப் பழுது பார்த்த விபரத்தை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

மகாராச ஸ்ரீ கனம் பொருந்திய
கும்பினியாரவர்கள் நாளில்
ஜி. டி. துறூறி துரையவர்களுடைய
பிரின்சிபால் கலெக்டர் அதிகாரத்தில்
பேபர் துரையவர்கள்
சிவிலிஞ்சினீரில்
அசூர் மராமத்து
சூப்பரிண்டெண்டு
சுப்பராயர்னாலே யிந்த
பாலம் பாகல்வாடம் பூர்த்தியாய்
கட்டலாச்சுது

## கொம்பணைக் கல்வெட்டு

மகாராஜஸ்ரீ கனம் பொரிந்திய
கும்பினியாரவர்கள் நாளில்
ஜார்ஜி தூநூரி துரையவர்கள்
பெர்ன்சிபல் கலக்ட்டர் அதிகாரத்தில்
பேபர் துரையவர்கள் சிவிலிஞ்சினீரில்
அசூர் மராமத்து சூபிரீண்டெண்டாண்டு
சுப்பராயர்நாயே யிந்த கீழ்பாலம்
பூர்த்தியாய் கட்டலாச்சுது
1303 ஷூ சப்டம்பர் மீ

# வாழையடி வாழை

வெள்ளோட்டுக் கனகபுரம் சாத்தந்தை குல நஞ்சையன் மகன் லிங்கையன் கொங்குப் பாண்டியரின் உயர் அலுவலனாகிக் கொங்கு நாட்டின் அதிகாரம் செலுத்தி வரும் நாளில் மேல்கரைப் பூந்துறை நாடு, மேல்கரை அரைய நாடுகளின் சில பகுதிகள் வளம்பெறக் காலிங்க ராயன் அணை கட்டிக் கால்வாயும் வெட்டி வைத்தார் என்பது வரலாற்று ஆய்வில் கண்டறிந்த உண்மையாகும். இம்மாபெரும் அறப்பணி கி. பி. 1265 வாக்கில் முடிந்திருக்க வேண்டும் என்றும் முன்பு கண்டோம்.

கால்வாய் வெட்டிய காலிங்கராயன் பரம்பரையினர் யார்? அவர்கள் இப்போது எங்குள்ளனர்? என்று அறிந்து கொள்வதும் சிறப்புமிகு அப்பரம்பரை பற்றிய பிற்கால வரலாற்றை அறிவதும் இன்றியமையாததாகும்.

புக்கானன் 7-11-1800இல் ஈரோட்டில் காலிங்கராயன் கால்வாயைப் பார்த்துப் பாராட்டிவிட்டு 'அவர் குடும்பம் இன்று இல்லை' என்று எழுதியுள்ளார். ஆனால் 1-3-1798 இல் எழுதப்பட்ட பாலக்காட்டுக் கோட்டைக் கம்பெனிப் படையின் தளபதி எழுதிய கடிதத்திலும், மக்கென்சியின் கைபீதிலும் கால்வாய் வெட்டிய காலிங்கராயன் பரம்பரையில் வந்த 29ஆவது பாளையக்காரரான குமாரசாமிக் காலிங்கராயர் பற்றிய செய்திகளையும் அவர் கையெழுத்தையும் காணுகின்றோம். எனவே புக்கானன் காலிங்கராயன் கால்வாய்ப் பகுதியில் அதாவது அவர் கால்வாயைக் கண்ட ஈரோட்டுப் பகுதியில் அதை வெட்டியவர் குடும்பம் இல்லை என்று கூறுவதாகவே நாம் கொள்ள வேண்டும்.

சேரமான் பெருமாள் காலத்தில் காவடிக்கா நாட்டுப் பகுதியில் காலிங்கராயன் குடும்பத்தினருக்குக் கொடையாகப் பூமி அளிக்கப்பட்டிருந்தது. அந்நிலத்தில் மாட்டுப் பண்ணை இருந்தது. ஏராளமான மாடுகள் அங்கு இருந்தன. மாடுகள் தண்ணீர் குடிக்க ஊற்றுக் குழிகள் தோண்டியிருந்தனர். அப்பகுதிக்கே காலிங்கராயன் குடும்பத்தினர் குடியேறினர்.

குல தெய்வமாம் அகத்தூர் அம்மனை எடுத்துக் கொண்டு தன்னுடன் வந்த பங்காளிகள் பலருடன் ஊற்றுக் குழிப் பகுதியில் குடியேறி ஆலயம் கட்டி அரண்மனை அமைத்துப் பண்டைய அரசர்போல் காடு கொன்று நாடாக்கிக் குளம் தோண்டி வளம் பெருக்கி நல்லாட்சி புரிந்து நாடு காத்தனர் காலிங்கராயன் மரபினர்.

வீரபாண்டியன், சுந்தர பாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகிய பாண்டிய மன்னர்கள் காலத்தில் அவர்கள் அலுவலராகிய காலிங்கராயர் பரம்பரைக்கு நல்ல மதிப்பு இருந்தது. பாண்டியர் ஆட்சி மறைந்து ஒய்சளர் ஆட்சி கொங்குப் பகுதியில் ஏற்பட்டபின் காலிங்கராயன் குடும்பத்திற்கு ஏனைய பட்டக்காரர், பாளையக்காரர்கள் தங்களுக்கு அளிக்கும் மதிப்புக்களையும் மரியாதைகளையும் பரம்பரைப் பாளையக்காரர் அல்லாத காலிங்கராயர் குடும்பத்திற்கு அளிக்கக்கூடாது என்று கூறினர்.

இதைக் கண்டு மனம் பொறுக்காத காலிங்கராயர் பரம்பரையினர் காவடிக்கா நாட்டுப் பகுதிக்குச் சென்று விட்டனர். இதனைக் காலிங்கராயர் கைபீது பின்வருமாறு கூறுகிறது.

'இப்படிக் காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் பிரசித்திப் பட்டவர்களாய் பலாட்டியனாய் வெள்ளோட்டு பூந்துறை நாட்டாதிபத்தியம் ஆண்டு வரும் நாளையிலே கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் பட்டக்காரர்களாய் இருக்கப்பட்டவர்கள் சரி இருப்பும்,

சரீமரியாதைகளும் கொடுக்கப்படாது என்று சொன்ன தினாலேயும் பூர்வத்திலே சேரமான் பெருமாள் சாத்தந்த கோத்திரக்காரர்களுக்குக் காவிடிக்கை நாட்டுப் பிறவுத்வம் பண்ணிக் கொடுத்து இருக்கிற படியினாலேயும் ராயட்டுப் பட்டக்காரர்கள் சரி மரியாதி நடக்க மாட்டாதென்று சொல்லிக் கொண்டபடியினாலே வெள்ளோடு விட்டு மன வெறுப்பினாலே ஆனைமலைச் சருவிலே தங்கள் காணி ஆட்சியான காவிடிக்கா நாடு கொண்டு வனமாய் இருந்த ஸ்தலத்தில் தங்கள் பசுமாடுகளை விட்டுயிருந்த மாடுகளைச் சம்ரட்சனை பண்ணுகிறதுக் காகத் தங்கள் ஜனங்கள் இருந்தப்டியினாலே காவிடிக்கா நாட்டு வனத்துக்கு வந்து...தம்முடைய மாட்டுப்பட்டிகள் இருக்கப்பட்ட இடத்தில் சேர்ந்து அரண்மனையும் கட்டி வீடுகள் உண்டுபண்ணி பூர்வத்தில் வனத்திலே மாடுகளுக்கு ஆதாரமாகத் தோண்டி யிருக்கப்பட்ட ஊற்றுக் குழிகள் இருக்கப்பட்ட இடத்தில் ஊருகட்டிவச்சபடியினாலே ஊற்றுக்குழி என்ற கிராம நாமதேயம் உண்டாகி ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப்பட்டவராய் இருந்தார்கள்'

இச்செய்தி ஊத்துக்குழி அகத்தூரம்மன் கோயில் கல்வெட்டு மூலமாகவும் உறுதிப்படுகிறது.

கால்வாய் வெட்டிய காலிங்கராயனுக்குப் பின் அக் குடும்பத்தில் வந்த அனைவரும் காலிங்கராயர் என்றே பெயர் தரித்துக் கொண்டனர்.

பூந்துறை நாட்டை விட்டு ஊத்துக்குழி சென்ற காலிங்க ராயர் தமிழகமெங்கும் யாத்திரை செய்தார். கொங்கேழு சிவாலயங்களை வணங்கினார். பல தானதருமங்கள் செய்தார். ஊத்துக்குழியில் அகத்தூர் அம்மன் ஆலயத்தைக் கட்டினார். வடக்கே யாத்திரை சென்று ஒய்சள மன்னனிடம் பல பட்டங்களையும் பரிசுகளையும் பெற்றார்.

தமக்கு உரிமையான நிலத்திற்கு எல்லைகளை வகுத்து அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டார்.

எல்லைப்பள்ளத்திற்குத் தெற்கும் பொன்குலுக்கி நாடு தாளக்கரைப் பள்ளத்திற்கு மேற்கும் மணியாறு கம்பளத் துறைக்குக் கிழக்கும் நல்லுருக்கா நாடு பாலாற்றுக்கு வடக்கும் அவர் நிலம் இருந்தது. கிழக்கு மேற்காக நான்கு காத தூரமும் தெற்கு வடக்காக 2 காத தூரமும் காலிங்க ராயனுக்கு உரிய நிலப்பகுதிகளாக இருந்தன. அப்பகுதியே அவருக்குரிய பாளையமாக அமைந்தது.

முதல் காலிங்கராயன் காலத்திலிருந்து அவர் பரம்பரையில் வந்த பலரும் இந்நிலத்தின் உரிமைகளை அனுபவித்துக் கொண்டு பாளையக்காரர்களாக ஊத்துக்குழியில் அதிகாரம் செலுத்தி வந்தனர். வமிசாவளியும் ஆங்கில வரலாற்று நூலும் முதல் காலிங்கராயர் காலத்திலிருந்து முறையாகப் பாளையப் பொறுப்பை ஏற்ற எல்லாப் பாளையக்காரர் பெயர்களையும் வரிசையாகக் கூறுகின்றன. இரண்டிலும் பெயர்கள் ஒத்து வருகின்றன.

1. காலிங்கராயர்
2. நஞ்சைய் காலிங்கராயர்
3. அகத்தூர் காலிங்கராயர்
4. நஞ்சைய காலிங்கராயர்
5. காலிங்கராயர்
6. நஞ்சைய காலிங்கராயர்
7. அகத்தூர் காலிங்கராயர்
8. காலிங்கராயர்
9. பராக்கிரம நஞ்சைய காலிங்கராயர்
10. அகத்தூர் காலிங்கராயர்
11. காலிங்கராயர்
12. நஞ்சைய காலிங்கராயர்
13. விருமாண்ட காலிங்கராயர்
14. அகத்தூர் காலிங்கராயர்

15. காலிங்கராயர்
16. ஈசுவரமூர்த்திக் காலிங்கராயர்
17. காலிங்கராயர்
18. அகத்தூர் காலிங்கராயர்
19. விருமாண்டக் காலிங்கராயர்
20. பிள்ளை முத்துக் காலிங்கராயர்
21. சின்னைய காலிங்கராயர்
22. காலிங்கராயர்
23. நஞ்சைய காலிங்கராயர்
24. காலிங்கராயர்
25. நஞ்சைய காலிங்கராயர்
26. காலிங்கராயர்
27. நஞ்சைய காலிங்கராயர்
28. அகத்தூர் காலிங்கராயர்
29. குமாரசாமிக் காலிங்கராயர்
30. முத்துக்குமாரசாமிக் காலிங்கராயர்
31. முத்துக்கிருஷ்ணசாமிக் காலிங்கராயர்
32. சிவசுப்பிரமணிய திருமூர்த்திக் காலிங்கராயர்
33. முத்துராமசாமிக் காலிங்கராயர்
34. அகத்தூர் முத்துக்கிருஷ்ணசாமிக் காலிங்கராயர்
35. அகத்தூர் முத்து இராமசாமிக் காலிங்கராயர்

இவர்களில் மூத்த பிள்ளைதான் பாளையக்காரராகப் பட்டமேற்கும் வழக்கம் ஏற்பட்டது. பட்டத்திற்குரியவராகும் மகன் ஒருவருக்கு இல்லாமலிருந்தால் அவருடைய தம்பி பட்டமேற்றார். 7,14,25,28,33ஆம் பாளையக்காரர்கள் தம்பியாக இருந்து பட்டம் எய்தியவர்களாவார்கள். தந்தை பாளையக்காரராக இருந்தால் மூத்த மகனுக்கு 'குமார பாளையக்காரர்' என்று பட்டம் சூட்டுவதும் உண்டு. பாளைய நிர்வாகப் பொறுப்பில் அவர்களுக்குப் பயிற்சி ஏற்பட இது மிகச் சிறந்த முறையாகக் கையாளப்பட்டது.

இரண்டாவது பாளையக்காரர் முதல் 8 ஆவது பாளையக்காரர் வரை அமைதியாக இருந்து அவ்வுக்காலத்தில் ஆட்சி

நடத்தும் அரசர்கள் குறிப்பறிந்து வரிவசூல் செய்து ஊத்துக் குழியில் வாழ்ந்து வந்தனர். 9ஆம் பாளையக்காரர் நஞ்சைய காலிங்கராயர் காலத்தில் கொங்கு நாட்டை ஆண்டவர் மதுரை விசுவநாத நாயக்கர் ஆவார். எல்லாப் பாளையக்காரர்களையும் மதுரைக்கு அழைத்துப் பேட்டி யளித்தார் விசுவநாத நாயக்கர். அக்காலத்தில் திருநெல்வேலிச் சீமையில் 'அஞ்சு ராசாக்கள்' (5 அரசர்கள்) கோட்டை கட்டிக்கொண்டு மதுரை நாயக்கருக்கு அடங் காமல் கலகம் செய்து வந்தனர். விசுவநாத நாயக்கர் ஆணைப்படி நஞ்சைய காலிங்கராயர் அவர்கள் ஐவரையும் போரில் அடக்கிச் சிறையெடுத்து மதுரைக்குக் கொண்டு வந்தார். நாயக்கர் காலிங்கராயரைப் பாராட்டிப் பல பரிசு கள் அளித்ததோடு 'பராக்கிரமன்' என்ற பட்டத்தையும் அளித்தார். மதுரைக் கோட்டையில் 51ஆம் கொத்தளத் துக்கு அவரைத் தலைவராக்கினான். பாளையத்தைச் சேர்ந்த கிராமங்களின் வரிகள் அனைத்தையும் நீக்கினான். 72 பாளையப்பட்டில் ஊத்துக்குழியை ஒன்றாக மதுரை நாயக்க அரசர்கள் நியமித்தது ஏனைய கொங்கு நாட்டுப் பட்டக்காரருக்கும் பாளையக்காரருக்கும் இல்லாத தனிச் சிறப்பாகும்.

19ஆம் பாளையக்காரர் விருமாண்டக் காலிங்கராயர் காலத்தில் மதுரை அரசுக்கும் மைசூர் அரசுக்கும் போர் ஏற்பட்டது. அப்போர்கள் பெரும்பாலும் ஆனைமலை சூழ்ந்த கொங்குநாட்டுப் பகுதிகளுக்காகவே நடந்தது. எனவே தங்கள் அதிகாரத்தையும் நிலங்களின் உரிமைகளை யும் காத்துக் கொள்வதே பாளையக்காரர்களுக்குப் பெரிய பொறுப்பாக இருந்தது. 22ஆம் பாளையக்காரர் வரைக்கும் இந்த நிலையே நீடித்தது.

23ஆம் பாளையக்காரர் நஞ்சைய காலிங்கராயர் காலத்தில் ஆனைமலைப் பகுதி மைசூர் இம்முடி ராஜாவின் வசம் இருந்தது. நஞ்சைய காலிங்கராயர் குடகின் மீது

படையெடுத்துக் கொண்டு சென்று மைசூருக்காகப் போராடி வென்றார்.

உள்ளம் உவந்து 8 கலசங்களுடன், தங்கப் பல்லக்கும், விலைமதிக்க முடியாத ஆடையணிகளும், 9 கிராமங்களில் 750 பொன் வரிச்சலுகையும் அளித்தார். அப்போது காலிங்க ராயரிடம் 5000 காலாட்படையினரும் 5000 குதிரை வீரர் களும் இருந்தனர். ஒரு கடகம் யானைப் படையும் இருந்தது. இவரும் இவருக்குப் பின்னர் வந்தவர்களும் ஆனைமலையில் யானைகள் பிடித்து மைசூர் அரண்மனைக்கு அனுப்பி வைத்துக் கொண்டும், அரசர்களுக்கு வேண்டிய காலத்தில் உதவி செய்து கொண்டும் வாழ்ந்தனர். ஆனைமலையையும் மாச்சி நாயக்கன் குட்டையையும் காவல் காத்து வந்தனர். இவ்விடங்களின் வரிவசூல் உரிமைகளும் இவர்கள் வசமே இருந்தன. எனினும் அரசர்கள் மாறும்போது பாளையக் காரர்களுக்குச் சில தொல்லைகள் இருந்தன. இக்காலத்தில் காவல் படையிலும் பாதி அழிந்து விட்டது.

26ஆம் பாளையக்காரர் கோழிக்கோடு அரசர்மீது போர் தொடுத்துத் தோல்வியடைந்த போதும் ஆனைமலை மீதுள்ள உரிமையை விடவில்லை. அவர் காலம் வரை வரி வசூலிக்கும் உரிமை இருந்தது.

27, 28ஆம் பாளையக்காரர்கள் காலத்தில் ஐதர் அலியின் படைகள் கொங்கு நாட்டில் கொள்ளையடித்தன, கொலைகள் புரிந்தன. வரி வசூலிக்கும் உரிமைகள் அனைத்தும் எல்லாப் பாளையக்காரர்களிடமிருந்து பறிக்கப்பட்டன. கி.பி. 1769 முதல் 1799ஆம் ஆண்டு வரை அதிகாரத்திலிருந்த குமாரசாமிக் காலிங்கராயர் காலத் திலும் ஐதர் அலியின் மகன் திப்பு சுல்தானின் தொல்லைகள் மிகுந்தன. எனவே, திப்புவை ஒழிக்க அவர் கிழக்கிந்தியக் கம்பெனியாரோடு சேர்ந்து கொண்டார். குமாரசாமிக் காலிங்கராயரைப் போலவே மற்றக் கொங்கு நாட்டுப் பட்டக்காரர்கள் பெரும்பாலும் திப்புவின் தொல்லைகள்

பொறுக்கமாட்டாமல் திப்புவை ஒழிக்க ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பணம், படை போன்றவைகளை அளித்து எல்லா உதவிகளையும் செய்தனர். அனைவரும் 'கும்பினி சர்க்கார் அதிகாரம்' நாட்டில் நிலைக்கத் துணைபுரிந்தனர். இதற்கான பல சான்றுகள் சென்னை அரசினர் பழஞ்சுவடிச் சாலையில் இருக்கின்றன. இறுதியில் திப்புவின் ஆட்சி ஒழிக்கப்பட்டபோது, தம் பகுதியில் வரி வசூலிக்கும் உரிமையைக் குமாரசாமிக் காலிங்கராயர் பெற்றார். ஆனால் வசூலில் 10இல் 7 பங்கைக் கம்பெனிக்கு அளித்துவிட வேண்டிவந்தது. 10இல் 3 பங்கையே காலிங்கராயர் பரம்பரையினர் வைத்துக் கொள்ளலாம் என்ற ஒப்பந்தம் இருந்தது. 30ஆம் பாளையக்காரர் முத்துக்குமாரசாமிக் காலிங்கராயர் நாளிலும் அவ்வாறே நடந்தது. ஜமீன் எல்லைக்குள் 19ஆம் நூற்றாண்டில் 10 கிராமங்கள் அடங்கியிருந்தன. 10,600 ரூபாய் வசூல் ஆயிற்று. அரசுக்கு 4393 ரூபாய் அளிக்கப்பட்டது. இது பிற்கால நிலை.

31ஆம் பாளையக்காரர் முத்துக்கிருஷ்ணசாமிக் காலிங்கராயர் 1832இல் பிறந்தார். அவர் பட்டத்திற்கு வந்தவுடன் ஆனைமலை, மாச்சி நாய்க்கன்குட்டை போன்ற இடங்களில் சில பகுதிகளை விலைக்கு வாங்கினார். அங்கு மாளிகைகளையும் கட்டினார். இவர் சிறுவராய் இருக்கும்பொழுதே இவர் தாயார் நஞ்சையம்மாள் தன் சேமிப்புப் பணத்தைக் கொண்டு அம்பராம் பாளையத்தில் ஒரு பெரிய மாடி வீட்டைக் கட்டினார். அது பிற்காலத்தில் தங்கும் சத்திரமாகப் பயன்படுத்தப்பட்டது. இவர் 23-4-1874 ஆம் ஆண்டு காலமானார்.

அடுத்து 32ஆம் பாளையக்காரராகச் சிவசுப்பிரமணிய திருமூர்த்திக் காலிங்கராயர் பட்டத்திற்கு வந்தார். ஜமீன் காரியங்களில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். சில புதுக்கிராமங்களையும் விலைக்கு வாங்கினார். தமிழில் மிகப் புலமை கொண்ட அவர் ஆங்கிலத்தையும் தனியாக ஓர் ஆசிரியரிடம் கற்றார். வேதாந்த ஆராய்ச்சியில்

தேர்ச்சி பெற்று விளங்கினார். இரண்டாம் சந்திர குப்தரும் ஹர்ஷரும் அக்பரும் தமிழகத்து மன்னர்களில் பலரும் எப்பொழுதும் வேதாந்த வல்லுநர்களைத் தம் அருகிலேயே வைத்துக் கொண்டிருந்தது போல இவரும் வேதாந்தப் பண்டிதர்களையும் தமிழ்ப் புலவர்களையும் தம் அருகிலேயே வைத்துக் கொண்டிருந்தார். எனவே இவரை அனைவரும் 'வேதாந்த துரை' என்றழைத்தனர். 7 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்த இவர் 1881ஆம் ஆண்டு கால மானார்.

பின்னர் இவருடைய தம்பி முத்துராமசாமிக் காலிங்க ராயர் 33ஆம் பாளையக்காரர் ஆனார். இவர் 24-1-1864 இல் பிறந்தார். 17 ஆம் வயதில் பாளையக்காரர் ஆனார். இவர் இளமையில் குதிரை ஏற்றத்திலும் வேட்டையாடு வதிலும் சிறந்து விளங்கினார். மற்போரிலும் உடற்பயிற்சி யிலும் ஆர்வம் காட்டினார். இசையை முறையாகக் கற்றதோடு சிறந்த இசைப் புலவர்களையும் ஆதரித்தார். பாளையக்காரரானவுடன் திரு ரைட் என்ற ஆங்கிலேயரிடம் தனியாக ஆங்கிலம் கற்றார். அரண்மனையை அழகுபடுத்து வதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஜமீன் வருமானத்தை உயர்த்தினார். இவர் செய்த எல்லாச் சிறந்த பணிக்கும் திருவனந்தபுரம் மானுப்பிள்ளை என்பவர் உதவியாக இருந்தார்.

புலவர்க்கு என்றும் ஓய்விலாது உதவு கீர்த்தி ஓங்க வாழ்பவர் சமத்தூர்க் குறுநில மன்னர் வானவராயர் மரபினர். சேர அரசிடம் வானவராயர் பட்டம் பெற்றவர் கள். வணங்காமுடிப் பட்டம் பெற்ற அவர்கள் கொங்கு வேளாளரில் பவள குலத்தின் பண்புடைத் தலைவர்கள். 1894இல் சமத்தூர்ப் பாளையக்காரர் வானவராயர் நோய் வாய்ப்பட்டார். ஊத்துக்குழிப்பாளையக்காரருக்கு உறவின ரான சமத்தூர்ப் பாளையக்காரர் தன்மகனை ஊத்துக்குழிப் பாளையக்காரரிடம் ஒப்படைத்தார். சமத்தூர்ப் பாளையக் காரரும் ஊத்துக்குழியில் தங்கியிருந்து 14-11-1895இல்

காலமானார். கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் ஊத்துக்குழிப் பாளையக்காரரிடமே சமத்தூர்ப் பாளையம் இருக்கட்டும் என்று செய்த பரிவுரையை அரசு ஏற்றுக் கொண்டது. சமத்தூர் ஜமீன் வருமானத்தை உயர்த்திச் சீர்திருத்தங்கள் பல செய்து சமத்தூர் இளைய ஜமீன்தாருக்கும் தன் மகளுக்கும் 1901இல் மிகச் சிறப்பாகத் திருமணம் செய்து வைத்தார்.

மைவாடி ஜமீன்தார் இறந்தவுடன் மாவட்ட நீதிபதியின் அதிகாரப் பொறுப்பிலிருந்த இந்த ஜமீனை அரசு வேண்டு கோள்படி 1898இல் அதன் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றார். தாலூக்காக் கழகம், மாவட்டக் கழகம் இவை களில் உறுப்பினராக இருந்தார். கோவை வேளாண்மைக் கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். பல நிலையங்களுக்கும் விழாக்களுக்கும் ஆயிரக் கணக்கில் நன்கொடைகள் அளித்தார். 1912இல் ஊத்துக்குழியில் ஒரு தொடக்கப் பள்ளியை ஏற்படுத்தி 3000 ரூபாய் மானியம் அளித்ததுடன் மாத வருமானம் நிலைத்து மானியமாக வரவும் தக்க ஏற்பாடுகள் செய்திருந்தார்.

மிகச் சிறந்த அறிவாளியான இவர் பணியாட்களிடமும் மிக அன்பாக நடந்து கொண்டார். 1910ஆம் ஆண்டு கொடிய பிளேக் நோய் உண்டானபோது அரிய பணிகள் பல புரிந்தார். இவருடைய பணியைப் பாராட்டிய அரசாங்கத்தினர் இவருக்கு 1913இல் திவான்பகதூர் பட்ட மளித்துச் சிறப்பித்தனர். 1917இல் ஜமீன்தார்கள் பிரதி நிதியாக இந்திய அரசுச் செயலாளர் மாண்டேகுவையும் இந்திய வைசிராய் செம்சுபோர்டையும் சந்தித்தார்.

1917ஆம் ஆண்டு ஆகஸ்டு 19, 20 தேதிகளில் பிராமணரல்லாதோர் மாநாடு (Non-Brahmin Conference) கூட்டப்பட்டபோது, வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்து முக்கியப் பங்கேற்றார். அவர் காலத்தில் நடத்தப் பட்ட நான்கு மாநாடுகளிலும் கலந்து கொண்டார்.

தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தில் (South Indian Liberal Federation) உறுப்பினராக இருந்தார். இன்றைய தமிழக அரசியலுக்குக் கால்கோளாக இருந்த அந்த அமைப்புக் களைத் தோற்றுவித்துக் கட்டிக் காத்த பெருமை முத்துராமசாமிக் காலிங்கராயரையே சேரும்.

சென்னை ஜமீன்தார்கள் நிலக்கிழார்கள் சங்கத்தின் (Madras Zamindars and Landlords Association) துணைத் தலைவராக விளங்கினார். இவர் பொதுமக்களுக்காகப் பல்வேறு நன்கொடைகளைப் பெரிய அளவில் வழங்கினார்.

1. பிராமணரல்லாதோர் மாநாடு
2. இங்கிலாந்து இளவரசரின் திருமணம்
3. சென்னையில் அமைக்கப்பட்ட ராஜ்குமார் கல்லூரி
4. டாக்டர் நாயர் அவர்களின் நினைவு நிதி
5. குன்னூரிலுள்ள பாஸ்டர் நிறுவனம்
6. வேல்ஸ் இளவரசரின் வரவேற்புக்குழு
7. குன்னூரிலுள்ள லாலி மருத்துவமனை

ஆகியவற்றிற்குப் பெருந்தொகை வழங்கினார்.

இவர் 1918இல் பொது வாழ்க்கையிலிருந்து விலகிக் குன்னூர், கொடைக்கானலில் ஓய்வெடுத்து வந்தார். 1931இல் இவ்வுலக வாழ்வை நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

கோவையில் முக்கியமான தெரு ஒன்றிற்குக் காலிங்க ராயர் தெரு என்று பெயர் வைத்திருப்பது கோவை மக்களுக்கு இக் குடும்பத்தின்மீது இருந்த பற்றுக்கு எடுத்துக் காட்டாகும்.

34ஆவது பாளையக்காரராக வந்தவர் அகத்தூர் முத்துக்கிருஷ்ணசாமிக் காலிங்கராயர். இளமையிலேயே தந்தை இருக்கும்போதே பல பொதுப்பணிகளில் ஈடுபட்டார். முதல் உலகப் பெரும் போரின்போது படைக்கு ஆட்களைச் சேர்ப்பதில் மிக உதவினார். கோவையில் கௌரவ நீதிபதியாக இருந்தார். படையில் பெரிய அதிகாரியாக இருக்கச் சென்னை ஆளுநரால் அழைக்கப் பட்டார். ஆனால் இவர் அப்பதவியில் சேரவில்லை. இவருடைய பணிகளைப் பாராட்டிப் பட்டங்களும் பதக்கங் களும் பல வழங்கப்பட்டன. 1932இல் வேல்ஸ் இளவரசர் சென்னை வந்தபோது அவரைச் சிறப்புடன் வரவேற்றார். நாடு போற்றும் நல்லோராக விளங்கிய இவர் 1936இல் மறைந்தார். இவருக்கு அளிக்கப்பட்ட பல பாராட்டுக் களில் மாதிரிக்காக இரண்டு இங்குக் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

I

## The Kumara Poligar of Uttukuli

Sri Agathur Muthu Krishnaswami Kalingarayar, the eldest son and heir, is now actually managing the affairs of the poliem after the retirement of his revered father. He took a leading part in the year 1919 in the recruitment of men for field service in Mesapatomia. He was appointed Honorary Assistant Recruiting Officer for the Pollachi Taluk. He recruited the largest number of men from Coimbatore District, especially in the Pollachi Taluk. He was awarded a certificate of Merit and a Medal for the valuable Services rendered in the recruitment of men for field service. The following is a copy of the badge and sannad presented;—

Recruiting badge awarded to M. R. Ry. Agathur Muthu Krishna Kalinga Rayar Avargal, Kumara Zamindar of Uttukuli and Member of thie District Board, Coimbatore, the Services rendered in connection with recruiting during the great war.

Sd/- A. H. BINGLEY,

10th December 1919.

Major General,
Secretary to the Government of India,
Army Dept.

II

The Sanned is presented to M. R. Ry. Agathur Muthu Krishna Kalinga Rayar Avargal, Kumara Zamindar of Uttukuli by order of hrls excellency the Viceroy and Governor General of India in recognition of service rendered to the Indian Army during the great war and as a mark of approbation.

Sd/- A. H. BINGLEY,

SIMLA
Dated : 3rd Aug. 1920.

Major General,
Secretary to the Govt. of India,
Army Dept.

35 ஆவது பாளையக்காரராகப் பட்டமேற்றவர் உயர்திரு அகத்தூர் முத்துராமசாமிக் காலிங்கராயர் ஆவார்கள். 9-4-1918இல் அகத்தூர் முத்துக்கிருட்டிண சாமிக் காலிங்கராயருக்கும் சண்பகவல்லியம்மாளுக்கும் மகனாகப் பிறந்த இவர் 13-4-1936இல் ஜமீன் பட்டமேற்று வழிவழிப் பெருமைக்கு உரியவராயினர்.

இவருடன் பிறந்தவர்கள் திரு அருணகிரிக் காலிங்க ராயர் திரு கதிர்வேல் காலிங்கராயர் என்னுமிருவராவர். இவருடைய சகோதரியார் திருமதி அகத்தூர் அம்மாள் அவர்கள் பழையகோட்டைப் பட்டக்காரர் திரு நல்ல சேனாதிபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாராவார். பட்டக்காரர் அவர் களின் சகோதரியார் திருமதி ருக்மணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்று வாழ்ந்த இல்வாழ்வில் மக்கட் செல்வங்களாகக் கிருஷ்ணராஜ் காலிங்கராயர், வெற்றிவேல் காலிங்கராயர், மோகன்ராஜ் காலிங்கராயர், அருண்குமார் காலிங்கராயர் எனும் நான்கு ஆண் மக்களும் சித்திரகலா காலிங்கராயர் என்ற பெண்ணும் உள்ளனர். மோகன்ராஜ் காலிங்கராயர் பொள்ளாச்சித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

அகத்தூர் முத்து ராமசாமிக் காலிங்கராயர் அவர்கள் தம் மைத்துனர் பழையகோட்டை இளவல் அர்ஜுனன் அவர்கள் போலவே பெரியார், அண்ணா ஆகியோர்மீது மிகுந்த பற்றுக்கொண்டு விளங்கினார். சமூக சீர்திருத்தம், பொதுமைக் கொள்கை ஆகியவற்றின்மீது மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். மாவட்டத்தில் அரசியல் இயக்கங்களில் நேரடியாக ஈடுபடாமலேயே அவைகட்கு வழிகாட்டியாக விளங்கினார். அஞ்சாமையும், ஆற்றலும், பேரறிவும் கொண்டு பொதுப் பிரச்சனைகளை அணுகினார். கோவை யில் அண்ணா சிலை நிறுவியது இவர்கள் முயற்சியாலே யாகும். அண்ணா நினைவாக இன்னும் பல நிறுவனங்களை ஏற்படுத்துவதாக இருந்தார். அதற்குள் அவர்கள் 20-11-1966இல் அமரர் ஆனார்கள்.



ஊராட்சிக் கோட்டை மலை



கல் வந்த வழி



அணையில் கம்பி இணைப்பு



காலிங்கராயன் அணை




தலைப்பு மதகு



ஈரோடு - ஐயனாரப்பன் கோயில்



கால்வாய்க் காட்சி



நொய்யலில் கலத்தல்

# நிருவாகம் - அன்றும் இன்றும்

காலிங்கராயன் காலத்தில் கால்வாய்ப் பராமரிப்புக்குக் கொங்கு நாட்டில் 'காலிங்கராய வினியோகம்' என்ற வரி வசூலிக்கப்பட்டது. சோழநாட்டில் இதுபோன்று 'காவிரிக் கரை வினியோகம்' என்ற வரி வாங்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஆங்காங்கு இருக்கும் ஊர்ச்சபைகள் கால்வாய்க் கரைகளின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் கவனித்துக் கொண்டன. அந்தந்தப் பகுதி விவசாயிகளே தங்கள் பகுதிக் கால்வாயைக் கண்காணித்துக் கொள்ளும் 'குடி மராமத்து முறை'யும் சில காலங்களில் இருந்தது. பரம்பரைத் தொழிலாளர் பணியமர்ந்து கால்வாயைக் கண்காணிக்கும் வழக்கமும் இருந்தது.

கால்வாய் நீரைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமைக்காகவும் கால்வாய்ப் பராமரிப்புக்கும் பழங்காலத்தில் நெல்லாகத் தீர்வை வசூல் செய்யப்பட்டது. நெல்லாக அளப்பதில் பல குறைகளும் சமச்சீரின்மையும் காணப்படவே தீர்வை காசாக நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டது ஊரவை, நாடு, அரசுப் பங்குக்குக் காசாகக் கொடுக்கப்பட்ட பின்பும்கூட உள்ளூர்க் காவல்காரர், தலையாரி போன்ற கீழ்நிலை அலுவலர்கட்குத் தானியமாகவே கூலி கொடுக்கப்பட்டது.

இவ்வாறு வசூல் செய்யப்பட்ட தீர்வை, நிலங்களின் தரத்திற்கு ஏற்ப அமைந்திருந்தது. பாசனப் பகுதியில் நன்செய்க்கு $21\frac{3}{4}$ ரூபாயும் ன்செய்க்கு $13\frac{1}{2}$ ரூபாயும் மானாவரிக்கு $12\frac{1}{2}$ ரூபாயும் வரியாகும். இப்பொழுது வேறுபாடு இன்றி எக்டேருச்சு (2.47 ஏக்கர்) $55\frac{1}{2}$ ரூபாய் வசூலிக்கப் படுகிறது.


காலிங்கராயன் கால்வாய்
வ
குமாரபாளையம்
பள்ளிபாளையம்
காவிரியாறு
பவானி
பவானி ஆறு
காலிங்கராயன் அணை
சுண்ணாம்பு ஓடை
பிச்சைக்காரன் பள்ளம்
ஈரோடு
பெரும்பள்ளம்
காலிங்கராயன் கால்வாய்
சாவடிப் பாளையம்
பாசூர்
மலையம்பாளையம் வாய்க்கால்
கொளாநல்லி
ஊஞ்சலூர்
குரங்கன் பள்ளம்
வெங்கம்பூர்
கொடுமுடி
ஆவுடையா பாறை
ஆவுடையாபாறை வாய்க்கால்
நொய்யல்
காலிங்கராயன் பாசனப் பகுதி
சேலம்
ஈரோடு
கரூர்
கோவை
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இந்துமாக்கடல்

தனிப்பாடல் ஒன்று பாரப்பத்தியம், மேல்மணியம், டபேதார், சுபேதார் இவர்கள் அணை, கால்வாய் நிருவாகிகள் என்றும், தாசில்தார் இவர்கட்கு மேல் அதிகாரி என்றும் இவர்கள் பொருட்டு செய்க்கு 5 வள்ளம் நெல் அளக்க வேண்டும் என்றும் கூறுகிறது. சிவிலிஞ்சினியர், பிரின்சிபல் கலெக்டர் ஆகியோர் இவர்களின் மேல் உயர் அதிகாரிகள் ஆவர். காலிங்கராயன் கால்வாய்ப் பகுதியில் அப்பணிக்காகக் கொடுக்கப்படும் நெல் 'அணை வள்ளம்' என்னும் தனி அளவை மூலம் அளந்து தரப்பட்டது என்பதும் தெரிகிறது. அடிக்கடிப் பாலங்கள் பழுதுபார்த்துக் கால்வாய் மராமத்து வேலைகளும் நடக்கவேண்டும் எனக் கூறுகிறது அப்பாடல்.

அரசு, முத்திரைக் காகிதம் அவ்வப்போது அனுப்பும் என்றும், முத்திரைக் காகிதத்தில் கண்டுள்ளபடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்றும் அதற்கு மாறுபட்டால் கையிழுத்துப் பிடித்து கடுந்தண்டனை கொடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

யாருக்கும் தெரியாமல் திருட்டுத் தனமாக மதகைப் பிடுங்கி நீர் பாய்ச்சினால் 5 ரூபாய் அபராதம் போட்டுக் கழுத்தில் துடும்பு போட்டு அடித்து வாசியூர் (பாசூர்) முதல் ஆவுடையாபாறை வரை அவன் தவறு எல்லோருக்கும் தெரியும்படி செய்யப்படும்.

சுமார் 170 ஆண்டுகட்கு முன் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகத்தில் கால்வாய் பொதுப் பணித்துறை நிருவாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இன்று வரை அணையையும் கால்வாயையும் பொதுப்பணித்துறையே நன்கு கவனித்து வருகிறது. பொதுப்பணித்துறை நிருவாகத்தின்கீழ் அணையும் கால்வாயும் வந்ததும் 1832இல் பல பகுதிகளில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் அணைத்தோப்பு, காலிங்கராயன் பாளையம், கொம்பணை ஆகிய இடங்களில் உள்ளன. ஜி.டி. டூறூறி மாவட்ட ஆட்சித்தலைவராகவும் பேப்பர்

துரை சிவில் எஞ்சினியராகவும் இருந்தபோது 1832-1833இல் சுப்பராயர் என்பவர் பாலங்கள் அமைத்ததாக அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

1832, 1868, 1891, 1936, 1954, 1962, 1974 ஆகிய ஆண்டுகளில் பெரிய அளவில் பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்றன. 1973-74 இல் 66 லட்சம் ரூபாய் செலவிடப் பட்டது. அதற்காகத் தனிப்பிரிவு ஏற்பட்டது. அத்தனிப் பிரிவு 30.6.1977ல் கலைக்கப்பட்டது.

காலிங்கராயன் கால்வாயில் மொத்தம் 769 மதகுகள் உள்ளன. இம்மதகுகள் யாவும் கால்வாயின் இடது பக்கத்தில் அமைந்துள்ளவையாகும். வலது பக்கம் பெரும்பாலும் நிலம் மேடாக இருக்கும் காரணத்தால் அடைக்கப்பெறாத குழாய் மூலமாகவோ அல்லது கால்வாயின் அருகில் அமைக்கப்பட்டுள்ள உயரமான துலைகளின் மூலமாகவோ மாடுகளைக் கொண்டு இறைத்து நீர்ப்பாசனம் செய்கிறார்கள். அண்மையில் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பலர் புதிதாக வலதுபுறம் வைத்துள்ளதால் முதலில் 1950 வரையிலும், பின்னர் 2-10-1961 வரையிலும், பின்னர் தற்போது 1984 வரையிலும் அவ்வாறு வைத்துக் கொண்டவர்களுக்கு அனுமதி வழங்கினர். இப்போது 1984க்குப் பின்னர் இயந்திரம் பொருத்தியவர்களுக்கு அனுமதியில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. 1962-73 வரை நீர் இறைக்கும் இயந்திரங்கள் 68% அதிகரித்துள்ளது. வலது புறம் அமைக்கப்பட்ட இந்த இயந்திரங்கள் மாடுகளுக்குப் பதிலாக அமைக்கப்பட்டதுதான். வேளாண்மையில் மாடுகட்குப் பதிலாக இயந்திரக்கருவி அமைக்கப்பட்டுள்ளது. இதைக் கருதி 2-12-1962 பொதுப்பணித்துறை ஆணை எண் 3339 இன்படி அனைவருக்கும் அனுமதி அளிக்கலாம். இதனை அரசு பரிசீலிக்க வேண்டும்.

தலைப்பு மதகுகள் 1879 ஆம் ஆண்டு கட்டப்பட்டன.

காலிங்கராயன் கால்வாயில் அதிகபட்சம் உயரம் நீர் தேங்கி நிற்கும் அளவு 8 அடியாகும்.

காலிங்கராயன் கால்வாயில் முதலில் கல் மதகுகள் அமைக்கப்பட்டுப் பூட்டும் வசதியில்லாமல் தண்ணீரை நீர்ப்பாசனத்திற்கு உபயோகித்து வந்தார்கள். தற்போது ஒவ்வொரு மதகிற்கும் பூட்டும் வசதியுள்ளது. இதனால் தண்ணீர் சேதமாவது தடுக்கப்படுகிறது.

கால்வாயில் நீர் பகிர்ந்தளித்தலைக் கவனிக்க கால்வாயை நான்கு பகுதியாகப் பிரித்திருக்கின்றனர். முதல் பகுதிக்கு ஒரு நீர்ப்பதிவாளரும் இரண்டு நீராணிகளும் பொறுப்பாக உள்ளனர். அவர்கள் கால்வாயைக் கவனித்துக் கொண்டு நீர் பகிர்ந்தளித்தலையும் கவனிக்க வேண்டும். ஏனைய மூன்று பகுதிகட்கும் ஒரு கரைக் கண்காணிப்பாளரும் நீராணிகள் நால்வர் வீதமும் கவனித்து வருகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 16ஆம் தேதி மாலை 6 மணிக்கு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் அனுமதிக்கப் பட்டு ஏப்ரல் 30 ஆம் தேதி மாலை 6 மணி வரை பத்தரை மாதங்களுக்குத் தொடர்ந்து தண்ணீர் வழங்க வேண்டும். மிகத் தொன்மையான இப் பவானி யாற்று அணை மூலம் 16 மைலிலிருந்து 56½ மைல் வரை முப்போகத்திற்குக் காலிங்கராயன் கால்வாய்த் தண்ணீர் பெறுவது காலிங்கராயன் கால்வாய்ப் பகுதி உழவர்களின் அடிப்படைப் பூர்வீக உரிமையாகும். இது 2-11-1966 அன்று பொதுப்பணித்துறை வெளியிட்ட 2647 ஆம் எண் அரசு ஆணையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 10½ மாதம் தண்ணீர் விடுவதை 9 மாதமாகக் குறைத்துப் பாசனத்தை இருபோகமாக்கித் தாராளமாகப் பாசனத்திற்குத் தண்ணீர் விட வேண்டும் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

கால்வாயில் ஆங்காங்கே சிறு ஓடைகள் மூலம் வெள்ள நீர் வந்து சேர்கிறது. அந்த நீரால் வாய்க்காலின் முழு அளவு நீர்மட்டம் உயர்ந்து கரைக்கு ஆபத்து உண்டாகும் நிலையில் இருந்தால் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள தாம்பாங்கிகள் எனப்படும் மணற்போக்கிகளின் மூலமாகப்

போதிய அளவிற்குத் தண்ணீர் உடனுக்குடன் வெளியேற்றப் பட்டுக் கரை பாதுகாக்கப்படுகிறது. இப்போது அண்மையில் சுண்ணாம்பு ஓடை, பிச்சைக்காரன் பள்ளம் போன்ற இடங்களில் ஓடை நீர் கால்வாயில் கலக்காமல் மேலே செல்லவும் கால்வாய் கீழே குழாய் மூலம் செல்லவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மூன்று இடங்களில் சைபன் எனப்படும் இத்திட்டம் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் கால்வாயில் தண்ணீர் நிறுத்தப் பட்டதும் முக்கியமான இடங்களில் தேவையான பழுது பார்க்கப்படுகின்றன. அதற்காகத்தான் குறைந்தது 45 நாட்களாவது தண்ணீர் நிறுத்தப்படும்.

தொலைபேசித் தொடர்பு பொதுப்பணித் துறை யினரால் அமைக்கப்பட்டுக் காசிபாளையம் அருகிலும் பவானி அணைக்கட்டிலும் ஈரோடு தலைமை அலுவலகத் திலும் இயங்குகிறது. அவ்வப்போது முக்கியமான செய்தி கள் இருப்பின் தொலைபேசி மூலம் தொடர்புடைய அலுவலர்கட்கு அறிவிக்கப்படுகிறது. முழு அளவு நீர் மட்டத்தைக் குறிக்கும் அளவு கோல்கள் கால்வாயில் மொத்தம் 14 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 14 இடங்களிலிருந்தும் அன்றாட அளவு ஈரோட்டிலுள்ள தலைமை நிலையத்திற்குத் தெரிவிக்கப்படுகிறது. அதற்குத் தகுந்தாற்போல் பவானி அணைக்கட்டுக்குச் செய்தி அனுப்பப்படுகிறது. அச்செய்திகட்கு இணங்க அணைக் கட்டில் இருக்கும் நீர்ப்பதிவாளர் நீர் பகிர்ந்தளித்தலைச் செய்வார்.

ஒவ்வொரு நீராணியும் தன்னுடைய பகுதியில் உள்ள மதகுகளைக் கவனித்துக் கொள்வதுடன், தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் சமயங்களில் தொடர்புடைய மேலதிகாரிகள் ஆணைக்கு இணங்க இரவு நேரங்களில் மதகுகளை அடைத்து வாய்க்காலின் கடைசிப் பாகத்திற்குத் தண்ணீர் சரியான அளவிற்குச் செல்லப் பொறுப்புடன் உதவி புரிகின்றார்கள். நீராணிகள் சரிவரக் கவனிக்கிறார்

களா என்பதை மேற்பார்வையிட ஒரு கரைக் கண்காணிப்பாளர் உள்ளார். நீராணிகளையும் கரைக் கண்காணிப்பாளரையும் நீர்ப் பதிவாளரையும் கண்காணித்துக் கொள்ளப் பிரிவு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈரோடு பொதுப்பணித்துறைக் கோட்டத்தின் நிருவாகத்தில் உள்ள மேற்குச் சிறுகோட்டத்தினரால் இப்போது காலிங்கராயன் கால்வாய் நிருவகிக்கப்பட்டு வருகிறது. அத்துறையினரால் கீழ்க்கண்டவாறு காலிங்கராயன் கால்வாய் நிருவாகம் இன்று நடைபெறுகிறது.

நிருவாகப் பொறியாளர்

↓

உதவிச் செயற் பொறியாளர்

↓

பிரிவு அதிகாரி அல்லது இளம் பொறியாளர்

↓

நீர்ப்பதிவாளர் (அல்லது) கரை கண்காணிப்பாளர்

↓

நீராணி

காலிங்கராயன் அணையில் கால்வாய்க்கு நீர்வரும் தலை மதகுகள் ஆறு கண்ணறைகளாக உள்ளன. அவை ஒவ்வொன்றின் அளவுகள் 6'.6"×4'.6" ஆகும்.

மணற்போக்கிகள் மூன்று கண்ணறைகளாக அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொன்றின் அளவுகள் 6'.0"×4'.6" ஆகும்.

காலிங்கராயன் கால்வாயில் காலத்துக்குக் காலம் பல சீரமைப்புக்கள் செய்யப்பட்டுப் பொதுப்பணித்துறையில் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டும் நிர்வகிக்கப் பட்டும் வருகிறது. பொதுப்பணித்துறையில் அவ்வப்போது பின்வரும் சீர்திருத்தங்கள் மிக நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது. 720 ஆண்டுகட்கு முன்பு கட்டப்பட்ட தொன்மையான அணையையும் வெட்டிய கால்வாயையும் கண்மணியை இமைகள் காப்பதுபோல்

பொதுப்பணித் துறையினர் அல்லும் பகலும் அயராது காத்து வருகின்றனர்.

பொதுப்பணித்துறை கீழ்வரும் சீரமைப்புக்களைச் செய்துள்ளது.

1. வாய்க்கால் சைபன் கட்டுதல்
2. ரெகுலேட்டர்கள் கட்டுதல்
3. வாய்க்காலினுள் மாதிரிக் கட்டிடங்கள் அமைத்தல் (Model Section)
4. நீர் வெளியேறும் பகுதிகள் கட்டுதல் (Out lets)
5. நீர் தேங்கிக் கீழிறங்கும் பகுதிகள் அமைத்தல் (Drops)
6. கரைகளை அகலப்படுத்திச் சாலைகள் அமைத்தல்
7. தூர் எடுத்தல்
8. கரைச் சரிவுகளில் கருங்கல் கட்டிடம் கட்டுதல் (Revetments)
9. கரைகளைப் பலப்படுத்துதல்
10. பின் தொட்டிகள் அமைத்தல் (Rear cisterns)
11. கால்வாயில் தேவைக்கேற்பத் தண்ணீரைத் தேக்கும் அமைப்பை ஏற்படுத்துதல் (Bed Regulaters)

இப்பணிகளால் வீணாகும் தண்ணீர் சேமிக்கப்பட்டுப் பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்க ஏதுவாகிறது. மண் அரிப்பைத் தடுத்து நிறுத்தி வேண்டிய தண்ணீரை நிறுத்தச் செய்து தேவைக்கு ஏற்பச் சமமான தண்ணீரைப் பங்கீடு செய்வதற்கு வழிவகைகள் அமைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. தமிழகத்தில் மிகச்சிறப்புடன் நிர்வகிக்கப்பட்டுவரும் கால்வாய்களில் தலை சிறந்தது காலிங்கராயன் கால்வாயே ஆகும்.

தடப்பள்ளிக் கால்வாய் சீரமைக்கப்பட்ட போது அதில் உள்ள 448 மதகுகள் 316 ஆகக் குறைக்கப்பட்டன. அரக்கன்

கோட்டைக் கால்வாயில் 207 மதகுகள் 70 ஆகக் குறைக்கப் பட்டன. காலிங்கராயன் கால்வாயில் உள்ள 789 (769+20) மதகுகளை 226 ஆகக் குறைக்க 73-74இல் பொதுப்பணித் துறையினரால் திட்டமிடப்பட்டது. ஆனால் விவசாயிகளின் தீவிர எதிர்ப்பால் இத்திட்டம் நிறைவேற்றப் படவில்லை. கொடிவேரி அணையில் தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்களைப் பார்வையிட்டு, இன்னும் கொஞ்சம் மதகுகள் குறைப்பில் மாற்றம் செய்து இத்திட்டம் கொண்டுவந்தால் தண்ணீர் வீணாவதைத் தடுக்கலாம். காலிங்கராயன் கால்வாயில் 18ஆம் நூற்றாண்டில் 1840 மதகுகள் இருந்தன. பின் அவை 769 ஆகக் குறைக்கப் பட்டன என்பதை நினைவில் கொள்ளல் அவசியம்.

பாவனி ஆற்றின் நீளம் 104 மைல் ஆகும்- ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதி மலைப்பகுதியில் 640 சதுர மைல்கள். ஆற்றின் பயன்பாட்டுப் பகுதி சமவெளியில் 1730 சதுர மைல்கள் ஆகும்.

| | |
|---|---|
| காலிங்கராயன் முக்கிய அணையின் நீளம் | 757.00 |
| சராசரி அளவு | 541.15 |
| வெள்ளத் தடுப்புக் கரை நீளம் | 1740.00 |
| வெள்ளத் தடுப்புக் கரை உச்சி அளவு | 552.66 |
| மைய அணைக்கட்டின் நீளம் | 854.00 |
| சராசரி அளவு | 544.13 |
| முரியான் அணைக்கட்டு நீளம் | 1350.00 |
| சராசரி அளவு | 542.90 |
| உயர்ந்த அளவு வெள்ள வருகை 9-12-72 | 548.05 |
| உயர்ந்த அளவு தண்ணீர் வெளியேற்றம் 9-12-72 | 1267.77 |

காலிங்கராயன் கால்வாயில் சராசரி 11,000 Mc Ft. தண்ணீர் பாசனத்திற்காக விடப்படுகிறது.

பவானி ஆற்றில் அணைத் தோப்புக்குக் கிழக்கே ஆழமான ஆற்றுப் பகுதியில் தண்ணீர் செல்வதை முரியன் அணை தடுத்து மேற்குப் பக்கம் காலிங்கராயன் அணைப் பக்கம் தண்ணீரை அனுப்புகிறது. பவானியாற்றின் நடுவே கட்டப்பட்டிருக்கும் கலிங்கின் உதவியால் நீர்மட்டம் உயர்ந்து எளிதாகக் காலிங்கராயன் கால்வாய்க்குத் தண்ணீர் வருகிறது. மிக எளிய அமைப்பைத் திட்டமிட்டு 720 ஆண்டுகட்கு முன்பு தேர்ந்த பொறியியல் அறிவுடன் கட்டி முடித்த அணையும் கால்வாயும் அறிஞன் காலிங்க ராயன் புகழ்பாடி சந்திரசூரியர் உள்ளவரை நின்று நிலைக்கும் என்பது திண்ணம்!

பேரரசர்கள், அரசர்கள் உருவாக்கிய கால்வாய்களைத் தமிழகமெங்கும் காணுகின்றோம். ஆனால் ஒரு சாதாரணக் குடிமகன் தன் அறிவாற்றலால் பதவி பெற்று நாடு நலம் பெற நன்செய் வளம் செழிக்க இவ்வாறு திட்டமிட்டுச் சொந்தப் பொறுப்பில் கால்வாய் வெட்டி அதனைப் பொது வுடைமையாக்கி அனைவரின் பயனுக்கு விட்ட அரிய செயல் உலகில் வேறெங்கும் நடைபெற்றதில்லை.

கீழ்பவானி, கொடிவேரி போலப் பெரும்பாலும் அதிக நிலம் இல்லாமல் $\frac{1}{2}$ ஏகர் 'ஏக்கர்' 2 ஏக்கர் உடைய விவசாயி களே காலிங்கராயன் பகுதியில் அதிகம். தம் உழைப்பால் அவர்கள் பொன் கொழிக்கச் செய்கிறார்கள். இந்தியா விலேயே பஞ்சாபிற்கு அடுத்தாற்போல் இங்குதான் கடுமையாக உழைத்து நல்ல வருமானம் பெறுகின்றனர்.

## காலிங்கராயன் கரையில்

'காடெல்லாம் சிறு செந்நெல் விளையும்' என்று இலக்கியம் எடுத்துரைத்ததற்கு ஏற்பக் காலிங்கராயன் கால்வாயால் சிறப்பு மிக்க நீர்வளம் ஏற்பட்டு நிலவளம் பெருகி நன்செய் விளைவு ஏற்பட்டுள்ளது எல்லோரும் அறியும் உண்மையாகும்.

'காலிங்கராயன் கடாட்சத்தி னாலே
சாலவே இந்தத் தரணியில் வாழும்
குடியானவர்கள்'

என்று ஈரோடு ஜயனாரப்பன் பள்ளு கூறுவதற்கு ஏற்பக் காலிங்கராயனால் ஏற்பட்ட நன்மைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

கரையில் கீழ்வரும் ஊர்கள் அமைந்துள்ளன. அடைப்புக்குறிக்குள் இருப்பது கால்வாய் மைல் ஆகும்.

அணை நாசுவம் பாளையம் (0/0)
இராமநாதபுரம் புதூர் (4.2½)
பெரிய அக்கிரகாரம் (7.1½)
ஈரோடு (14.0)
சாத்தனூர் (20.00)
சாவடிப் பாளையம் (24.0)
காளமங்கலம் (27.2)
பாசூர் (31.1½)
பழனிக்கவுண்டம் பாளையம் (32.4)
வட்டக்கல் வலசு (34.4)
மலையம் பாளையம் (35.2½)
கொளாநல்லி (37.4)

குட்டப் பாளையம் $(38.0\frac{1}{2})$

காரணம் பாளையம் $(40.4\frac{1}{2})$

அமராவதி புதூர் (41.4)

கருக்கம் பாளையம் (42.0)

ஊஞ்சலூர் $(43.2\frac{1}{2})$

கொளத்துப் பாளையம் (44.4)

பனப்பாளையம் (45.6)

கல்வெட்டுப் பாளையம் (47.4)

வெங்கம்பூர் (48.2)

வடக்குப் புதுப்பாளையம் (50.0)

கணபதி பாளைம் $(51.3\frac{1}{2})$

கொடுமுடி $(53.7\frac{1}{2})$

வருந்தியா பாளையம் (54.2)

சோழக்காளி பாளையம் $(55\ 2\frac{1}{2})$

இவைகள் இல்லாமல் இவைகளின் அருகில் இன்னும் பல ஊர்கள் நெருக்கமாக ஏற்பட்டுள்ளன. இவ்வாறு பல ஊர்கள் மிக நெருக்கமாக ஏற்படக் காரணம் காலிங்கராயன் கால்வாயே ஆகும். சூரியம் பாளையம், தளவாய் பாளையம், வைரா பாளையம், கருங்கல் பாளையம், வெண்டிபாளையம், காங்கயம்பாளையம் குறுக்கபாளையம், செப்பிலி பாளையம், வேலம் பாளையம், மன்னாதம் பாளையம், பாம்பகவுண்டம் பாளையம், கோம்புப் பாளையம், காரநாயக்கன் பாளையம், வள்ளிபாளையம், பனைப்பாளையம், காசிபாளையம், கணபதிபாளைம், அரசம்பாளையம், நாகம நாயக்கன் பாளையம் ஆகியவை களும் பிற பாளையங்களும் நாயக்கர் ஆட்சியில் ஏற்பட்டன வாகும்.

காலிங்கராயன் கால்வாய்ப் பாசனப்பகுதிக்குள் இருந்த பல ஊர்கள் நீரின் மிகுதியால் அழிந்தன. ஊர்ப்பகுதிகள்

வயல்களாக மாற்றப்பட்டன. மக்கள் மேட்டுப்பகுதிக்கு மேற்கு நோக்கிக் குடி பெயர்ந்தனர். சாத்தம்பூர் மக்கள் நஞ்சை ஊத்துக்குளிக்கு குடி பெயர்ந்ததை இதற்கு எடுத்துக் காட்டாகக் காட்டலாம். பல இடங்களில் கால்வாயினால் இவ்வாறு குடிப் பெயர்வுகள் ஏற்பட்டுள்ளன.

ஊர் அழிவுபட்டதால் பழைய சில ஊர்ப் பகுதிகள் நத்தம் என்று அழைக்கப் பெற்றன. பள்ளர் நத்தம், சத்திர நத்தம், பூச்சக்காட்டு நத்தம் என்பன அவற்றுட் சிலவாகும்.

கால்வாய் வளம் ஏற்பட்டவுடன் சில ஊர்கள் நஞ்சை, புஞ்சை என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. நஞ்சை லக்காபுரம், புஞ்சை லக்காபுரம், நஞ்சைக் காள மங்கலம், புஞ்சைக் காளமங்கலம், நஞ்சைக் கொளாநல்லி, புஞ்சைக் கொளாநல்லி என அவை அழைக்கப்பட்டன.

வயல்வெளியில் நெற்போர் அடிக்கக் களங்கள் அமைக்கப்பட்டு அதன் அருகில் வீடுகள் அமைக்கப்பட்டுச் சில சிற்றூர்கள் அதனால் களம் என்றே அழைக்கப்பட்டன. இலட்சுமண கவுண்டன்களம், ஆலைக்காட்டுக்களம், கம்பங் காட்டுக்களம் என்பன அவ்வாறு அமைந்த ஊர்களாகும்.

கால்வாய் பாய்ந்து வளம் ஏற்பட்ட காரணத்தால் பழைய ஊர்களின் அருகே அப்பெயரில் புது ஊர்களும், புதிய குடியிருப்புக்களும் பல ஏற்பட்டன. அதனால் பிற பகுதியைக் காட்டிலும் காலிங்கராயன் கால்வாய்க் கரையில் ஊர்ப் பெருக்கமும் மக்கள் தொகைப் பெருக்கமும் மிகவும் மிகுதியாக ஏற்பட்டன.

புதுப்பாளையம், அணைக்கட்டுப் புதூர், வடக்குப் புதுப்பாளையம், தெற்குப் புதுப்பாளையம், மிளகாய்ப் புதுப்பாளையம், சேட்டையூர் புதூர், சாத்தம் புதூர், இராயபாளையம் புதூர், இராமநாதபுரம் புதூர், புத்தூர், ஆட்டுக் கவுண்டன் புதூர், குள்ளக்கவுண்டன் புதூர், முத்துக் கவுண்டன் புதூர், சாவடிப்பாளையம் புதூர், அமராவதி

புதூர், பொறையம்பாளையம் புதூர் என்பன அவ்வாறு புதியனவாக ஏற்பட்ட ஊர்களாகும்.

ஈரோடு, காளமங்கலம், பாசூர், கொளாநல்லி, ஊஞ்சலூர், வெங்கம்பூர், கொடுமுடி போன்ற பல ஊர்களில் புதிய கோயில்கள் பல கட்டப்பட்டன. பழைய கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டன. கொடைகள் பல அளிக்கப் பட்டன. விழாக்கள் விரிவாக நடத்தப்பட்டன. கல்வெட்டுக் களும் பொறிக்கப்பட்டன.

அந்தணர்கட்கு அக்கிரகாரங்கள் பல ஏற்படுத்தப் பட்டன. அவர்கட்குக் கொடையாகப் பிரமதேய நிலங்கள் அளிக்கப்பட்டன. அக்கிரகாரம் என்ற ஊர்ப்பெயரும், பட்டவர்த்தி என்ற நிலப்பெயரும் வழங்குவது இதற்கு எடுத்துக்காட்டாகும். பலர் பூந்துறை நாட்டின் பல பகுதியி லிருந்து கால்வாய்ப் பகுதிக்குப் புதியவர்களாகக் குடியேறி னர். கால்வாய்ப் பகுதி மக்களுடன் பூந்துறை நாட்டின் பிற பகுதி மக்கள் அங்குள்ள செல்வச் செழிப்பின் காரண மாக உறவு கொள்வதில் ஆர்வம் காட்டினர்.

கால்வாய்க் கரையில் உள்ள ஊர்கள் மிகுதியான செல்வவளம் பெற்றன. பொருளாதாரப் புழக்கம் மிகுதி யாக ஏற்பட்டது. ஈரோட்டில் தென்னகத்திலேயே மஞ்சள் வணிகம் சிறந்து விளங்குவதற்குக் காலிங்கராயன் கால்வாய் முக்கியக் காரணம் என்பது யாவரும் அறிந்த உண்மை யாகும்.

ஈரோடு செல்வச் செழிப்புற்று வாணிகம் மிகுதியாகப் பெருகுவதற்கும், காலிங்கராயன் கால்வாய்ப் பகுதிமக்கள் பலர் ஈரோட்டில் குடியேறி அதன் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் மூல காரணமாக அமைவதற்கும் கால்வாய் வளமே காரண மாக அமைந்தது.

கால்வாய்ப் பகுதியில் ஆலயங்கள் பெருகவே விழாக்கள் மிகுதியாக நடைபெற்றன. வாத்தியக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், சமயச் சடங்கு, ஆலய வழிபாடு நடத்துவோர்

நன்கு ஆதரிக்கப்பட்டனர். அதனால் கலையும், சமயமும், சிற்பமும் பெருகியது.

புலவர்கள் பலர் ஆதரிக்கப்பட்டனர். இலக்கியங்கள் பல எழுதப்பட்டன. கல்வி அறிவு பெருகியது. விவசாயத்துடன் பல துணைத் தொழில்கள் பெருகியது. விவசாயத் தொழிலாளர்கள் பலர் வளமுற வாழ்ந்தனர்.

மக்கள் வளத்துடன் வாழ்வாங்கு வாழ்ந்ததால் பல சமயத்தாரும், பல சாதியினரும் சமய, சாதிப் பூசல் இன்றி ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். இதனை இப்பகுதி வரலாறு சிறப்புடன் கூறுகிறது.

சைவ வைணவக் கோயில்கள் ஒரே தன்மையில் ஏற்றத் தாழ்வின்றி ஆதரிக்கப்பட்டன. பல கல்வெட்டுக்கள் சிவமயம் என்று தொடங்கி ராமஜெயம் என முடிவுற்றது. வேட்டுவர் வேளாளர் ஆகியோர் ஊர்ச்சபைகளில் ஒன்றாக இயங்கிக் கோயில்கட்கும் ஒற்றுமையுடன் கொடைகள் அளித்தனர். கொங்கு வேளாளர் காணித் தெய்வங்கள் பல திருப்பணிகள் செய்யப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றன.

*10-11-1800* இல் கொடுமுடிக்குப் பகுதி வருகை புரிந்த புக்கானன் 'இந்தியாவிலேயே நான் பார்த்த இடங்களில் இப்பகுதி மிகவும் அழகு வாய்ந்தது' என்று பாராட்டும் அளவுக்கு இப்பகுதியை வளமாக மாற்றியது காலிங்கராயன் கால்வாயே ஆகும்.

பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை வளப்படுத்தி ஆயிரக் கணக்கான மக்களை வளத்துடன் வாழச் செய்யும் புனிதன் புகழோன் காலிங்கராயன் கட்டிய அணையும் வெட்டிய கால்வாயும் என்றும் வளம் பெருக்கி அன்னைபோல் அணைத்தூட்டி வாழவைப்பதாகுக!

வாழ்க காலிங்கராயன் புகழ்!

பிற்சேர்க்கை எண்—1

# காலிங்கராயன் கல்வெட்டுக்கள்

## திங்களூர் அழகப்பெருமாள் கோயில் தெற்குச்சுவர்க் கல்வெட்டு

ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு மூன்றாவது ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் குறுப்பு நாட்டுத் திங்களூர் சுந்தரபாண்டிய விண்ணகரம் பெருமாள் கோயில் திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் நம்பிமார்களுக்கும் இந்நாயனார்க்கும் அமுதுபடியுள்ளிட்டு வேண்டும் வெஞ்சனங்களுக்கும் இந்நாட்டுத் தாளூன்றி நீர் நிலத்துக்கும் புன்செய்க்கும் இறுக்கும் கடமை ஒட்டச்சும் காலும் கலமும் நத்தவரியும் அந்தராயகாணம் உப்பாயம் தறியிறை உள்ளிட்ட மேலிறை கீழிறையும் எண்ணெயும் காணியுஞ் சாமந்த வேண்டுகோளும் குற்ற தெண்டமும் எலவை ஒகவை மற்றும் எப்பேர்ப்பட்டனவும் உட்பட தந்தோம் இந்நாயனார் அழகப் பெருமாளுக்கு இப்படிக்கு சந்திராதித்தவரை செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டி இவ்வூர் குடியேற்றிக் கொள்க இப்படிக்கு காலிங்கராயன் எழுத்து.

## விசயமங்கலம் நாகேசுவரசுவாமி கோயில் மகாமண்டபம் வடபுறச் சுவர்க் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரிமேல் கொண்டான் ஸ்ரீ வீரபாண்டிய தேவனேன் எமக்குச் செல்லா நின்ற யாண்டு அஞ்சாவது சகரை யாண்டு ஆயிரத்திரனூத் திரண்டு பெறட்டாசி மாதம் முதல் குறுப்பு நாட்டு விசய

மங்கலத்து ஊரும் ஊராளிகளுக்கும் தங்களுடைய வாகைப் புத்தூரில் வடக்கு வாகசைலில் வாகைக்குளம் நெடுநாள் பாழ்பட்டுக் கிடக்கிறதாகக் கேட்டோம் இக்குளம் தங்களூர் நாயனார் திருநாகீசுரமுடையார் திருக்காமக் கோட்டத்து ஆளுடை நாச்சியர்க்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட வெஞ்சனம் பலபடி நிமந்தத்துக்கு இக்குளம் வீரபாண்டியப் பேரேரி எனவும் இக்குளமும் இக்குளக்கீழ் நிலமும் நீர்யேறிட மெல்லாம் இறையிலி தேவதானமாக விடுக எனத் தோண்டும் வாரம் குடுக்கப் போதுவார்களாகவும் இக்குளக் காலுள்ள அழிவு சோர்வு தாங்களே செய்வார்களாக இப்படி சந்திராதித்தர் வரை செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டி அனுபவிக்கக் கடவதாக நம் ஓலை குடுத்தோம். இப்படியே நந்தமர்ப்பாறபடுத்திக் கொடுக்கவும் இது பன்மாகேஸ்வரர் ரட்சை இவை காலிங்க ராயன் எழுந்து......இத்தர்மம் இறங்கப் பண்ணினவன் வழி வழி யேழெச்ச மறுவான்.

## நெரூர் அக்கீனீசுரர் கோயில் தென்புறத்து மதில் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கிரவர்த்திகள் கோனே ரின்மை கொண்டான் கிழங்கு நாட்டு நெரூரான வீர சோழச் சதுர்வேதிமங்கலத்து உடையார் திரு அக்கினீசுர முடைய நாயனார் கோயில் தானத்தாருக்கும் இந் நாயனாருக்கும் அமுதுபடி உள்ளிட்டு வெஞ்சனங்களுக்கும் தை மாதத்து நம் பிறந்த நாளில் தீர்த்தம் பிரசாதிக்கக் கட்டின திருநாளுக்கும் இந்நாட்டில் நெடுநாள் பாழ்பட்டுக் கிடந்த வழிப்போக்கி நத்தமும் நான்கெல்லைக்குட்பட்ட நீர்நிலமும் நன்செய் புன்செயும் நத்தமும் தோட்டமும் குளமும் குளப்பரப்பும் உள்பட்ட நிலத்தில் பழந்தேவதானம் பள்ளிச்சந்தம் நீக்கி நின்ற நிலம் ஒட்டச்சு ஆராய்ச்சி நத்தவரியும் மண்டல முதன்மை சந்தி விக்கிரகப் பேறுவரியும் மார் வினியோகமும் எலவை உகவை காணிக்கை காலிங்க

ராயன் வினியோகமும் ஓலைச் சம்படம் அணியில் பொன்வரி யும் வேளைக்காரன் சிரக்காரன் கார்த்திகைப்படியும் சானங் கண்மையும் நல்லெருது நற்பசு காணம் நெய் எண்ணையும் உப்பாயம் தறியிறை செக்கிறையும் தட்டொலிப் பாட்டமும் ஈழம் புஞ்சையும் பாமைக்காணம் கீழிறை தோலொட்டும் மன்றுபாடு தெண்டங்குத்தமும் மத்தும் எப்பேர்ப்பட்ட வரி களும் உள்பட்டது பன்னிரண்டாவது மாசி மாதம் முதல் தேவதானம் இறையிலியாகத் தந்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு நான்கெல்லையிலும் திரிசூலக்கல்லு நாட்டி சந்திராதித்தவர் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொண்டு கச்சிராய நல்லூர் என்று குடியேற்றிக் கொண்டு அனுபவிக்க இவை காலிங்க ராயன் எழுத்து... யாண்டு 12 நாள் 256...அக்கினீசுரசுவாமி துணை.

## எலத்தூர் சோழீச்சுரர் கோயில் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்தி கோனேரிமை கொண்டான் வட பரிசார நாட்டு எலத்தூரு ஊரார்கள் தங்களூருடையாருக்கும் சோளீஸ்வரமுடையாருக்கும் தான் தோன்றீஸ்வரமுடைய நாயனார்க்கும் சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் வெஞ்சனங்களுக்கும் இவ்வூர்க் கொளம் உடைகுளம்..யிருந்தபடியிலே பத்தினால் சித்தார்த்தியாண்டு முதல் குளம் அடைத்துத் திருத்தி பயிர்செய்து பயிர் செய்யு மளவில் திருத்தின நிலத்துக்கு யி...டை...அந்தராயம் இலவை உகவை காணிக்கை மற்றும் எப்பேர்ப்பட்டனவும் இந்நாள் முதல் யிறையிலியாகக் கொண்டோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொண்டு கொளம் அடைத்துத் திருத்தி பயிர் செய்து கூடிய நிலங்களை கொளத்தைத் தானமாக அனுப வித்துக் கொள்ளவும்...காலிங்கராயன் எழுத்து ஆண்டு 14 நாள் 250.

## சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவேசுரர் கோயில் அர்த்தமண்டபம் தென்புறம் பட்டிகைவரிக் கல்வெட்டு

ஸவஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரி மேல் கொண்டான் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு ஆண்டு இருபத்தி நாலாவது வீரசோழவளநாட்டு முகுந்தனூருடைய குரக்குத் தளி ஆளுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இந் நாயனார்க்கு அமுதுபடிக்கும் திருநாள் படிக்கும் திருப்பணிக் கும் வேண்டும் வெஞ்சனாதிகளுக்கும் திருமடை விளாகத் துக்கு மேற்கில் நல்லாட்டுக்குளம் அனாதி பாழ்பட்டுக் கெடக்கையில் யிக்குளமும் நீரேறிப் பாயும் நிலமும் திருநாமத் துக்காணியாகக் குடுத்தோம் இதுக்கு இறுக்கும் கடமையில் நிலவச்சு மற்றும் யெப்பேர்ப்பட்ட வரிகளும் கழிச்சுக் குடுத்தோம் யிப்படிக்கு இவ்வோலை பிடி பாடாகக் கொண்டு சந்திராதித்தர்வரை செல்வதாகச் செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்க...இப்படிக்கு காலிங்கராயன் எழுத்து இவை பெருமாள் வீரராசேந்திரச் சோழச் சக்கர வர்த்தி எழுத்தின்படி சிலவு அழிக்க இது பன்மாகேஸ்வரர் ரட்சை இந்த தர்மத்துக்கு விகாதம் பண்ணும் பேர்கள் னாளை நசிச்சு போவார்கள்.

## குன்னத்தூர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் குறுப்பு நாட்டுக் குன்றத்தூர் இலட்சுமி நாராணப் பெருமாள் வீரபாண்டிய விண்ணகரம் பெருமாள் கோயில் திருப்பதியாருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் இந் நாயனாருக்கு அமுதுபடி உள்ளிட்ட வேண்டும் வெஞ்சனங் களுக்கும் இந்த நாட்டில் காடு பிடித்து அழித்துக்கொண்டு நாடாக்கின வெள்ளிரவெள்ளி நான்கெல்லைக்குட்பட்ட நீர் நிலமும் காடும் குளமும் குளப்பயிராய் உள்பட்ட நிலத்தில்... சந்திராதித்தர்வரை செம்பிலும் சிலையிலும் வெட்டிக்

கொண்டு குடியேற்றி அனுபவிக்கவும் இவை காலிங்க ராயன் எழுத்து.

## கொடுமுடி அம்மன் சந்நிதி கருவறைக் கல்வெட்டு

......திருப்பாண்டிக்கொடுமுடியாளுடைய நாயநார்க்கு தேவஸ்தானம் விதரியான திருச்சிற்றம்பல நல்லூரில் வெள்ளைக்குளம் வரகுணன் நெறையுங்காலம் ஒடைவு குலைவுபட்டு இப்பறம் கெடக்கையில் அடைத்து நீர்நிலம் பயிர்செய்யும் அளவில் பண்ணிரண்டு அடிக்கோலால் அயினூறு குழிகொண்டது ஒரு மாவாக திருப்பாண்டிக் கொடுமுடியில் பல நாயனார்க்கு விதரியான திருச்சிற்றம்பல நல்லூர் நாயனார்க்கு முற்றூட்டு கையில் நெலம் இருபது மாவும் திருப்பாண்டிக் கொடுமுடியாருக்கு விதரியான திருச்சிற்றம்பலநல்லூர் நாயனார்க்கு இவை இறையீ விக்குட்பட்ட நிலம் நாலு மாவும் மேல்கரை அரைய நாட்டாருக்கும் நகரத்தாருக்கும் இறையிலி நீக்கி இவ்வூர் குடிநீங்காத் தேவதானமாக திருப்பாண்டிக் கொடிமுடி யாருக்கும் விதரியான திருச்சிற்றம்பல நல்லூர் உடையார்க் கும் இறையிலி தேவஸ்தானமாகக் குடுத்தது யாண்டு ஆறாவது நாள் முப்பத்தாறாவது இவை சுந்தரபாண்டியக் காலிங்கராயன் எழுத்து.

## வெஞ்சமாங்கூடலூர்க் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள் ஸ்ரீ குல சேகர தேவர்க்கு யாண்டு நாலாவது வைய்யாசி மீ 25 தேதி ஆளுடையார் திருவெஞ்சமாங் கூடலூர் ஆளுடைய நாயனார்க்கு கோயில் ஆதி சண்டேசுவர தேவர்களுக்கு கோயில் கணக்கு ஸ்ரீ காரியஞ் செய்வார்க்கு விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது தட்டையூர் நாட்டு நெடுநாள் பாழ்பட்டுக் இடந்த நத்தம் பூத்துரை செல்லவான கண்ணப்ப நல்லூருக்கு

எல்லை துறையூருக்கு வடக்கு இந் நான்கெல்லையும் எல்லைக்குட்பட்ட நிலமும் நஞ்சையும் புஞ்சையும் நத்தமும் குளமும் குளப்பரப்பும் கீழ்நோக்கிய கிணறும் மேல்நோக்கிய மரமும் இதில் எப்பேர்ப்பட்ட வரியும் மண்டல முதல் மகமையும்......வைய்யாசி முதல் தேவதானமாக இறையிலி யாகத் தந்தோம்......யாண்டு 4 நாள் 267...இவை காலிங்க ராயன் எழுத்து.

## பிற்சேர்க்கை எண்—2

# காலிங்கராயன் அணை கட்டின பட்டயம்

ஸ்ரீமது சுபநமஸ்து ஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் பாசைக்கி தப்புவராத கண்டன் ஆரிய தள விபாடன் ஆரிய மோகந்தவிழ்த்தான் துலுக்கர் தள விபாடன் துலுக்கர் மோகந் தவிழ்த்தான் தொட்டிய தள விபாடன், தொட்டிய மோகந் தவிழ்த்தான் ஒட்டிய தள விராடன் ஒட்டிய மோகந் தவிழ்த்தான் பலநாவுக் குறைவராத கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாத கண்டன் வினவிசை கனவிசை ஈழமும் ஆழமும் ஒரப்பான் பட்டணமும் ரதபதி கெசபதி அசுவபதி நரபதி நால்வகைப் படைமோடுங்கூடி கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசமார்த் தாண்டன் ராசகுல திலகன் ராசகெம்பீரன் நாடாளு நாயகன் றாட குலதுங்கன் பூலோக தேவேந்திரன் ஆரண முறையார் ஆறிலொன்று கடமை கொண்டு ஆடுங்கடைமணி நாவசையாமல் அரசாளும் கரிகால் சோழன் மகாராசாவய்ய ரவர்கள் யகமகிழ்ந்து கொடுக்கும் மக்கள் முறையும் தரிப்பான நன்மையும் பொருந்தியிருத்தியிருந்தபடியினாலே பொன்ஊஞ்சலும் பூந்தேரும் பூச்சக்கரக் குடையும் பெற்றருளிய கங்கா குல திலகன் காராள சிரோமணி மேழிக் கொடியோன் மின் குவளை மாளிகை மார்பன் நாற்பத்தி யெண்ணாயிரம் கோத்திரத்துக்கும் முதன்மையாயிருக்கும் கொங்கு தேசத்துக்குச் சேர்ந்த தென்கரை நாட்டு செட்டி வேணாவுடையான் நரையநாடு காசிப கோத்திரம் பிரமியணபிள்ளை பொங்கலூரு தெய்வசிகாமணி பூந்துறை நாடு வாரணவாசி வெள்ளோட்டுக் கனகபுரம் நஞ்சையன் ஆருநாட்டு மசக்காளி வேலணன் குருப்பை நாட்டு ரகுநாதணன் ஒடுவெங்கநாடு முத்துவேலப்பன் நல்லுருக்கா நாடு வானவராயன் வாரக்க நாடு பொங்கணன் காவுலுக்கா

நாடு உடையணன் எங்களைப் பத்துப் பேரையும் காங்கய நாட்டுச் சரவண காங்கேயன் பார்த்துச் சொன்ன வசனம் கனகபுரத்து நஞ்சையன் மகன் லிங்கையன் வானியாற்றில் அணைகட்ட வேணுமென்று நம்மையுந் தாவுதுறை பார்த்து வரச் சொல்ல வேணுமென்று யீரோட்டுக்கு யெங்களை அழைத்துக்கொண்டு போய் வானியில் தாவுதுறை அணை கட்டுகிறதற்குப் பார்த்த இடத்தில் வெள்ளோட்டிலிருக்கும் வெள்ள வேட்டுவன் பாளையக்காரன் யென்னுடைய எல்லையிலே தாவுதுறை பார்க்கிறதென்ன அணை கட்டு கிறோமென்று பேசுகிறதென்ன நீங்கள் அணைகட்ட வேண்டாமென்று பிலத்துடனே மறித்தான்.

அதன் பிறகு நாங்கள் பத்துப் பேரும் ஈரோட்டுக்கு வந்து அதுக்குத் தக்கின சோமாசிகளை அனுப்பிவச்சு வெகு பிரீதியுடனே சொல்லக் கேளாதபடியினாலே இவனுடைய கெருவத்தையடக்கி அந்தத் தாவில் அணை கட்டாமல் விட்டுப் போறதில்லையென்று பிரதிக்கிணை செய்து அவையஸ்தங்குடுத்து ரண்டு மூணு மாச வரைக்கும் அவனுடனே சண்டை செய்து யெங்களினாலே செயிக்க மாட்டாமல் எழச்சுப் போயிருக்கும் வேளையிலே எண்ணை மங்கலம் பதியிலேயிருக்கும் காளியண்ணன், மதுரைக்குப் போய் சமஸ்தானம் ஆளப்பட்ட உக்கிர குமார ராசா சமூகத்துக்குப் போயி வெகுமதியும் கட்டக்கயிரும் வெட்ட வாளும் துஷ்ட சம்மாரமும் சிஷ்ட பரிபாலனமும் செய்து கொண்டிருக்கச் சொல்லி வரப்பிரசாதம் வாங்கிக்கொண்டு ஆனைமலை நாட்டு பாளையப்பட்டு செங்கோல் செலுத்திக் கொண்டு இருக்கிற நாளையிலே நாங்கள் பத்துப் பேருங்கூடி காலிங்கராயனை ஆனைமலைக்கு அனுப்பிவிட்டு காளி யணனை யீரோட்டுக்கு வரவழைத்து வெள்ளவேட்டுவன் விருத்தாந்தமெல்லாம் வழிவிபரமாய்ச் சொல்லி அவனைச் செயம்பண்ணி அந்த ஆற்றில் அணை கட்டுகிறபடிக்குச் செயிச்சுக் கொடுக்க வேணுமென்று மெத்தவும் பத்துப் பேருங்கூடி வெகுவிதத்திலே கேட்டுக் கொண்டதுனாலே

நல்லது என்று சம்மதிச்சு அந்த வெள்ளவேட்டுவன் இருக்கும் வெள்ளோட்டுக்கு ஒருரவு கொண்டு போயி அவன் ஊடை யத்தையும் தகர்த்து ஊரையும் கொள்ளைப்பண்ணி சிறிது ராணுவங்களையும் வெட்டி அவன் தலையும் வெட்டிக் கொண்டு வந்து எல்லோரும் காணத்தக்கதாயி வப்த்தபடி யினாலே நாங்களிருபத்துநாலு நாட்டாருங்கூடிச் செட்டி வர்த்தகங்கள் பலபட்டரைச் சாதிகளையும் வரவழைத்து நம்ம சனங்கள் மேற்கு நல்லூருக்கா நாடு ஆனைமலைநாடு காவிலுக்காநாடு வாரக்கநாடு ஆருநாடு குருப்புநாடு ஒடுவங்க நாடு யிந்த ஏழு நாட்டுலெயும் சீவார்த்தனஞ் செய்ய வேண்டிய நிமுத்தியமாக பரந்து போயிருக்கும் சனங்கள் அந்தந்தச் சாதிகளுக்குண்டான வரமுறைமை தாய் தகப்பனுக்கு அமுதுபடையாதவன் புருசன் பெண்சாதியை முடுக்கிவிட்டவன் பெண்சாதியானவள் புருஷன் வார்த்தைக்கு ஏறுமாறாகப் பேசினவள் ஒருத்தருக் கொருத்தர் மித்துருபேதம் செய்கிற பேர்கள் இப்படி நாலு விதமாயி முறைமை தப்பி நடவாமல் தரும நீதமாய் நடக்கும்படிக்கு இருபத்திநாலு நாட்டாருங்கூடி செட்டி வர்த்தகர்களும் பலபட்டரைச் சாதிகளும் சம்மதிச்சு காளியணனுக்கு சாதிப்பட்டயம் நேமுகம் செய்துகொடுக்க வேணுமென சகலமான செனங்களும் அனைவருங்கூடி யீரோட்டுக் கொங்கிலியம்மன் சன்னதிக்குப் போயி அம்மனுக்குப் பதினாயிரம் பழம் நெய்வேதினஞ்செய்து பின்பு காளியணனுக்குச் சாதிப் பட்டயங் குடுத்தபோது பொங்கலூரு நாட்டு தெய்வசிகாமணி வந்து இந்தப் பட்டயம் எனக்குச் சேர வேணுமென்று மரித்துச் சொன்னான் நல்லதுயென்று தாராபுரம் பிரமியணன் சொல்லும் வசனம்—உங்கள் ரெண்டு பேர்படிக்குத் திருவுளச் சீட்டெழுதி அம்மன் பாதத்திலே வய்த்து ரெண்டு பேரையும் பார்த்துச் சுனையிலே ஸ்னாநஞ் செய்து அம்மனைப் பிரதட்சினை வலமாயிவந்து தெய்வசிகாமணி நான் முன்னமே எடுப்பேனென்று சமத்துச் சொன்னான்

சரவண காங்கேயன் சொல்லும் வசனம் நீ போயி இந்தப் பேர்ப் படிக்கி இந்தச் சீட்டு உன் கயிக்கு வந்தால் உனக்கே நேமுகஞ்செய்து முடிக்கிறோமென்று சொன்னார்கள்.

அப்போ கோவிலுக்குள்ளே அடியெடுத்து வைக்கவும் அம்மன் மடியிடையில் வயிலாயிருந்து ஒரு நீர்ச்சர்ப்பம் வடமுகாக்கினி போலும் சீறிக் கோபித்தெழுந்தது கண்டு பயந்து நடுநடுங்கி பிரண்டு கொண்டு பின்னிட்டுவந்து சோபந்தட்டி மயங்கி விழுந்தவனை காளியண்ணன் எடுத்து மார்போடணைத்து நெஞ்சத்தட்டி அம்மனைத் தியானிச்சு தண்ணீர் முகத்துக்கெரச்சு பயத்தை நிறுத்தி அவன் மனசைத் தைரியப்படுத்திப் பண்ணினான்.

அதன் பிற்பாடு பத்துப் பேருங்கூடி காளியண்ணனை உன் பேர்ப்படிக்கிச் சீட்டு எடுத்துதரச் சொன்னார்கள். அதன் பிறகு சுனையிலே ஸ்நானஞ் செய்து அம்மனை வலப்பிரதட்சிணமாய் சுத்திவந்து கோவிலுக்குள் புகவும் நாகசர்ப்பம் கோவம் மாறி மாயமாய்ப் போய்விட்டது. அதன்பிறகு அம்மன் பாதத்திலேயிருந்த திருவுளச்சீட்டு எடுத்து வந்து பத்துப்பேருங் காணத்தக்கதாகச் சபையிலே வைத்தான் பத்துப் பேரும் சீட்டெடுத்துப் பார்த்து உன் பேருபடிக்குச் சீட்டுயிருக்குதென்று அனைவருங்கூடிச் சொன்னார்கள்.

யெண்ணை மங்கலத்திலேயிருக்குற ஆனைமலை காளியண்ணனுக்குச் சாதிப் பட்டயங்குடுத்து பாகுபச்சடமும் ரெட்டப்படி பாக்கு வெத்திலையும் குதிரை குடை தீவட்டியும் ஒத்தைக் கொம்பும் ஒத்த கும்பமும் மகப்பட்டையும் கட்டக்கயிறும் வெட்ட வாளும் அடிக்க ஆத்தி யாக்கையும் அஷ்டாவுக்காரமும் வேண்டிய விருதுகளும் அளியாத தருமமும் சிலா சாசின பட்டயம் அமைந்தது.

பிற்சேர்க்கை எண்—3

# காலிங்கராயன் கைபீது[1]

தாராபுரம் துக்குடி பொள்ளாச்சி தாலுக்கா ஊற்றுக் குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டன் என்னப் பட்டவருடைய வமிசாவளி முதலான கைபீது என்ன வென்றால் :-

## பூர்வீகம்

பூர்வத்தில் சோழ தேசத்தில் தொண்டை மண்டலத்து வேளாளரென்று பேர் பிரசித்திப்பட்ட நற்குடி நாற்பத் தெண்ணாயிரம் பசுங்குடி பன்னீராயிரம் ஆக அரவதுனாயிர கோத்திரக்காரர்களில் பிற்காலும் ரிஷபகிரிச் சோளராசா மகளை மோரைச் சரிந்த சேரராஜா பாணிகிரகணம் பண்ணிக் கொண்ட படியினாலே சோளராசாவின் மகள் தனக்கு சீதனம் தன் தகப்பனாரைக் கேட்டுக் கொண்ட படியினாலே அந்தச் சமயத்தில் நற்குடி நாற்பத் தெண்ணாயிரம் குடியில் எண்ணாயிரம் குடி சீதனம் கொடுத்தபடியினாலே அப்போ வரப்பட்ட வேளாளனுக்கு தென் திசை நோக்கி வந்தபடியினாலே தென் திசை வேளாளர் என்று பேர்வரப் பட்டது.

## கொங்கில் குடியேற்றம்

சேர தேசத்துக்கு வரப்பட்ட வேளாளருக்கு சேரனுக்கு கொங்கரென்றும் பேர் இருக்கிற படியினாலே கொங்கு வேளாளரென்றும் கொங்கு இருபத்துனாலுநாடு என்றும்

---

[1]இதன் பிரதி தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ளது. இது அங்குப் பிரதி செய்யப்பெற்றது. எண். டி. 3044.

ஏற்படுத்தியிருக்கும் நாளையில் அக்காலத்தில் என் வமிசத் தானான காலிங்க கவுண்டன் என்கிறவன் பூந்துறை நாட்டுக்கு காணியாளனாய் மேல்கரை முப்பத்து ரெண்டு கிராமத்துக்குச் சேர்ந்த வெள்ளோடு குடியிருப்பு காரனுக்குத் தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்வர பாடகவல்லி நாய்ச்சியார் தேவஸ்தானம் சீர்னோத்தாரணம் பண்ணிக் கொண்டு இருந்தான்.

## அணை கட்டக் காரணம்

பூந்துறை நாட்டுக்கு நாட்டானாய் வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரனாய் இருக்கும் நாளையில் கங்கை குலம் சாத்தந்த கோத்திரம் காலிங்கக் கவுண்டன் என்கிற தன்னுடைய குமாரனுக்குக் கலியாணம் பண்ண வேணுமென்று நினைச்சு மாமன் மச்சுனனான பண்ண குலத்தாளி வீட்டிலே பெண் கேட்டுக் கலியாணம் செய்யத் தக்கதாக யோசிச்சு பெண் சம்மதமாகி அந்த ராத்திரி சாப்பிடுகிறதுக்கு சமையல் பண்ணுகிறவன் வந்து இவர் களுக்குச் சமையல் பண்ணுகிறதுக்கு எந்த அரிசி போடுகிறது என்று கேட்க்க, அவாள் கம்பு விளைகிற சீர்மையிலே இருக்கிற பேர்களுக்கு எந்த அரிசி என்று தெரியவா போகிறது பழ அரிசி தானே போடு போவென்று சொல்ல அது சேதி ஷ காலிங்கக் கவுண்டன் கேட்டு அவாள் வீட்டிலே சாப்பிடாதபடிக்கு இருந்து நெல்லு விளையும் படியாக நீர்ப்பாங்கு உண்டு பண்ணிக்கொண்டு உங்கள் வீட்டுப் பெண் கொண்டு சாப்பிடுகிரோமென்று சபதம் கோரிக்கொண்டு வந்து தன் ஊரிலே வந்து சேர்ந்து மனதிலே தனக்குத் தோணியிருக்கும் நாளையில் இவர் இஷ்டமான சர்வேசுரரைத் தன்னுடைய அபீஷ்டம் சித்தியாக வேணுமென்று நினைச்சு இருக்கும் வேளையில் இராத்திரி சொப்பனத்திலே ஒரு விருத்த பிராமண ரூபமாய் வந்து இந்த சர்ப்பம் போகிற வழியாக வாய்க்கால் வெட்டி வைக்கச் சொல்லி காரணமாக சொப்பனமாச்சுது. அந்தச்

சொப்பனமான உடனே கண் விழித்துப் பார்க்குமிடத்தில் ஒரு சர்ப்பம் பிரதிட்சமாக இருந்தது தான் கண்டு இருக்கப் பட்ட சொப்பனத்தைக் கண்டு அறிய வேண்டுமென்று நினைச்சு வீடுகட்கு வெளியிலே வந்த சமயத்தில் சர்ப்பம் இவனைக் கண்டு முன்னே நடந்தது அந்தச் சர்ப்பத்தைக் கண்டு தொடர்ந்து போய் இந்த வழியாகப் போகுதென்று அடையாளங்கள் போட்டுக் கொண்டு வருகிறபோது கொடுமுடி க்ஷேத்திரத்தில் சர்ப்பம் நின்றது.

## வாய்க்கால்

அந்தச் சர்ப்பம் போன போக்கிலே வாய்க்காலும் வெட்டி வைக்க வேணுமென்று நினைத்து பவானி ஆற்றிலே குறுக்க அணைகட்டி வைக்க வேணுமென்கிறதாக நினைத் திருந்த சமயத்திலே பவானிக் கூடல் ஸ்தானத்துக்கு மேல் புறத்தில் பவர்னி ஆத்துலே சர்ப்பம் குறுக்கே படுத்துக் கொண்டது. அந்த இடத்திலே அணை கட்டி வைக்க வேணுமென்று பவானி கூடலுக்கு வடக்கே ஹூராச்சிமலையும் தடமும் சுத்தக் கிரயத்துக்கு வாங்கி அணைகட்டுகிற சமயத் திலே வெள்ளை வேட்டுவர் என்கிற பாளையக்காரன் அணை கட்டுகிற எல்லை தன்னதென்று சண்டை பண்ணினமையாலே வெள்ளை வேட்டுவரை ஜெயிச்சு அணையும் கட்டி வெகு திரவியங்கள் செலவளிச்சு சர்ப்பம் போயிருந்த அடையாளங்களைப் பிடிச்சு வாய்க்கால் வெட்டி கொடுமுடி வரைக்கும் வாய்க்கால் வெட்டி வைச்சு பவானி அணை முதல் கொடுமுடி ஸ்தானத்துக்கு அத்து வரைக்கும் முக்காத வழி தூரத்துக்கு சர்ப்பம் போன போக்கிலே வாய்க்கால் வெட்டின ஏழுகாதவழி நடை கோணக் கோணலாக வாக்கியால் வெட்டி வச்சான்.

## பெயர்க் காரணம்

அந்தச் சர்ப்பம் போன போக்கிலே வாக்கியால் வெட்டி வச்சு பவானி ஆற்றிலே சர்ப்பம் படுத்துயிருந்த யிடத்திலே

அணையும் கட்டி வச்சபடியினாலே காலிங்கக் கவுண்டன் என்றும் பேர் வரப்பட்டுப் பிரிசித்திப்பட்டவனாய் இருக்கும் நாளையில் முன்னாலே சபதம் கோரியிருக்கப்பட்ட பண்ணை குலத்திலே தன் பிள்ளைக்குக் கலியாணம் செய்து கொண்டு அம்ச புருஷனாய் தெய்வ கடாட்சத்துனாலே சம்பத்துனாம தேயமான காலிங்கன் என்கிற நாமதேயமும் வேளாள சாதியானபடியினாலே கவுண்டர் என்கிற நாம தேயமும் ரெண்டு நாமதேயமும் சேர்ந்து காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் பிரசித்திப்பட்டவனாய் தான் கட்டி வச்ச அணைக்குக் காலிங்கக் கவுண்டன் அணையென்றும் காலிங்கக் கவுண்டன் வாக்கியாவென்றும் தான் உண்டு பண்ணின நீர்ப்பாங்கு நிலத்தில் விளையப்பட்ட காலிங்க நெல்லு யென்று விளையப் பண்ணி சம்பந்த பாந்தியங்களும் செய்து கொண்டு யிருந்தான்.

## நாவிதனுக்கு மானியம்

இப்படி வாக்கியால் வெட்டி அணைகட்டி பிள்ளைக்குக் கலியாணம் பண்ணுகுற வரைக்கும் சபதம் கோரி தீட்சை வளர்த்துக் கொண்டு யிருக்கும் சமயத்தில் தெய்வ கடாட்சத் தினாலே மனோபீஷ்டம் நிறைவேறியிருக்கும் சமயத்தில் ஒரு நாள் ஆயாசத்துடனே நித்திரை பண்ணிக் கொண்டு யிருக்கும் சமயத்திலே ஒரு நாசுவன் தீட்சை மயிரை வாங்கிப் போட்டு நிலைக் கண்ணாடியை எதிரே வச்சு வணக்கத்துடனே நின்று கொண்டுயிருந்தான். நித்திரை தெளிஞ்சு நிலைக் கண்ணாடி பார்த்தவுடனே ஆயுஷ் காரமாய் இருந்த படியினாலே சந்தோஷம் வந்து நாசுவனைப் பார்த்து உனக்கு என்ன வேணுமென்று கேட்டான். அந்த நாசுவன் என் பேர் விளங்கி இருக்கும் படியாக பண்ணவேணுமென்று மனுவு கேட்டுக்கொண்டான் தாம் கட்டி வச்ச அணையோரம் தாம் இருக்கப்பட்ட காலிங்கன் பாளையத்துக்கு தென்புறம் நாசுவன் பேராலே ஊரு உண்டு பண்ணி நாசுவன் பாளையம் என்றும் பேர்

விளங்கப் பண்ணி அந்த நாசுவனுக்கு அந்த பாளையம் சர்வ மானியமாகக் கொடுத்தார்.

இப்படிக்கு காலிங்கராய கவுண்டர் என்கிறபேர் பிரசித்திப்பட்டவராய் வெள்ளோட்டுக் குடியிருப்புக்கார ராய் பூந்துறை நாட்டுக்கு நாட்டாதிபத்தியத்தால் உண்டு பண்ணின அணை வாக்கியால் பரிபாலனம் பண்ணிக் கொண்டு பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் காலிங்கக் கவுண்டன் என்கிற நாமதேயம் உண்டானவர்களாய் இருந் தார்கள்.

## தெய்வமானான்

பவானிக் கூடலிலே காலிங்கராயன் என்கிறவன் அணை கட்டி வச்சு பேர் பிரசித்தி பண்ணினது கலியுகாப்தம் 2000. காலிங்க கவுண்டன் கட்டி இருக்கப்பட்ட அணையிலே ஷ கவுண்டனையும் சர்ப்பத்தையும் சிலாபிரதிமை ரூபமாக கல்வெட்டி வச்சு சிலா சாசனமும் எழுதியிருக்கிறது. அந்த அணை போட்டு இருக்கப்பட்ட இடத்தில் குடிகள் பரம்பரையாய் வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக் கொண்டுவருகிறது. வருஷப்பிரதியும் காலிங்கக் கவுண்டன் பிரதிமைக்கு பூசை நைய்வேத்யம் பண்ணிக்கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாண்மை விளைஞ்சு கொண்டு வருகிறது. இப்படி ஈஸ்வரர் அனுக்கிரகத்தினாலே மூர்த்திகரம் உண்டாகியிருக்கிறது.

ஈஸ்வர அனுக்கிரகத்துனாலே காலிங்க கவுண்டன் என்கிற அம்சை புருஷன் வம்ச பரம்பரையிலே காலிங்க கவுண்டன் என்று பேர் வச்சுக்கொண்டு வருகிறது.

## ஆனைமலை போன காரணம்

இப்படிக் காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் பிரசித்திப் பட்டவர்களாய் பலாட்டியனாய் வெள்ளோட்டு பூந்துறை நாட்டாதிபத்தியம் ஆண்டுகொண்டு வரும் நாளையிலே

கொங்கு இருபத்துநாலு நாட்டுக்கும் பட்டக்காரர்களா இருக்கப்பட்டவர்கள் சரி இருப்பும் சரி மரியாதிகளும் கொடுக்கப்படாது என்று சொன்னதினாலேயும் பூர்வத்திலே சேரமான் பெருமாள் சாத்தந்த கோத்திரக்காரர்களுக்கு காவிடிக்கை நாட்டு பிறவுத்வம் பண்ணிக்கொடுத்து இருக்கிற படினாலேயும் ராயட்டுப் பட்டக்காரர்கள் சரி மரியாதி நடக்க மாட்டாதென்று சொல்லிக்கொண்டபடியினாலே வெள்ளோடுவிட்டு மனவெறுப்பினாலே ஆனைமலை சருவுலே தங்கள் காணியாட்சியான காவிடிக்கா நாடு காடு கொண்டு வனமாய் இருந்த ஸ்தலத்தில் தங்கள் பசுமாடுகளை விட்டுயிருந்து மாடுகளை சம்ரட்சணை பண்ணுகிறதுக்காக தங்கள் ஜனங்கள் இருந்தபடியினாலே காவிடிக்கா நாட்டு வனத்து வந்து மாடுகளையும் பார்த்து மாடுகளுக்கு சம்ரட்சணைக்காகப் பட்டிகளும்போடுவிச்சு அஞ்சாறு சாலைகளும் கட்டிவிச்சு கொங்கு இருபத்து நாலு நாட்டுக் கும் பாளையப்பட்டுகளுக்கும் இவர்களுச்கெல்லாம் அதிக மரியாதைகள் உண்டு பண்ணிக்கொள்ளவேணு மென்று நினைச்சு ராய சமஸ்தானத்துக்குப் போனார்.

## ராயர் பேட்டி

ராய சமஸ்தானத்தில் காத்துக்கொண்டிருக்கும் நாளை யில் பண்ணிரண்டு வருஷம் வரைக்கும் ராயரவர்கள் பேட்டி யில்லாமல் கையிலே கொண்டு போன திரவியங்கள் எல்லாம் செலவழிந்து போய் கஷ்டப்பட்டுக்கொண்டு அதிவிசனத்தை அடைந்தவனாய் தன்னுடைய இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்துகொண்டு மன வயிரத்தை அடைஞ்ச வனாய் பெனுகொண்டைப் பட்டணத்துக்கு வெளியிலே தென்புறம் காளி கோவிலிலே போய் உசெத்திரமாகப் படுத்துக்கொண்டு இருந்தார்.

சுத்த உபவாசத்துடனே காளி கோவிலிலே இருக்கப் பட்ட காலிங்கக் கவுண்டன் சொப்பனத்திலே பன்னிரண்டா நாள் இராத்திரி ராயர் குமாரனுக்கு சித்தப் பிரமை பிடிச்ச

அது நிவாரணம் இல்லாமல் இருக்கிறபடியினாலே என்னுடைய சன்னிதானத்திலே இருக்கப்பட்ட விபூதியைக் கையிலே கொண்டுபோய் அந்தச் சித்தப் பிரமையாய் இருக்கப்பட்டவன் பேரில் போட்டால் சித்தப் பிரமை தீர்ந்து ராச குமாரனாக அரண்மனை போய்ச் சேர்ந்துயிருப்பான். ராயரவர்கள் உன்பேரிலே சந்தோஷமாய் உன் மனோ பீஷ்டம் சித்தியாகும் என்று சொப்பன மாச்சுது.

அந்தச் சொப்பனத்தைக் கண்டவுடனே பனிரெண்டு நாள் பட்டினி இருக்கப்பட்டவன் விபூதி யெடுத்துக்கொண்டு பெனுகொண்டா பட்டணத்துக்கு வந்து இது சொப்பனத்து சோதனை பார்த்துக்கொண்டு வருகுற சமயத்தில் ராசகுமாரன் பட்டணத்து வீதிகளிலே சித்த பிரமை பிடிச்சு தன்னப்போலே திரிகிற குறிப்பைக் கண்டு பிடிச்சு ராசகுமாரன் பேரிலே காளியை நினைச்சு விபூதி பேட்டான்.

அந்த விபூதி தூளி ராசகுமாரன் பேரிலே விழுந்தவுடனே சித்தபிரமை தெளிஞ்சவனாய் ராஜ சின்னங்களுடனே அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்.

அக்காலத்து நரபதி சிம்ஹஸ்னாதிபதியான பெனு கொண்டை விசய நகரம் ஆளப்பட்ட தேவராயர் அவர்கள் தம்முடைய குமாரனானவனுக்குச் சித்தப் பிரமை விடுதலை பண்ணினவனைத் தருவிக்கச் சொல்லி மந்திரி பிரதானி களுக்கு உத்தரவு செய்தபடியினாலே அந்த சமயத்தில் தரிவிச்சு ராயர் அவர்கள் ரொம்பவும் சந்தோஷத் தினாலே காலிங்கக் கவுண்டனைப் பார்த்து உன் சென்மப் பூமி முதலான விருத்தாந்தங்கள் என்னவென்று கேள்கு மிடத்தில் பவானி கூடல் சமீபத்தில் உண்டுபண்ணின அணை - வாய்க்கால் முதலான சங்கதிகளும் தெய்வ கடாட்சத்துனாலே காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் வழங்கப்பட்ட வரலாறும் கொங்கு இருபத்து நாலு நாட்டுலே பட்டக்காரர்களாய் சமானிடை...சி மரியாதிகள் தாள்வு நடக்கப்பட்டு சமுஸ்தானத்திலே காத்துக்கொண் டிருந்து காளிகாதேவி அனுக்கிரகமம் பண்ணின நாள்

வரைக்கும் வரலாறு அறியப்பண்ணிக் கொண்ட படியினாலே ராயர் அவர்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு உன்னுடைய நாமதேயம் என்னவென்று கேட்டார்கள். அப்போ பேர் அறியப் பண்ணிக் கொண்டபடியினாலே ராயர் அவர்கள் உத்திரவு செய்து எண்னுடைய வம்சம் உத்தாரம்பண்ணி இருக்கிறபடினாலே என்னுடைய பேர் தெய்வ கடாட்சத் துனாலே உண்டாகிய பேருடனே ராச கடாட்சத்துனாலே கொடுக்கப்பட்ட ராயச புத்தகத்துடனே காலிங்கராய கவுண்டன் என்று பேர் வச்சு உனக்கு என்ன வேணுமென்று கேட்டார்கள். அந்த சமயத்தில் என் காணியாட்சியான ஆனைமலை சரிவுலே காவிடிக்கை நாடு என்னபட்ட பூமியை தயவு செய்ய வேணுமென்று கேட்டுக் கொண்டார்.

## ராயரிடம் பெற்ற வரிசை

ராயவர்கள் கடாட்சம் செய்து சிபஹல்லா பல்லாக்கு, உபயசாமரம், சுருட்டி, சூரியபான், ஆலவட்டம், வெள்ளைக் கொடை, பச்சைக் கொடை, பஞ்சவர்ணக் கொடை, பஞ்சவர்ண வெட்டுப் பாவாடை, அனுமடால்—கெருடடால் மகரடால் பசவசங்கரடால் பஞ்சவர்ணடால், ஆனைமேல் பேரிகை ஒட்டைமேல் நகாரு, குதிரைமேல் டகாரி எருதுமேல் தம்பட்டம், தாரை, சின்னம் எக்காளம் பேரிகை சிக்கு மெளம் இது முதலான வாத்தியங்கள் பிருதுகளும் கொடுத்து ரண பாஷிகரம் கலிகிதுருயி முத்தொண்டி பஞ்சொண்டி, ஒண்டி ரேக்கு வீர சங்கிலினாக ககாணும் புலி செறமம் கரடி மயிர் வக்கிய பிரீதங்கனிகளம் வீர கண்டாமணி சாமதுரோகா வெண்டையம் தங்க பிஞ்சு இது முதலான ஆபரணங்களை யெல்லாம் அலங்கரிச்சு குதிரைக்கு புலித் தோல் மேல் மடக்கு அடை சல்லி முகசல்லி பக்க சல்லி கால் தண்டை கலிகிதுருயி இது முதலான ஆபரணங்களை தறீச்சு பட்டத்துக் குதிரையென்று நேமுகம் செய்து பட்டணப் பிரவேசம் பண்ணிவிச்சு ஆனைமலை சரிவிலே காவிடிக்கை நாட்டு பூமிக்கு நீயே மனச புதாரனாக ஆண்டு கொண்டு சந்திராதித்தியர் உள்ள வரைக்கும் வம்ச பரம்பரெயாய்

மனசபுதாரனாக ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வரவேணு மென்று பட்டாபிஷகம் செய்து பட்டத்து ஆயுதம் கையிலே கொடுத்து அறுபத்து நாலு அமரகாரை நேமுகம் செய்து இரட்டை வாள் பச்ச ஈட்டி, கரீட்டி, வெள்ளி ஈட்டி, தங்கக் கட்டு துப்பாக்கி வெள்ளி மூலாம் துபாகி சிறு மாறுடை இது முதலான ஆயுதங்களும் கொடுத்தார்கள்.

## பாளையக்காரன்

முன்னாலே நாடூர் பாளைப்பட்டு பட்டக்காரர்கள் சரிசமமான மரியாதை கொடுக்கிறது இல்லை என்று சொன்ன மனவெறுப்புனாலே ராய சமஸ்தானத்திலே காத்து இருந்து தெய்வ கடாட்சத்துனாலே சகல பிருதுகள் ஆயுதங்களும் உண்டாய் காவிடிக்கை நாட்டுக்குப் பாளையக் காரராக காலிங்கராயக் கவுண்டர் என்கிற பேர் பிரசித்திப் பட்டவனாய்ப்பட்டு கட்டியங்களுடனே புறப்பட்டு ஆனை மலைச் சரிவிலே வனாந்திரத்திலே தம்முடைய மாட்டுப் பட்டிகள் இருக்கப்பட்ட இடத்தில் சேர்ந்து அரண்மனையும் கட்டி வீடுகள் உண்டுபண்ணி பூர்வத்தில் வனத்திலே மாடுகளுக்கு ஆதாரமாகத் தோண்டியிருக்கப்பட்ட ஊற்றுக் குளிகள் இருக்கப்பட்ட இடத்தில் ஊரு கட்டிவிச்ச படியினாலே ஊற்றுக்குழி என்று கிராம நாமதேயம் உண்டாகி ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவனாய் இருந்தார்கள். ராயர் சமஸ்தானத் திலே காலிங்கராயக் கவுண்டன் என்கிற பேர் தெய்வ கடாட்சத்துனாலேயும் பாளையக்காரர் என்று பிரசித்திப் பட்டு பாளையப்பட்டு உண்டான நாள் முதல் சாலிவாகன சகாபுதம் 1120 முதல் சகாபுதம் 1702 வரைக்கும் 582 பட்டங்களுடைய வரிசைகளும் அவாளவாளுடைய சரிதை களும் இதன் கீழே எழுதி வருகிறது.

## பரம்பரை

வம்ச பரம்பரையாய் தெய்வ கடாட்சத்துனாலேயும் ராஜ கடாட்சத்துனாலேயும் காலிங்கராயன் என்கிற பேர்

வமுச பரம்பரையாய் பட்டக்காரர்களுக்குப் பேர் உண்டாகி வருகிறது.

தெய்வ கடாட்சத்துனாலே சர்ப்பம் போன போக்கில் வாக்கியாலும் வெட்டி வச்சு அணையும் கட்டி விச்சு காலிங்கனென்கிற பேர் பிரசித்திப்பட்டு வமுசாபிவிருத்தியிலே காலிங்கராயனென்கிறவர் காவிடிக்கா நாட்டுக்கு மனபுதாரனாயி காலிங்கராயனென்கிற பேராலே ஊத்துக்குளி பாளையக்காரர் என்று பட்டாபிஷேகம் அன்னாருடைய நாள்வரைக்கும் காலிங்கராயன் அணையென்றும் காலிங்கராயன் வாக்கியாலென்றும் பேர் பிரசித்திப்படலாச்சுது.

1. காலிங்கராயக் கவுண்டர் பட்டமாண்ட வருஷம் 50

2. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 40

3. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராய கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

4. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராய கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

5. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 19

6. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 21

7. இவருடைய தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 12

8. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

9. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 27

10. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 16

11. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 9

12. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 28

13. இவர் குமாரன் விருமாண்டக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 30

14. இவர் தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 11

15. இவர் குமாரர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

16. இவர் குமாரன் ஈசுரமூர்த்திக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 6

17. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 15

18. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 31

19. இவர் குமாரன் விருமாண்டக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

20. இவர் குமாரன் பிள்ளை முத்து காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 13

21. இவர் குமாரன் சின்னைய காலிங்கராயக் கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 19

22. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

23. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 30

24. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 29

25. இவர் தம்பி நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 12

26. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 29

27. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 2

28. இவர் தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 4

## முதல் பட்டம்

முதல் பட்டக்காரனாகிய காலிங்கராயக் கவுண்டன் நாளையிலே ஊத்துக்குளி புரமும் உண்டு பண்ணி ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய் கொங்கேளு சிவாலயம் முதலாகிய ஸ்ரீரங்கம் சிதம்பரம் கும்பகோணம் மாயூரம் திருக்கடவூர் ஆவடயார்கோவில் ராமேஸ்வரம் தர்ப்ப சேணம் மதுரை பழனியாண்டர் பிரதட்சணமாய் இந்த பிரதீரத்து மஹா ஸ்தலங்களை எல்லாம் யாத்திரை செய்து அந்தந்த ஸ்தலங்களுக்கு தருமங்கள் தானங்கள் பண்ணி யாத்திரங்கள் தீர்ந்தவுடனே ஊத்துக்குழிக்கு வந்து ராய சமுஸ்தானத்திலே தமக்கு பிரசன்னமான இஷ்ட தெய்வத்தைக் கோரி பிரார்த்தனை பண்ணி அகத்தூர் அம்மனென்று நிதர்சனமாகப்பட்ட தேவாலயம் சீரணோதாரணம் பண்ணி அகத்தூர் அம்மனென்று பேர் பிரசித்தி படும்படியாய் பூஜை நெயிவேத்தியங்கள் செய்விச்சுக்கொண்டு ராய சமுஸ்தானத்திலே தனக்கு மனசபுதார யிலாவுக்குச் சேர்ந்த வாரக்கனாட்டு யெல்லை பள்ளத்துக்குத் தெற்கு நல்லுருக்கா நாடு பாலாத்துக்கு வடக்கு புங்குலுக்கே நாடு தானசாரை பள்ளத்துக்கு மேற்கு கம்பால துரை மணலியாறுக்கும் கிழக்கு இந்த நான்கெல்லைக்குட்பட்ட கீழ்மேல் நாற்காதம் தென்வடல் இருகாதம் இந்த அத்துக் காவிடிக்கா நாட்டு

காடுகளையெல்லாம் வெட்டி வச்சு அந்தந்தயிடங்களிலே நீர்ப்பாங்கு உண்டு பண்ணி வீடேத்தி ஊர்களும் உண்டு பண்ணிக்கொண்டு நஞ்சை புஞ்சை நிலங்களும் திட்டப் படுத்தி நாடு வூர் பாளைப் பட்டுக்களுக்கு அரண்மனையிலே அதிக மரியாதைகாரனாய் ஊத்துக்குளி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய் அதிதிறமைசாலி களாய் பிரபுத்துவம் பண்ணிக் கொண்டு வந்தார்.

## இரண்டாவது பட்டம்

முதல் 8வரை

ரெண்டான் பட்டக்காரனான நஞ்சய காலிங்கராயக் கவுண்டன் நாள் முதல் எட்டாம் பட்டக்காரனான காலிங்க ராயன் கவுண்டர் நாள் வரைக்கும் ஊற்றுக்குழி பாளையக் காரர் என்று பேர் பிரசித்திப்பட்டவர்களாய் வம்ச பரம்பரையாய்ப் பண்ணப்பட்ட தருமங்களைப் பரிபாலனம் பண்ணிக் கொண்டு அந்தந்த காலத்திலே ராய சமுஸ்தா னாதிபதிகள் கட்டளையிட்டபடிக்கு சமுஸ்தானத்திலே ஆஜரிலே இருந்து நடந்து கொண்டு மனசு புதாரனாய் பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

## கால்வழியினர்

ஒன்பதாம் பட்டக்காரனாகிய நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் நாளையில் அக் காலத்தில் பாண்டிய சிம்மாசனாதி பதியாகிய விசுவநாத நாயக்கர் எழுந்தருளியிருக்குற நாளையில் சமுஸ்தானத்துக்குச் சேர்ந்து இருந்து பாளையக் காரர்களையெல்லாம் பேட்டிக்குத் தருவிச்சு மதுரைக்குப் போய் இருக்கும் நாளையில் அக்காலத்து தட்சிண பிரதேசத் திலே திறன்னவல்லி சீர்மையிலே அஞ்சு கோட்டை போட்டுக் கொண்டு அஞ்சுராசாசளயென்றவாள் சமுஸ் தானத்துப் பிரபுக்களை நிராகரிச்சு யெதிர் பாளையம் போட்டுக் கொண்டுயிருக்கும் நாளையில் அந்த சமயத்தில் நாயக்கரவர்கள் உத்தரவுப்படிக்கு என் சமஸ்தான நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் சேன சேகரத்துடனே திர்ன்ன

வல்லி சீமைக்குப் போய் அஞ்சு ராசாக்களுடனே யுத்தம் செய்து ஒரு கோட்டையிலே இருக்கிற அஞ்சுராசா வெட்டிப் போட்டு கோட்டையைக் கைவசம் பண்ணிக்கொண்டு யெதிராளிகளையும் கொண்டுவந்து நாயக்கரவர்கள் சமஸ் தானத்திலே வைத்தார். அப்போ நாயக்கரவர்கள் 'நீ பராக்கிரமசாலி' என்று நிரம்பவும் சந்தோஷப்பட்டு தங்க னிகளத்திலே சுற தைத்து அதிலே தலைபோல பண்ணிப் போட்டு யெதிராளி தலையென்று காலுக்குப் போடுகுற பிறிதும் கொடுத்து பராக்கிரம நஞ்சய காலிங்க ராயக் கவுண்டர் என்று பேரும் கொடுத்து ஆடையாபரணங் கள் முதலான ஆபரணங்களும் கொடுத்து சகல வெகுமதி களும் பண்ணி மதுரை ஆஸ்தானக் கோட்டைக்கு அன்பத் தோரான் கொத்தளத்துக்கு தலமை வயிக்கும் படியாக நிகுதிசெய்து பாளையப்பட்டு கிராமங்களை சுத்த ஜாரியாக அனுபவிச்சுக் கொண்டு வரும்படியாக நிகுதி செய்தபடியி னாலே அந்த நாள் முதல் பதினெட்டாம் பட்டம் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் நாள் வரைக்கும் மதுரை சமஸ் தான கர்த்தராகிய நாயக்கரவர்கள் பரம்பரையிலே கட்டு பண்ணின நிகுதி தீட்டுக்கு அரண்மனைக்கு நடந்து கொண்டு வமிச பரம்பரையாய் பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

பத்தொன்பதாம் பட்டக்காரனான வீருமாண்டக் காலிங்கராயக் கவுண்டர் நாளையில் அக்காலத்தில் மைசூர் சமஸ்தானத்து மதுரை சமஸ்தானத்துக்கும் கனுவாஇக்கு கீள்ப்பட்ட கெடிகளுக்காக யுத்த சன்னாஹமாகயிருந்தார் கள்.

இருபத்து மூன்றாம் பட்டக்காரரான நஞ்சிய காலிங்க ராயக் கவுண்டர் நாளையில் கனுவாய்க்கு கீள்பட்ட கெடி கள் எல்லாம் மைசூர் சமஸ்தானத்துக்குச் சேர்ந்துயிருக்கும் நாளையில் அக்காலத்தில் மைசூர் சமஸ்தானத்துக் கர்த்த ராகிய இம்முடிராஜ உடையாரவர்கள் பேட்டிக்குப் போய் இருக்கும் நாளையில் அக்காலத்தில் மைசூர் சமஸ்தானத்

துக்குச் சேர்ந்த கொடகர் சமஸ்தானத்துக்கு யெதுத்துயிருக்கிற றகளையென்று யென் வம்சத்தார்களில் சனசேகரத்துடனே குடகு போகச் சொல்லி உத்தரவு ஆனபடியினாலே சனசேகரத்துடனே கொடகு ராஜாவின் பேரிலே போய் யுத்தம் செய்து ஜெயிச்சு வந்தார்கள்.

அப்போ மைசூர் சமஸ்தான கர்த்தாக்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு அஷ்ட கோண தண்டிகைக்கு தங்க முலாம் பூசியெட்டு கலசத்துடனே தண்டிகையுங் கொடுத்து ஆடையாபரணங்களும் கொடுத்து ஊற்றுக்குழி பாளையப்பட்டுக்கு அக்காலத்து சேர்ந்து இருந்த கிராமங்கள் ஒன்பதுக்கும் வருஷம் ஒண்ணுக்கு ராசகோபாலி 756 நிகுதி செய்து உத்தரவு செய்தார்கள். அந்த நாள்முதல் என் சகோதரரான நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்டு கொண்டு வந்த நாள் வரைக்கும் மைசூர் சமஸ்தானத்தார் கட்டளையிட்ட நிகுதிப் படிக்கு அரமணைக்கு நடந்து கொண்டு ஊற்றுக்குழி பாளையக்காரர் என்கிறவாளாய் பட்டம் ஆண்டு கொண்டு வந்தார்கள்.

பூர்வம் முதலாக என் வமுசத்திலுள்ள பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வரப்பட்டவர்கள் செவுறிய வுதார கெம்பீர குணாதிசயங்கள் உள்ளவர்களாய் இருந்து மற்ற பாளையக்காரர்களிலே அந்தந்த காலத்திலே அரமனைக்கு நிராகரிச்சுயிருக்கப் பட்டவர்களையும் தமக்கு யெதிரியாயிருக்கப்பட்டவர்களையும் மடக்கிக் கொண்டு ஊத்துக்குளியிலே கோட்டையும் பந்தோபஸ்தும் பண்ணிக்கொண்டு கால்தளம் அய்யாயிரம் நூறு குதிரை ஆயுதங்கள் வச்சு இருக்கப்பட்ட சனம் அய்யாயிரம் ஒரு கடகம் யானை இதுகளுடனே ஆனைமலை கானல்களிலே ஆனைகள் பிடிச்சு அரண்மனைக்குக் கொடுத்துக் கொண்டு அரமனையார் கட்டளையிட்டபடி நடந்து கொண்டு அரமனையார் கட்டளையிட்ட ஆனைமலை மாச்ச நாயக்கன் பாளையம் பாதிகாவலும் முன்னாள்

மூலை போதிக்கு ஒரு ரூபாயும் மகமை நடந்து வந்தபடியி னாலே அந்தப் பாதிகாவலும் மகமையும் அனுபவிச்சுக் கொண்டு அரமனையிலே கட்டுப்பண்ணின நிகுதி பணமும் செலுத்திக் கொண்டு ஆண்டு அனுபவித்துக்கொண்டு வரும் நாளையில் என் முப்பாட்டனார் நாளிலே பாதிகாவல் விட்டுட்டுப்போய் மலையாளத்து கோளிகூடு ராசாவின் பேரிலே யுத்த கனுகத்திலே யெலைபள்ளியிலே விளுந்து போய் விட்டார்கள் என் தோப்பனார் நாள் முதல் சுங்கம் மகமை நடந்து வந்தது.

என் தமையனார் ரெண்டுபேர் நாளையிலேயும் திப்பு சுல்தான் அங்காமி நாள் வரைக்கும் ஒரு நிகுதியில்லாமல் சில்லரை கள்ளர் அங்காமிகளுக்கும் தொந்தரைகள் பட்டுக் கொண்டு யிருந்தார்கள்.

பூர்வம் முதலாக வமுசாவளி முதலானதுகளுக்கு உண்டான ஆதாரங்கள் முதலானதுகளும் காலாந்திரங் க்ளிலே ராசீகங்களிலே கைசோர்ந்து போய்விட்டபடியி னாலே அகப்பட்ட பூர்வத்திய பளமுளி கிரந்தங் களினாலேயும் ஒளுகுகள்யாலேயும் பரம்பரையிலே அனுபவித்தகேள்வியினாலேயும் தெரிந்து கொண்டு கைபீது தெரியப்படுத்திக் கொள்ளலாச்சுது.

## கம்பெனி ஆட்சி

கலியுகாபுதம் 4891 மேல் செல்லாநின்ற விரோதிகிருது வருஷம் மாசி மாதம் 4 தேதி சுபதினத்தில் எனக்குப் பட்டமாய் குமாரசாமி காலிங்கராயக் கவுண்டர் என்னப் பட்ட பேர் விளங்கிக் கொண்டவனாகயிருந்து திப்பு சுல்தான் துரைத்தனத்தில் சில்லரை கள்ளர் தொந்தரவுகள் பட்டுக்கொண்டு இருக்கும் நாளையில் மகாராஜ ராஜஸ்ரீ கும்பினி துரைத்தனமாகிறது என்று ரொம்பவும் சந்தோஷத்தை அடைந்தவனாய் குஞ்சு குழந்தைகளை யெல்லாம் பெம்பாயி சீர்மையிலே வச்சுப் போட்டு நான் ஊற்றுக் குழியிலே ஹாஜரிலே காத்துக்கொண்டு கும்பினி

தயவு கோரியிருக்கும் நாளையில் சித்தார்த்தி வருஷத்திலே மகாராஜ ராஜஸ்ரீ பாலக்காட்டுக் கோட்டை மேஜர் கமாண்டர் இன்சீபு (ஜேம்சு) ரமலி சாயபு அவர்கள் மஹா ராஜராஜஸ்ரீ பெம்பாயி பவுசுதார்களுக்கு யெல்லாம் பெரிய சேர்வை துரைகளாகிய இற்றியொட்டு சாயபு அவர்கள் மகாராஜராஜஸ்ரீ செண்டறல் அட்டலி சாயபு அவர்கள் மேல் எழுதப்பட்ட துரையள் என் பேரிலே கடாட்சம் செய்து வந்த படியினாலே நானும் துரையள் கடாட்சயத்தும்படி நடந்து கொண்டு வந்தவனாய் இருந்தபடியினாலே என்னிடத்திலே பூரண தயவாகக் கடாட்சம் பண்ணிக் கொண்டு வந்தார்கள்.

மகாராஜராஜஸ்ரீ கும்பினி துரையள் கடாட்சம் செய்து யென் மான மரியாதிகளைப் பரிபாலனம் பண்ணி ஊத்துக்குழிக்குச் சேர்ந்த ஒன்பது கிராமமும் கண்டு முதலான பேரீஜுலே சாதலவார் சிப்பந்தி தவிர பத்தில் மூணு பாளையக்கார மிறாசு பத்தில் மூணு சாரி செய்துயிருக்கிறபடியினாலே சாதலவார் சிப்பந்தி தவிர பத்தில் ஏழு சருகாருக்குச் செலுத்திக் கொண்டு யென் பட்டத்து ஆயுதங்கள் தயவு செய்து இருக்கிறபடியினாலே ஊற்றுக்குழி பாளையக்காரர் என்ற பேராய் இருக்கிறேன்.

மகாராஜராஜஸ்ரீ கும்பினி துரையவர்கள் கடாட்சத்துக்குப் பாத்திரனாய் குமாரசாமி காலிங்கராயக் கவுண்டன் என்கிற பேர் உள்ளவனாய் என் வம்ச பரம்பரையிலே சம்ரட்சணை பண்ணப்பட்டவாளுடைய சந்ததியிலே சேரப்பட்ட அடுத்த சனம் சயிதமாய் முந்நூறு ஜனத்துக்கு அஹமனனியானியாய் காலட்சேபத்துக்கு மார்க்கமாய் நடப்பிவிச்சுக் கொண்டு துரையள் கட்டளையிட்டபடிக்கு நடந்துகொண்டு மஹாராஜ ராஜஸ்ரீ கம்பெனி துரையள் கடாட்சத்துக்குப் பாத்திரனாக இருக்கிறேன்.

ஊற்றுக்குழி காலிங்கராயக் கவுண்டன் ருசு
25 பங்குனி விஷ

பிற்சேர்க்கை எண்—4

# கும்பினிக் கடிதம்

ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டருக்கு 1798ஆம் ஆண்டு பாலக்காட்டுக் கோட்டை மேஜர் கமாண்டர் எழுதிய கடிதம்[1] :-

ஸ்ரீமன் சகல குண சம்பன்னரான சகல தர்ம பிரீதி பாலகனான பந்து சன சிந்தாமணியனான அகண்டித லட்சுமி பிரசன்னனான வெகுசன பரிபாலகனான நித்தியா தான விநோதரான மகா மேருவுக்கு சரிசமான தீரனான ம்கா-ா-ா-ஸ்ரீ ஊத்துக்குளி காலிங்கராயக் கவுண்டர் அவர்களுக்கு ராஜமானியராஜஸ்ரீ பாலக்காட்டுக் கோட்டை மேசர் கமாண்டர் சேம்சு ரமலீ சாயபு அவர்கள் மெத்தமெத்த சலாம்.

பெம்பாயில் பவுசுதாற மகாறாச ராஜஸ்ரீ றாசமானிய றாஜஸ்ரீ சகல பவிசுக்கெல்லாம் பெரிய சென்றல் அவர்கள் இற்றியோட்டு சாயபு அவர்கள்...ா......சென்டறால் அட்டலீ சாயபு அவர்கள் மலையாளத்துக்கெல்லாம் கமசல சாயபுதுரை அவர்கள் இவர்களெல்லாம் ஒருமனதாக யோஜனை செய்து நமக்கு அப்பணை தந்தார்கள் உங்களுக்குச் சொல்லச் சொல்லி உம்முடைய காரியத்திலே மெத்த மெத்த சந்தோஷமாய் தங்கள் மனசுலே யென்ன காரியம் வேண்டியிருந்தாலும் வெகுமானப் பட்ட இங்கிலீஷ கம்பெனிக்காரரோடே ராஜியாக இருக்க வேணும் சொல்லி யிருந்த பிரகாரத்துக்கு அதே மேரைக்கு நமக்கு அப்பணை யாச்சுது.

---

1. தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ள கடிதத்தில் நகல். எண். டி. 3045.

அது காரியத்துக்கு இப்போ சர்க்கார் காரியத்திலே தாங்கள் கும்பினிக்கு செய்து நடக்கவேண்டிய காரியத்துக்கு யிப்பச் சம்மதமான படியினாலே தாங்கள் அறியவேண்டி தங்களுக்கு தாக்கீதா எழுதியிருக்கிறோம். பின்னையும் நமக்கு அம்பணையான தலங்களுக்கும் தங்கள் வகையிலே தங்களைச் சேர்ந்த கவுண்டமாரும் தங்களுக்குச் சினேசித மாகயிருக்கிற கவுண்டமார் ஆனார் தங்களைச் சேர்ந்து இருக்கிறார்களோ அவர்களும் தாங்களுமாக கும்பினி சருகா றத்துக்கு எந்தப் பிரகாரம் குமுக்கு செய்வீர்களோ அந்தப் பிரகாரம் பிரயாசைப்பட்டு நடந்துகொள்ள வேணுமோ அந்தப்படி நடக்க வேண்டியது அந்தப்படி நடந்து கொண்டால் தங்களுட குமுக்கு வேண்டி தங்களுக்கும் தங்கள் குஞ்சு குளந்தையள் தங்கள் சீர்மையும் மோதலும் தங்களைச் சேர்ந்த கவுண்டமாரேயும் இதுக்கெல்லாம் தங்களுக்கு வேண்டி இங்கிலீஷ் கம்பெணி சர்க்கார் உங்களை வச்சு ரட்சிக்கிறாப்போலே நம்முடைய வசம் உம்மிட சீமையும் தங்களையும் கம்பெனி சர்க்கார் உள்ளவரைக்கும் ரட்சிக்கிறாப்போலே செய்து தருகிறோம். தங்கள் கையிலே எந்தப் பிரகாரம் ஆகுமோ. பாலக்காட்டுச் சேரியிலிருக்கிற ஜனத்தோடே கூடி தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங் களும் நமக்குத் துசுமனாக இருக்கிறவனை அலாக்கு செய்ய வேண்டுமோ அப்படிக்குச் செய்யவும் அல்லாதே போனால் திண்டுக்கல்லிலே பவுசுகளத்தோடகூட நிண்ணு தாங்கல் செய்விக்கிறதானால் செய்யவும் இல்லாதே போனால் பளனியிலே யிருக்கிற பவுசோடே கூடனின்று செய்யர தானால் செய்யவும் அல்லாதே போனால் தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களுமாக அவனையெந்த படியே சாரு செய்யவேணுமோ அந்தப்படி செய்யவும் மகா ராஜராஜஸ்ரீ சென்றல் இற்றியோட்டு சாயபு அவர்களும் றாசஸ்ரீ சென்டறால் அட்டலீ சாயபு அவர்களும் கமசல சாயபு அவர்களும் இவர்கள் முன்னதாக தங்களை யெந்தபடி பெரியவாக்கி வைக்கவேணுமோ அந்தப்படியாக்கி இருக்கிற படியினாலே தங்கள் காரியக்காரர் ஒருத்தர் நம்மண்டை

யிலே எந்நேரமும் பிரியாமல் காத்து இருக்கிறாப்போலே செய்யவும். சர்க்கார் காரியம் எந்த வேளை எந்தப்படி வருமோ? ஆனபடியினாலே தங்கள் மனுஷரைப் பிரியாமல் இருக்கச் செய்யவேண்டியது. தாங்கள் இவ்விடத்துக்கு எந்த வேளை வந்தாலும் தங்களைக் காணுகிறது மெத்த சந்தோஷம்.

ராஜ மானிய ராஜஸ்ரீ பாலக்காட்டுக்கோட்டை மேசர் கமாண்டர் ஜேம்ஸ் ரமலீ சாயபு.

*1798 மார்ச்சு—1*

13

SRI GOMATHI ACHAGAM
MADRAS-5 PH: 844554